
கல்கி



KALKI 1.11.1964 30காசு

கல்கி பொருளடக்கம்

வருக மழைத்தெய்வம்

கானம் இடிக்குரலில்
காட்சி ஒளிமின்னில்
வானம் வழங்குதிற
வாழ்த்தே மழைத்துளிகள்

காற்றின் எழில் அசைப்பில்
காடே நடனமிடும்
ஆற்றின் கரைபுரளும்
ஆக்கம் இனிப்பிறக்கும்


நாற்று அரும்பி வரும்
நடவு தொடர்ந்து வரும்
சோற்றுக் குறைதவிர்க்கும்
குரு வளித் தெய்வம்


—புலிவிற்கயற்கோடியோன்

குரோதி ஐப்பசி 16 — நவம்பர் 1

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




நான்காவது திட்டம்
ஜனநாயக
சோஷலிஸம்
மக்கள்
PK


'நெசவாளர் தறியில் குரங்கு புகுந்தாற்போல் உணவு வியாபாரத்தில் சர்க்கார் புகுந்து தொல்லை தருகிறது.' — ராஜாஜி
அரசாங்கம்
தனியார் உணவு வியாபாரம்
PK



மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 14

"ஸப் கோ ஸன்மதி தே பகவான்!"

சென்ற வாரம் தலைவர் ராஜாஜி உணவுப் பிரச்னை குறித்துக் கூறிய மொழிகள் நம் உள்ளத்தை உலுக்கின. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் நினைவு விழாவில் பேசியபோது ராஜாஜி, ''பிள்ளை அவர்களும், டி. கே. சியும் போய்விட்டார்கள். அவர்கள் பாக்கியசாலிகள். நான்தான் இன்னமும் உயிரோடிருக்கிறேன். மக்கள் 'க்யூ' வரிசையில் நின்று உணவுக்ருத் தவிப்பதைக் காணும் விதி எனக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்று மிக வருத்தத்துடன் கூறினார். வேறொரு கூட்டத்தில் பேசுகையில் ''உணவுத் துறையில் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கினால், தானகத் தானியம் தங்கு தடையின்றி சரஸமான விலைக்குக் கிடைக்கும். நான் சொல்வதைக் கேட்டுச் சர்க்கார் கன்ட்ரோல்களை நீக்கட்டும். அதனால் நல்ல விளைவு ஏற்படாவிடில் என்னைத் தூக்கில் போடட்டும்'' என்று அந்தரங்க ஆவேசத்துடன் கூறினார்.

ஆட்சியாளரின் காதில் இந்த வார்த்தைகள் ஏறி, அவர்கள் தைரியம் பூண்டு விதண்டாவாதத்தை விட்டு, தாங்களே சிருஷ்டித்த பஞ்ச நிலைமையை ஒழிக்க முன்வருவார்களா?

அரசாங்கம் போகிற போக்கைப் பார்த்தால் மிகவும் சந்தேகமாகத்தான் இருக்கிறது. கொட்டிலில் புகுந்து தானும் புல்லைத் தின்னாமல் மாட்டையும் தின்ன விடாமல் தடுத்த கதை நாய்போல் உணவு வியாபாரத்தில் சர்க்கார் குறுக்கிட்டு, அதிகார ஸ்தானம் பெற்றுத் தானும் நிலைமையைச் சமாளிக்காமல், வியாபாரிகளுக்கும் பொறுப்பை விடாமல் இடையூறு செய்திருக்கிறது. வியாபாரத்தில் திறமையற்றவர்களும், தகுதியற்றவர்களுமான சர்க்கார் சிப்பந்திப் பட்டாளத்தைப் பெருக்கி வரிப் பணத்தை அவர்களுக்கு வாரிவிடுவதால் உணவு விநியோகத்தைச் சீர்திருத்திவிட முடியுமா?

சர்க்கார் பகுத்தறிவோடு நடந்து வந்த காலம் பழங்கதையாகி, தன்னால் இயலாத காரியங்களை யெல்லாம் இழுத்துப் போட்டுக் கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ராஜ்யத்திலுள்ள அத்தனை ஜனங்களுக்கும் தேவைப்பட்ட அரிசியைச் சர்க்கார் வாங்கி விற்று, அதற்கான கொள்முதல் செலவு போட்டுச் சமாளிப்பது முடியுமா? வியாபார சமூகம் அரிசி விநியோகச் செலவு முழுவதையும் தானே சமாளித்து வந்தது. வியாபாரிகள் கையிருப்பைப் பாங்கிகளில் அடமானம் காட்டிக் கடன் வாங்கிவந்தார்கள். ஓர் அறுவடை காலத்திலிருந்து அடுத்த அறுவடை காலம் வரையில் தடையில்லாமல் தானியம் நகர்ப்புறங்களுக்கு வருவதற்கு உதவியாக இந்த அடமானக் கையிருப்பும், கடன் தொகையும் பக்குவமாகக் கையாளப்பட்டு வந்தன. ஆனால் சர்க்காரோ பாங்குக் கடன்களால் பணத்தின் செலாவணி அதிகமானதாகவும் இதனால்தான் விலை உயர்வு ஏற்பட்டதாகவும் எண்ணிக் கொண்டு பாங்கிக் கடன் வசதியைத் தடைசெய்து விட்டது. முடிவில் எல்லாம் ஒரே குழப்பமயமாகி, வியாபாரியின் திறமை வாய்ந்த ஏற்பாடும் போய், சர்க்காராலும் ஒன்றும் கையாலாகாமல் ஓர் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பிடி அரிசி பிச்சைக்கு 'க்யூ' வரிசையில் நிற்பதே இதன் நிகர விளைவு.

சர்க்கார் தானியக் கொள்முதல் செய்து இறக்கும் மூட்டைகளைப் புகைப்படம் பிடித்துப் பத்திரிகைகளில் பிரசுரிக்கலாம். அதே சமயத்தில் காமிராக்களின் வீச்சுக்

குள் அடங்காத அளவுக்கு கியூ வரிசைகள் நீண்டு கொண்டே போகின்றன. உழைத்துக் கூலி சம்பாதிக்க வேண்டிய ஏழைத் தொழிலாளிகளின் வேலை நேரமெல்லாம் கியூவில் விரயமாகிறது. குடும்பக் கார்டு என்ற பெயரில் ரேஷன் முறையைக் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டிருப்பது, பழைய அனர்த்தங்களை மீண்டும் முழுக்கக் கொண்டுவந்து விடும் கொடூரமான நடவடிக்கை. இந்த அமங்கலத் திட்டங்களை மக்கள் விரும்பவில்லை.

சர்க்காரின் காரியங்கள் அடிப்படையிலிருந்தே கோளாறாக உள்ளன. ஆளும் கட்சிக்கு வோட்டுப் போடுவதற்கென்றே ஒரு பிரிவினரை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தில் பெரிய நில உடைமைகளைத் துண்டு போட்டு நிதி வசதியற்றவர்களை நிலச் சொந்தக்காரராக்கினார்கள். நவீன உபகரணங்களில் முதலீடு செய்து விளைச்சலைப் பெருக்க அவர்கள் சக்தியற்றவர்கள். விளைச்சலைப் பெருக்கக் கூடியவர்கள் நில உரிமையை இழந்து, வேறு தொழில்களுக்குத் திரும்பிவிட்டார்கள். ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களுடைய பெரிய நிலஉடைமை கரும்பு சாகுபடிக்கு மாறிப் போகச் சலுகை உண்டாக்கி நெல் வெள்ளாமையைக் குறைத்து விட்டார்கள். ஆக, நெல் உற்பத்தி குறைந்து விட்டது; மேலும் குறையும்.

பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்துதான் நகர்ப்புறங்களுக்கு வேண்டிய நெல் கிடைத்தது. அவர்களை சம்ஹாரம் செய்து விட்டபடியால், சிறிதளவே கையிருப்பு வைத்துக் கொள்ளக் கூடிய சிறு நிலச் சொந்தக்காரர்கள்தாம் இன்று இருக்கிறார்கள். பணத்தின் மதிப்பு நாள்தோறும் அதிவிரைவில் குறைந்து வருகிறபடியால் அவர்கள் தங்கள் கையில் உள்ள தானியத்தை விற்க மனம் கொள்வதில்லை. சர்க்கார் தரும் விலைக்கு நெல்லைக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை. இது 'பதுக்கல்' ஆகி விடுகிறது. சட்ட விரோதமாகப் பயமுறுத்தியும், மறைமுகமாகப் பலவந்தப் படுத்தியும், சுதந்திரமான தானியச் செலாவணிக்குத் தடைகள் விதித்தும் அரசாங்கம் நிலவரத்தைச் சமாளிக்கப் பார்க்கிறது. மறைமுக நிர்ப்பந்தம் சிறிது காலத்தில் நேரடி நிர்ப்பந்தமாகத்தான் போகிறது; பெர்மிட் இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வெளியே தானியங்களை அனுப்பக் கூடாது என்பது இப்போது ரயில்வே உத்தரவு. அதாவது உற்பத்தியின் ஆரம்ப ஸ்தானத்திலிருந்தே நகர்ப்புற சப்ளையைத் தடுத்துக் குழப்பம் விளைவிக்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. தஞ்சையிலும் திருச்சியிலும் உபரியாக உள்ள அரிசி கோவையிலும் கேரளத்திலும் பஞ்சத்தில் வாடும் மக்களுக்குத் தங்கு தடையில்லாமல் செல்லக் கூடாது என்பது நீதியா, நாகரிகமா? இது பைத்தியக்காரக் கொள்கை.

இந்தியா ஒரு தேசமாயிராமல் ஒன்றோடொன்று சண்டையிடும் பல குட்டி ராஜ்யங்களாக மாறும் நிலையைத்தான் இந்தக் கொள்கை உருவாக்கும். ஆங்காங்குள்ள நகர்ப்புறங்களில் உணவுக்கு வழிசெய்து விட்டது போல் காட்டிக் கொண்டு மக்களின் ஆத்திரத்திலிருந்து தப்புவதற்காக இத்தகைய அற்ப நோக்கங் கொண்ட நிர்ப்பந்தங்களைப் போட்டு வருகிறார்கள். இதெல்லாம் நீண்ட காலம் செல்லாது.

சர்க்காரின் உணவுக் கொள்கையை அஸ்திவாரத்திலிருந்தே மாற்றித் தீர வேண்டும். அதற்கு வேண்டிய தீரத்தை ஆண்டவன்தான் அளிக்க முடியும். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை எல்லா நன்மைகளுக்கும் இருப்பிடமான இறைவன்தான் அளிக்க வேண்டும். மூடப் பிடிவாதக்காரர்களுக்கு அவன்தான் தைரியத்தையும் நல்ல மதியையும் அளிக்க வேண்டும்.

இருள் சூழ்ந்த இதயங்களிலெல்லாம் தீபாவளியன்று தீபம் ஏற்றி வைக்குமாறு ஆண்டவனை வேண்டுவோம்!

"ஸப் கோ ஸன்மதி தே பகவான்!"

என்று காந்தியடிகள் பாடிய பிரார்த்தனையை நாமும் பாடிப்பிரார்த்திப்போம்!

புதிய ருஷ்யாவும் பழைய பிடிவாதமும்

ருஷியாவில் குருஷேவின் ஆட்சி போய், புது ஆட்சி வந்து, கொள்கையில் புது மாறுதல்களுக்கு ஏதுக்கள் உண்டாகியுள்ள பின்னும் இந்திய சர்க்கார் பழைய தடஸ்தக் கொள்கையையே பிடிவாதமாகப் பின்பற்றுமானால் அதைவிட அறியாமை இருக்க முடியாது. கம்யூனிஸ வல்லரசைவிட மேற்கத்திய வல்லரசுகள்தான் நமது நம்பிக்கைக்கும், ராணுவ சகாயத்துக்கும் உகந்தவை என்று இது வரையில் தெரிந்திராவிடினும் இனி தயக்கமில்

"கந்தன் கருணை"

ஸ்கந்த சஷ்டியை ஒட்டி வெளியாகும் அடுத்த வாரக் 'கல்கி' இதழிலிருந்து நம் ஏட்டில் திவ்வியத் தேனாறு பெருகப் போகிறது. ஆறு மதிவதனங்களிலிருந்தும், பன்னிரு மலர் நயனங்களிலிருந்தும் சரவண பவன் பெருக்கும் கருணை ஆறு வாசகர்களின் உள்ளங்களை முழுக்காட்டப் போகிறது. முருகப்பெருமானின் மகிமைகளில் மூழ்குளித்த புண்ணிய புருஷரான திருமுருக கிருபானந்த வாரியாரின் பக்தியும், புலமையும், எளிமையும், கலை உணர்வும் வருத்துக் கொடுக்கும் வரைக்குட்பட்டுக் கந்த வேளின் அமிருத சரிதம் பிரவகிக்கப் போகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேத வியாஸ பகவான் முனிவர்களுக்குக் கூறிய மோகனக் கதையை, பல நூறு ஆண்டுகளுக்கு முன் கச்சியப்ப சிவாசாரியர் அறிஞர்களுக்கு அளித்த அற்புதக் கதையைப் பொதுமக்களுக்கெல்லாம் 'கல்கி' வாயிலாக வாரி வழங்கப் போகிறார் நம் வாரியார் சுவாமிகள். இது 'கல்கி' செய்த பாக்கியம்; தமிழகத்தின் தனியன்னைப் பெற்ற முருகப் பெருமானின் புனிதப் பெரும் கதை தமிழர்களின் சொந்தப் பத்திரிகையான 'கல்கி'யில் வருவதற்கு அவனுடைய இன்னருளே காரணம்.

கதையாகப் பார்த்தால் கவர்ந்திழுக்கும் திவ்வியமான சம்பவங்கள்; கவிதையாகப் பார்த்தால் திருக்கலை உணர்வைத் தித்திக்கச் செய்யும் மொழி வளம், கருத்து வளம்; ஆத்மிக உயர்வுக்காகப் பார்த்தால் சாசுவத சுகம் தரும் அநுபூதித் தத்துவங்கள் — இப்படி யாவும் பின்னிப் பிணைந்த கந்த புராணத் தொடர் கட்டுரைகள் 'கல்கி' வாயிலாகத் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் பரவி, நாட்டில் எல்லாவித நலன்களையும் பெருக்க வேண்டுமென ஷண்முகப் பெருமானையும், நமது காவல் தெய்வமான கணநாதனையும் பிரார்த்திக்கிறோம்.



லாமல் தெரிந்து கொள்ள வேண்டும். தனித்து நின்று இரு வல்லரசுக் கோஷ்டிகளிடமிருந்தும் கடனில் தளவாடம் பெறுவது பற்றி நினைத்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாழ்படுத்தியது போதும். கம்யூனிஸ சீனாவின் விஸ்தரிப்பை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள மேல் நாட்டு வல்லரசுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதே இன்றைய தேவை.

ருஷியாவிலிருந்து வருகிற தளவாடங்களுக்கு மாற்று உறுப்புக்கள் கிடைக்குமா என்ற நிச்சயமில்லாத போது — ராணுவ இயந்திர அமைப்பில் நம்மோடு உழைக்க முன்வருபவர்கள் நம்பகமானவர்கள்தானா என்ற நிச்சயமில்லாதபோது—ருஷிய உதவியைப் பெரிதாக மதிப்பது மடமை. ருஷியக் கரடி மோஸ்தரானாலும் சரி, சீனாவின் கால சர்ப்ப மோஸ்தரானாலும் சரி இவற்றுள் அதிக வித்தியாசம் இருப்பதாக மயங்கி, நமது ராணுவ தளங்களில் கம்யூனிஸ்ட் தொழில் நிபுணர்களை அநுமதிப்பது ஆபத்தாகும்.

''சீனாவுடன் மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்ற கருத்தின் மீதுதான் க்ருஷேவை ருஷியத் தலைவர்கள் வெளியேற்றியிருக்கிறார்கள் என்று அநுமானிக்கலாம். எனவே இனியேனும் ருஷியாவை நம்பாமல், மேல்நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளாவிடில் சீன ஆக்கிரமிப்புக்கு அடிபணிவது தவிர வேறு வழியில்லாமல் போகும்'' என்று ராஜாஜி எச்சரிக்கிறார். தேசப்பற்றுள்ள யாவரும் இனிமேலாவது விழிப்புற வேண்டும்.

சென்னையில் பவனம்

தமிழகத்தின் நாகரிக சரித்திரத்தில் அக்டோபர் 29ந் தேதி ஒரு முக்கியமான தினமாக விளங்கப் போகிறது. பாரதத்தில் ஆத்மிகப் பண்புகளைப் பரப்புவதில் அருந்தொண்டாற்றி வரும் பம்பாய் பாரதீய வித்யாபவனத்துடைய சென்னைக் கிளையின் விஸ்தரிப்புத் திட்டம் அன்று தொடங்குகிறது.

மயிலை மாடவீதியில் உள்ள பவனக் காரியாலயத்தை இந்து லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதுக் கட்டடத்துக்கு அக்டோபர் 29ந் தேதியன்று மாலை ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் அஸ்திவாரம் அமைக்கிறார்கள். பவன நூல்களில் முதலாவதான ராமாயணத்தை அளித்த ராஜாஜி, அன்றைய விழாவில் பவனத்தின் புதுப் பிரசுரங்களை வெளியிடுகிறார். ராஜாஜியின் ஒரு நூலை ராஷ்டிரபதி வெளியிடுகிறார். மைசூர் மகாராஜா, டாக்டர் ஸி. பி. ராமசுவாமி அய்யர், மந்திரி ஆர். வெங்கடராமன் பாரதீய வித்யாபவனத்தின் உயிர்நாடியான ஸ்ரீ கே. எம். முன்ஷி ஆகியோர் விழாவில் கலந்து கொள்கிறார்கள். செங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்கள் பவனத்துக்கு ஆசி கூறுகிறார்கள். ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் இசை நிகழ்ச்சியுடன் விழா நிறைவுறுகிறது.

பவனக் கட்டட உதவி நிதிக்காக ஏற்பாடாகியுள்ள கலைநிகழ்ச்சிகளை முப்பதாம் தேதியன்று முதன் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் தொடங்கி வைக்கிறார். அன்று பவன கலா கேந்திரத்தின் குஜராத்தி நாடகம் நடக்கிறது. முப்பத்தியொன்றும் தேதி மாலை ராஜாஜி, ஸி. பி., முன்ஷி, நிஜலிங்கப்பா, சென்னை கேந்திரத் தலைவர் ஏ. எல். முதலியார், காரியதரிசி கே. பாலசுப்பிரமணிய அய்யர் ஆகியோர் மைசூர் மகாராஜாவின் தலைமையில் 'இந்தியப் புனரமைப்பில் சமயத்தின் பங்கு' என்ற கருத்தரங்கில் கலந்து கொள்கிறார்கள். அன்று இரவு கலாகேந்திர மாணவிகளின் பரதநாட்டியம் நடைபெறுகிறது. நவம்பர் முதல் தேதி பவனத்தாரின் குஜராத்தி நாடகமும், ஏழாம் தேதி உஸ்தாத் விலயத்கானின் சித்தார் கச்சேரியும், எட்டாந் தேதி பவனத்தாரின் உஷா பரிணய நாடகமும், 14ந் தேதி ஸ்ரீ செம்மங்குடியின் கச்சேரியும் 15ந் தேதி டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகமும் (உயிர்ப்பலி என்ற தாகூர் நாடகம்) நடைபெறுகின்றன.

நல்ல கலை நிகழ்ச்சியில் பங்கு கொண்டு மகிழ்ச்சி பெறுவதோடு பவனக் கட்டடம் மளமளவென்று உயர்ந்து விரைவிலேயே இப்பண்பு நிறுவனத்தின் பணி தமிழகத்தில் பரவ மக்கள் தாராளமாக உதவ வேண்டும்.

பத்திரிகை சுதந்திரம் பறிபோகிறது

கடந்த மாதம் இலங்கைப் பார்லிமெண்டு சபையில் ஓர் அசாதாரணமான சம்பவம் நடைபெற்றது. இலங்கைப் பத்திரிகைகளின் குரல்வளையை நசுக்குவதற்காகச் சில மாதங்களுக்கு முன்னால் அரசாங்கம் ஒரு பத்திரிகைக் கமிஷனை நியமித்தது. இந்தக் கமிஷன் ஓர் இடைக்கால அறிக்கையைச் சில தினங்களுக்கு முன்னால் சமர்ப்பித்தது. பத்திரிகைகளைத் தற்போதைய முதலாளிகளிடமிருந்து பிடுங்கிப் பலருக்குப் பங்குகள் இருக்கக் கூடிய கார்ப்பொரேஷன்களைக் கொண்டு நடத்த வேண்டு மென்பது ஒரு யோசனை. பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த ஒரு பத்திரிகை கவுன்ஸிலையும் பத்திரிகைக் கோர்ட்டையும் நிறுவ வேண்டும் என்பது இரண்டாவது யோசனை. இந்தக் கவுன்ஸிலுக்கு அளிக்கப்படும் அதிகாரங்களின்படி பத்திரிகைகள் அரசாங்கச் செய்தி ஸ்தாபன வெளியீட்டைப் போல இயங்க வேண்டியிருக்குமே தவிர சுதந்திரமாக எந்தச் செய்தியையும் வெளியிட முடியாது.

மேற்படி யோசிகளைத் தழுவி அரசாங்கம் ஒரு மசோதாவைத் தயார் செய்தது. நாடு முழுவதும் ஒருமுகமாக எதிர்த்தும் கூட அரசாங்கம் பார்லிமெண்டு சபையில் தனக்கு மெஜாரிட்டி இருக்கிறதென்ற தைரியத்தில் மசோதாவைக் கைவிடுவதாயில்லை.

ஆனால் மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைப்பது போல் ஒருசில காரியங்கள் நடைபெற்றுள்ளன. மசோதாவைத் தொழில் மந்திரி ஜனப் பிரதிநிதி சபையில் பிரேரிக்கும் போது அந்த மசோதா எந்தத் தேதியில் விவாதிக்கப்பட வேண்டும் என்பதை எழுத்து மூலம் தெரிவிக்க மறந்துவிட்டார். உடனே இரு எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அந்த மசோதாவைத் தாங்கள் பிரேரிப்பதாயும் அடுத்த வருட பிப்ரவரி மாதம் விவாதத்துக்கு விடப்பட வேண்டும் என்றும் எழுத்து மூலம் அறிக்கை கொடுத்துவிட்டார்கள். இதனால் பல சட்டப் பிரச்னைகள் எழுந்தன.

இதைப் பற்றி சபாநாயகர் திரு நம்பு பெர்னாண்டோ ஓர் அருமையான தீர்ப்புக் கொடுத்தார். மசோதாவை முதலில் பிரேரித்துச் சட்டப்படி அதற்கு ஒரு விவாதத் தேதியையும் குறிப்பிட்டது எதிர்க் கட்சி அங்கத்தினர்கள்தான். ஆகவே எதிர்க் கட்சி அங்கத்தினர்களின் பிரேரணையை ஏற்று மசோதாவை அடுத்த வருடம்தான் விவாதிக்க முடியும் என்று அவர் தீர்ப்பளித்தார்.

இதனால் மேலும் ஆத்திரம் அடைந்த அரசாங்கம் இலங்கையில் அதிகச் செல்வாக்குள்ள பல பத்திரிகைகளை வெளியிடும் ''ஏரிக் கரைப் பத்திரிகைக் குழு''வை (Lake House Group) முற்றிலும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட இரவோடு இரவாக ஒரு மசோதாவைத் தயாரித்து அதை மந்திரி சபையில் நிறைவேற்றியுள்ளது. ஏரிக் கரைப் பத்திரிகைக் குழுவுக்கு ஏற்படக்கூடிய கதி எல்லாப் பத்திரிகைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்பதைக் கருதி சர்வதேசப் பத்திரிகை நிறுவனம் (International Press Institute) இலங்கைப் பிரதமரிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. இடதுசாரியின் அதிகாரம் வலுத்த நாட்டில் வலதுசாரி அபிப்பிராயங்களுக்கு எப்படி வாய்ப்பூட்டுப் போடப்படும் என்பதற்கு இது ஒரு பயங்கர உதாரணம். —ரஜனி

நறுமணம் கமழும் நன்மலர்

கல்கி தீபாவளி மலர் என்றால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று நேயர்களே ஒரு மதிப்புப் போட்டு விடுவார்கள். அந்த மதிப்புக்கும் கூடுதலாகவே சிறப்புற்று விளங்கும் மலர்களையே படைத்து மகிழும் பேற்றினை ஆண்டவன் அருளி வருகிறான். இவ்வருஷமும் அந்த அருள் கிட்டியுள்ளது.

உணவுப் பிரச்னை காரணமாக மனம் நொந்துபோன ஒரு தருணத்தில் இவ்வாண்டு தீபாவளி நிகழ்கிறது. நோவு கண்ட மனத்துக்குக் கலையை விடச் சிறந்த மூலிகை கிடையாது. கலைக்கே தெய்விகம் உண்டு என்பது ஒருபுறம் இருக்க, தெய்வ சம்பந்தமான கலையாகவும் இருந்து விட்டால் அது நோக்காடுகளை மேலும் சிறப்பாகத் தீர்க்கிறது. இதற்கேற்ப, தெய்விகமான அம்சங்களில் இவ்வாண்டு மலர் பூரித்து விளங்கி, மக்களுக்கு இதமும் அமைதியும் கூட்டுகிறது.

இதமும் அமைதியும் இரண்டு உருவங்கள் எடுத்து வந்தது போல் அட்டைச் சித்திரத்தில் திருமண அலங்காரத்துடன் ஆண்டாளையும், அம்பிகையையும் கண்டு மங்கல உணர்வு பெறுகிறோம். மங்கலத்தின் உறைவிடமான ஸ்ரீ காமகோடி ஜகத்குரு ஸ்வரூப த்யானம் செய்யும் திருக்கோலம் முகப்புச் சித்திரமாக விளங்குகிறது. உணவுப் பிரச்னை தீருவதற்காக அவர் உள்ளம் உருகிப் பிரார்த்தித்து அளித்த ஸ்ரீமுகம் நமக்குப் புதிய தெம்பும் சாந்தியும் தருகிறது. அடுத்து வரும் கட்டுரைகளின் ஆசிரியர் வரிசையைப் பார்க்கும்போதே பெருமிதம் ஏற்படுகிறது. ஆசாரியனின் பணி பற்றிய அதிநுட்பமான விஷயத்தை ராஜாஜி எடுத்துரைக்கிறார். ஆதி சங்கரரின் பெருமைகளை ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் தெள்ளத் தெளிய விளக்குகிறார். மைசூர் மன்னர் பரம்பரையின் பக்திக்கெல்லாம் உறைவிடமான அன்னை சாமுண்டேசுவரியைப்பற்றி நமது கவர்னராகிய மஹாராஜா அந்தரங்க அன்போடு எழுதியிருக்கிறார். காமகோடி பெரியவாளின் பிரபாவத்தைப் பற்றி திருமுருக கிருபானந்தவாரியார் எழுதியுள்ள கட்டுரை நம்மை ஆசாரியாரின் கிருபை என்ற வாரியில் ஆழ்த்துகிறது. ஆஞ்சநேய ஸ்வாமியின் மகத்துவத்தைச் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீட்சிதரவர்கள் நம் உள்ளங்களை விட்டகலாதவாறு அழகுபட விளக்கியுள்ளார். பக்தி மார்க்கம் பரவுவதற்குப் பேருபகாரம் புரிந்த ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரியரான வேதாந்த தேசிகனின் சரிதையை அக்னிஹோத்திரம் ராமானுஜ தாதாசாரியர் அவர்கள் அற்புதமாக விவரிக்கிறார்.

கதை, கவிதைப் பகுதிகளில் தமிழகத்தின் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள், புகழ் பெறப்போகும் சிருஷ்டிகளை அளித்திருக்கிறார்கள். முன்னாள் ரிஸர்வ் பாங்கு கவர்னரான ஸ்ரீ எச். வி. ஆர். ஐயங்காரின் 'அப்பா'வைக் குறிப்பாகச் சொல்லவேண்டும்.

கல்கி தீபாவளி மலரில் ஊறும் தேனாகச் சித்திரப் பகுதிகள் இனிக்கின்றன. உலக மகா கவி ஷேக்ஸ்பியரின் நானூறாவது ஆண்டு விழாவை யொட்டித் தமிழகம் அவருக்கு அளிக்கும் அஞ்சலியாக மணியம் ஓர் அற்புத ஓவிய மடலைப் படைத்திருக்கிறார். ஹரியும் ஹரனும் இணைந்துஇணைந்து பல கோணங்களில் தரிசனம் தரும் 'ஹரி — ஹரன்' என்ற சித்திர மடலை ஓவியர் வினு அழகு மிளிர வரைந்தளித்திருக்கிறார். மறைந்து விடும் நிலையிலுள்ள மறைகளை மீட்டுத் தரும் பணியில் மக்களின் மனத்தை ஈடுபடுத்தும் முகமாக, வேதகாலத்தில் பெண்கள் பெற்றிருந்த உயர்ந்த ஸ்தானத்தை விளக்கும் 'வேத கால வனிதையர்' என்ற மடலை ஓவியர் ராஜம் மலர்த்தி மகிழ்விக்கிறார். தமிழ் நாட்டுத் திருவிழாக்களின் அம்சங்களை வண்ணச் சித்திரங்களாகத் திரட்டித் தருகிறது இன்னொரு மடல். உணவுப் பிரச்னை தீர தெய்வ அநுக்கிரகத்தைக் கோருவதே போல், காசி அன்னபூரணியின் திரு உரு 'சில்பி'யின் நுண்மையாய்ந்த தூரிகை வழியே ஓர் அமுதச் சித்திரமாக வெளிவந்திருக்கிறது. வீரமும், காதலும், இலக்கிய மணமும் இழையும் பகுதியாக வில் விஜயன் காதலியர் என்ற சித்திர மடலை சாமி அளித்திருக்கிறார். மகாராஷ்டிர பக்திமான்களின் நெஞ்சை நெகிழ்விக்கும் புனித சரிதங்களில் நான்கினை ஓவியர்கள் விஜயாவும், கல்பனாவும் பாங்குறத் தீட்டியிருக்கிறார்கள். மனத்தைக் கவரும் புகைப்படப் பகுதிகளும் உள்ளன.

ஹாஸ்யப் பகுதி எப்போதும் போல் முக்கியமான பங்கு பெற்றுள்ளது. சாமாவின் இரண்டு மூவர்ணச் சித்திரங்களையும், இரட்டைப் பக்க நகைச்சுவை அம்சத்தையும், துணுக்குகளையும் வைத்துக் கொண்டு அடுத்த தீபாவளி மலர் வருகிறவரை கௌரவமாகச் சிரித்துச் சந்தோஷிக்கலாம். பி. கே.யின் 'இந்திய ஒலிம்பிக்ஸ்' கேலிச் சித்திரங்கள் நம் நாட்டு அரசியலை நகைச்சுவையில் விளக்குகிறது. உமாபதி, கதர்ஸன் ஆகியோர் ஏராளமான நகைச்சுவைப்பொதிகளை அளிக்கிறார்கள்.

குழந்தையுள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வண்ணப் பகுதியும் மலரில் இருக்கிறது.


சந்நியாசியிலிருந்து பச்சிளம் குழந்தை வரை யாவரும் தீபாவளியன்று தைல ஸ்நானம் செய்ய வேண்டும் என்பார்கள். சந்நியாசியிலிருந்து பச்சிளம் குழந்தை வரையில் யாவரும் மகிழ்ந்து இலக்கிய ஸ்நானம் செய்யும் வகையில் கல்கி மலர் அமைந்திருக்கிறது.

சென்னை வடபழநியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வடபழநியாண்டவன் ஆலயத்தில் இம்மாதம் ஐந்தாம் தேதி முதல் பதினைந்தாம் தேதி முடிய **சஷ்டி விழா** நடக்கிறது. இதையொட்டி லட்சார்ச்சனை நடைபெறுகிறது. அடியார்கள் அனைவரும் உற்சவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ வடபழநி ஆண்டவனின் பேரருளைப் பெற்றுய்ய வேணும்.


நல்ல வர்ஜீனியாப்
புகையிலை என்றால்
ஒரு நல்ல சிகரெட்டு
பனாமா
ஒரு நல்ல சிகரெட்டு
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
GTC

உலக சஞ்சாரம்

டெலிவிஷன் தேர்தல்



கி. ராஜேந்திரன்

பிரிட்டனுக்கு நான் வந்த பிறகு, ஒலிம்பிக் விளையாட்டுக்கள், சீனாவின் அணுகுண்டுப் பரிசோதனை, மூன்று ருஷ்ய வீரர்களின் விண்வெளி யாத்திரை, குருஷேவ் பதவி துறந்தது போன்ற அகில உலக முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டன. உலகம் உன்னிப்பாகக் கவனித்து வந்த மற்றொரு விஷயம் பிரிட்டனில் நடைபெற்ற தேர்தல்கள். இந்த மாபெரும் நிகழ்ச்சியினை அருகிலிருந்து பார்த்துப் பயனடையும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 'கல்கி' வாசக அன்பர்களுடன் எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். —கட்டுரை ஆசிரியர்.

அக்டோபர் 15, 1964. பிரிட்டனின் தேர்தல் தினம். ஆனால் விடுமுறை கிடையாது. அன்று காலை ஆண்களும் பெண்களுமாகப் பஸ்ஸிலும் ரயிலிலும் தங்கள் தங்கள் காரியாலயங்களுக்குச் சென்றபோது எதைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள் என்று நினைக்கிறீர்கள்? வழக்கம் போல் அன்றைய சீதோஷ்ண நிலைதான் முதலிடம் பெற்றது! அடுத்தாற்போல் தங்கள் வீட்டுத் தோட்டத்தைப் பற்றியோ அல்லது தாங்கள் அன்புடன் வளர்த்து வரும் நாய்க்குட்டியைப் பற்றியோ பேசினார்கள்!

பெரும்பான்மையான பிரிட்டிஷ் மக்களுக்கு ஜனநாயகம், தேர்தல் என்பன சர்வ சாதாரணமான வழக்கமான விஷயங்களாகி விட்டன. தினம் ஒரு முறை தபால்காரர் கடிதம் கொணர்ந்து தருவதை எப்படி உரிமையோடு எதிர்பார்க்கிறார்களோ அதேபோல் அந்த விதமான பரபரப்புமின்றி ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தேர்தலையும் எதிர்நோக்குகிறார்கள்.

தேர்தலுக்குச் சுமார் இருபது நாட்கள் இருந்தபோது பிரிட்டனின் தென் மேற்குப் பகுதியான வேல்ஸின் தலைநகர் கார்டிஃப், தொழிற் கட்சித் தலைவர் வில்ஸனை வரவேற்றது. அன்று சனிக்கிழமை; விடுமுறை தினம். மாலை மூன்று மணிக்கு வில்ஸன் ஒரு பொதுக் கூட்டத்தில் தேர்தல் குறித்துப் பேசவிருந்தார்.


வேல்ஸ், நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் எஃகு ஆலைகளுக்கும் பிரசித்தி பெற்றது. வெள்ளீயமும் (tin plate) நிறைய இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. தொழிலாளர் சமூகம் மிகுதியான இப் பிரதேசத்தில் தொழிற் கட்சிக்கு அதிக ஆதரவு இருப்பதில் அதிசயமில்லை.

எனவே, தொழிற்கட்சித் தலைவர் வில்ஸனின் (இன்றைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி) பேச்சையும் மக்களின் உற்சாகத்தையும் நேரில் காண அவருடன் சென்றேன். பெரிய ஏமாற்றம் எனக்குக் காத்திருந்தது. அங்கு எண்ணி இருநூறு பேர்கள்கூட இல்லை!

அடுத்தாற்போல் மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாக விருந்த 'ரக்பி' விளையாட்டைப் பார்க்கப் போனேன். பிஜித் தீவினருக்கும் வேல்ஷ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இந்த — ஓரளவுக்கு முரட்டுத்தனமான — விளையாட்டுப் போட்டியைக் காண வஸ்ளிசாக நாற்பத்தையாயிரம் மக்கள் குழுமியிருந்தார்கள்!

தேர்தலுக்கு இன்னும் மூன்றே நாட்கள் இருந்தபோது மேலும் சில பொதுக் கூட்டங்களுக்குச் சென்றிருந்தேன். இவற்றில் முதல் கூட்டம் வேல்ஷ் தேசியவாதிகளுடையது. கூட்டம் நடைபெறவிருந்த கூடம் காலியாக இருந்தது. என்னையும் என்னைப் போல் அயல் நாடுகளிலிருந்து வந்திருந்த பார்வையாளர்கள் சிலரையும் பேச்சாளர்களையும் தவிர வேறு யாரையும் காணோம். தேர்தலில் போட்டியிடவிருந்த அபேட்சகர் 'நீங்கள் வந்ததற்காக மகிழ்வதா வராமலிருந்தவர்களை எண்ணி வருந்துவதா என்று புரியவில்லை' என மனம் விட்டுக் கூறி ஏங்கியபோதிலும் தமது கட்சியின் கொள்கைகளை மிக அழகாகவும் தெளிவாகவும் தைரியமாகவும் எடுத்துரைத்தார். வேல்ஸ் ஒரு தனிச் சுதந்திர நாடாக விளங்க வேண்டும் என்று போராடுகிறவர்கள் வேல்ஷ் தேசியவாதிகள். ஆங்கிலேயரின் 'ஆதிக்கத்தின்' கீழ் வேல்ஸ் தனது பழமையான கலாசாரம், பழக்க வழக்கங்கள், மொழி முதலானவற்றை இழந்து, தனித் தன்மை நீங்கப் பெற்று, பழம் பெருமை குன்றி நசித்து வருவதாகக் கருதுகிறவர்கள் இவர்கள். நிலக்கரி, வெள்ளீயம், இரும்பு போன்ற வேல்ஸின் செல்வமெல்லாம் வடநாட்டவரால் சுரண்டப்பட்டுப் பறி போவதாக நம்புகிறார்கள். பாராளுமன்றத்தில் இடம்பெற்றால் தங்கள் கொள்கைகளை அங்கு நிலைநிறுத்தி வேல்ஸுக்கு 'விடுதலை' வாங்கித் தரலாம் என்று எண்ணுகிறார்கள். அபேட்சகர் பேசிக் கொண்டே வந்தபோது எனக்குத் தி.மு.க.வுடன் இக்கட்சியை ஒப்பு நோக்கத் தோன்றியது. ஆனால் தி.மு.க. போலல்லாது இவர்களுக்கு மக்களிடையே இங்கு ஆதரவில்லை என்பது இந்தத் தேர்தலில் நன்கு நிரூபணமாயிற்று. இவர்கள் மொத்தம் போட்டியிட்ட 23 ஸ்தானங்களில் இரு இடங்களில் மட்டுமே 'டெபாஸிட்' இழக்காமல் தப்பினார்கள். ஒருவர்கூடத் தேர்தலில் வெற்றி பெறவில்லை!

இதற்குக் காரணம் ஆங்கிலேயரும் வேல்ஷ் மக்களும் பிரிக்க முடியாதபடி பலவிதங்களிலும் ஒன்றிப் போயிருப்பது தான். வேல்ஷ் மக்கள் இன்று நாடெல்லாம் பரவிப் பல அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர். அதே போல் ஆங்கிலேயரும் வேல்ஸில் ஏராளமாக உள்ளனர். இரு சாராருக்குமிடையே



அன்றைய பிரதமர் ஹியூம்

திருமணங்கள் நடப்பது ச
சாதாரணமாகி விட்ட
மந்திரி சபையில் வே
விவகாரங்களைக் கவனி
வென்று இரு மந்திரி
உள்ளனர். எல்லா ஆரம்
பள்ளிகளிலும் வேல்ஷ் மொ
போதிக்கப்படுகிறது. தொழி
வளத்திலோ வேல்ஸ் தன்
யொத்த அளவுடைய வே
எந்த நாட்டையும் விட
தான் தாழ்ந்து விடவில்
என்பதை நிரூபித்துக் காட
யிருக்கிறது. இன்றை
நிலைமை இத்தனை திருப்தி
மாக இருக்கும்போது
வினைப் பிரச்னையில் மக்கள்
மனம் ஏன் ஈடுபடும்?

அடுத்தாற்போல் நா
சென்ற கூட்டங்கள் கன்ச
வேடிவ், லேபர் கட்சிகள் நடத்தியவை.
இங்கும் பொதுக் கூட்டம் என்பது பெரு
பாலும் மக்கள் கூட்டமாயிராமல் நாற்கா
கூட்டங்களாகவே இருந்தன. தேர்தலு
முதல் நாள்தான் பொதுக் கூட்டங்கள் கொ
சம் சூடு பிடிக்க ஆரம்பித்தன.

தொழிற்கட்சிப் பிரமுகர் ஜிம் கலாக
(Jim Callaghan) (இன்றைய பிரிட்டிஷ் நி
மந்திரி) கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர்களு
ஒருவரான பீடர் தார்னி கிராப்ட் **(Pe**
Thorneycroft) ஆகியோரது பிரசங்கங்களை
கேட்டேன். அன்றுதான் கூடம் நிரம்பி
கணிசமான கூட்டத்தையும் கண்டேன். இ
வருமே பண்பட்ட அரசியல்வாதிகளா
விளங்கியதோடு சொற்பொழிவுக் கலையிலு
கரை கண்டவர்களாக இருந்தார்க
நேரம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி
கொண்டிருந்தது.

இங்கு நடைபெறும் தேர்தல் பிரசாரங்க
பிரசங்கங்கள் இவற்றில் மிக முக்கியமா
என்னைக் கவர்ந்த விஷயம் கண்ணியம். தனி
பட்ட முறையில் நபர்களைத் தாக்கி யாரு
ஒரு வார்த்தை கூற மாட்டார். ஜிம் கலாக
எதிர்த்துக் கார்டிஃப் தென்கிழக்குப் பகுதியி
போட்டியிட்ட கன்ஸர்வேடிவ் அபேட்ச
பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் டெட் டெக்
டர் (Ted Dexter). அரசியலுக்குப் புதியவ
''டெட் டெக்ஸ்டர் கிரிக்கெட் ஆடப் போக
டும். அரசியலில் புகுந்தால் விக்கெட் அடிக்க
பட்ட பந்துபோல் எட்டப் போய் விழுவார்!
என்று இங்கு யாரும் கூறவில்லை. மாறு
ஜிம் கலாகன் அன்று பேசிய போது, ''டெ
டெக்ஸ்டருக்கு அனுபவம் போதாது என்பத
காக நான் அவரை எதிர்க்கவில்லை. எ
லாரும் முதல் படியில் அடியெடுத்து வை
துத்தான் மேலே ஏற வேண்டும். நானு
அனுபவமின்றித்தானே ஆரம்பத்தில் அர
லில் புகுந்தேன்? டெட் டெக்ஸ்டரின் கொ
கைகளையே எதிர்க்கிறேன்'' என்றார்.

இரண்டாவதாக இத்தேர்தல் கூட்ட
களில் எனக்குப் பிடித்த, மிக முக்கியமாக
பட்ட விஷயம், எல்லாரும் பேசி முடித்

றும், கேட்க வந்திருந்தவர்களின் சந்தேகங் ளே அன்றைய பிரதானமான பிரசங்கி ர்த்து வைத்ததாகும். மக்கள் புத்திசாலித் னமான கேள்விகளை அஸ்திரங்கள் போல் ரவி விட்டனர். சாதுர்யமான பதில்களைப் பெற்றனர்.

பொதுவாகத் தேர்தல் கூட்டங்கள் ன்னியமாகவும், சண்டை பூசல்கள், கல ரங்கள் எதுமின்றி நடைபெற்ற போதிலும் குறிப்பிட்ட ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் லைவர்களைப் பேச விடாதபடி மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி கொக்கரித்தும், கைகளை கொட்டிச் சிரித்துப் பரிகசித்தும் தொல்லை கொடுத்தனர். இவர்கள் குறிப் பிட்ட ஒரு கட்சியினராம் கூலி கொடுத்து அமர்த்தப்பட்டவர்களோ என ஆரம்பத்தில் சந்தேகம் ஏற்பட்டது. அவ்வாறில்லை என்று டனுக்குடன் தெளிவாகி விட்டது. ஏனெனில், இரு கட்சியினருமே இத்தொல் லக்கு உள்ளானார்கள். ஜனநாயகப் பண் க்கு இந்த நடத்தை முரணானது என்று மறு ளைமே கூறிக் கண்டிக்க இரு கட்சித் தலைவர் ளுமே தயங்கவில்லை.

தொல்லை கொடுக்கத் துணிந்தவர்களும் ருந்தினார்கள்.

இத்தகைய ஓர் அமர்க்களத்தின்போது தான் கூட்டத்திலிருந்த ஒருவர், ''ப்ரொஃ பியூமோ விவகாரம் பற்றி என்ன சொல் கிறீர்கள்?'' என்று கத்தினார். தனிப்பட்ட ஒரு நபரின் சொந்த விவகாரம் இத்தேர்தலின் போது இந்த ஒரே ஒரு முறைதான் இழுக்கப் பட்டது. கேள்விக்கு ஆளான கன்சர்வேடிவ் தலைவர் ஹாக்ஸ் துடுக்குத்தனமான பேச்சுக்கு சற்றுப் பெயர் போனவர்தான். அவர் பதில் கூறினார், ''தொழிற்கட்சியின் முன்னணி வரிசையில் நடத்தை கெட்டவர் ஒருவர்கூட இல்லை என்று நீ உறுதி அளிக்க முடியுமானால் ப்ரொஃபியூமோ பற்றிப் பேசு; இல்லையேல் வாயை மூடிக் கொண்டிரு!'' என்று.

கன்சர்வேடிவ் கட்சியினர் பேசியபோது, 'நாங்கள் இத்தனை நன்மைகளை மக்களுக்குச் செய்தோம். அதனால் எங்களுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று கேட்க வில்லை. பிரிட்டிஷ் மக்கள் படிப்பறிவு மிக்கவர்கள். சர்க்கார் வேறு, கட்சி வேறு என்று பிரித்துப் பார்க்க அவர்களுக்குத் தெரியும் என் பதைத் தலைவர்கள் உணரா தவர்களா? ஆகவே, எங்கள் கொள்கைகள் இவையாக இருப்பதால் கன்சர்வேடிவ் ஆட்சியில் இத்தனை சாதிக்க முடிந்தது; தொழிற் கட்சியின் கொள்கைகள் இவையாக இருப்பதால் அவர்கள் அர சாட்சியை இவ்வாறு நடத்தி யிருப்பார்கள் என்று ஒப்பு நோக்கினார்களே ஒழிய மக்க ளின் வரிப் பணத்தைக் கொண்டு அரசாங்கம் தனது கடமையின நிறைவேற்றி



இன்றைய பிரதமர் வில்சன்

யதைத் தங்கள் சாதனைகளாகப் பறைசாற் றிக் கொள்ளவில்லை கன்சர்வேடிவ் கட்சி.

கன்சர்வேடிவ் கட்சியில் ஹாக்ஸ் எப்படித் துடுக்குத்தனத்துக்குப் பெயர் போனவரோ அவ்வாறே தொழிற் கட்சியில் ஜியார்ஜ் பிரௌன் (இன்றைய பொருளாதார மந்திரி) முன்கோபத்துக்கும் விட்டெறிந்து பேசும் தன்மைக்கும் பேர் போனவர். இதே முன் கோபம் காரணமாகத்தான் பழுத்த அரசியல் வாதியான அவர் முன்பே தொழிற்கட்சியின் தலைமைப் பதவியை வில்சனுக்கு விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தொழிற்கட்சி பதவிக்கு வந்தால், தவணைகளில் பணம் செலுத்தி வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் மக்கள் கொடுக்க வேண்டிய வட்டி மூன்று சதவீதத் துக்குக் குறைந்துவிடும் என்று அவர் கூறி யதை ஒருவரேனும் நம்ப வேண்டுமே? நானும் பலரை விசாரித்தேன். ''ஜியார்ஜ் எப்போ தும் இப்படித்தான். கோபத்தில் அவசரப் பட்டு ஏதாவது சொல்லுவார். ஆனால் நல்ல மனிதர், கெட்டிக்காரர்'' என்று சிரித்துக் கொண்டே பதில் வந்தது. இத்தகைய ஒரு பொருளாதாரப் பிரச்னையில் கூட எது நடக்கக் கூடும், எது நடைபெற இயலாது என் பதையெல்லாம் ஆண் – பெண், தொழிலாளி முதலாளி என்ற வித்தியாசமின்றி அனைவரும் தெரிந்து வைத்திருப்பது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இதுவே, பிரிட்டிஷ் மக்களின் அரசியல் அறிவையும், ஜனநாயகப் பற்று தலையும் தேர்தல் கூட்டத்துக்கு வருகிற மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப் பிடக்கூடாது என்பதை உணர்த்தியது.

இந்த நூற்றாண்டில் பிரிட்டனின் பிரதம மந்திரியாக விளங்கியவர்களுள் மிகக் குறைந்த வயதுடையவரான நாற்பத்தெழு பிராயமான வில்ஸனை அப்பதவியில் அமர்த்த எழுபத் தெட்டு சத விகிதம் மக்கள் ஓட்டுச் சாவடிக் குச் சென்றார்கள். வாக்காளர் பட்டியல் தயா ரான தேதிக்கும் தேர்தல் தினத்துக்கும் இடையில் பட்டியலில் உள்ள பலர் இறந்து போவதோ அல்லது இடம் பெயர்வதோ சகஜம். இவர்கள் ஓட்டுரிமை பெற்ற மொத் தத் தொகையினரில் ஐந்து முதல் பத்து சதவிகிதம் வரை இருப்பதை மனத்தில் கொண் டால் ஓட்டுப் போட்டவர் களின் சதவிகிதம் எத்தனை அளவு பெரியது என்பது புரியும்.


எனினும் மக்கள் வெளிப் படையாகத் தேர்தலில் அதிக மான ஆர்வம் காட்டாதது ஏன்? நம் நாட்டில் நடப்பது போல் சைக்கிள் ஊர்வலங் கள், ஒலிபெருக்கித் தொல்லை கள்; கண்ட இடங்களிலெல் லாம் தேர்தல் விளம்பரத் தாள்களை ஒட்டுதல் போன்ற விவகாரங்கள் இங்கு ஏன் நடைபெறவில்லை?

இவற்றுக்குப் பல காரணங் கள் உள்ளன. முக்கிய கட்சி

களான தொழிற் கட்சிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்குமிடையே கொள்கை அளவில் வித்தியாசங்கள் கணிசமாகக் குறைந்து விட்டன. இரும்பு ஆலைகள்; லாரி போக்குவரத்து; ரயில் போக்குவரத்து; தண்ணீர் விநியோகம் ஆகிய துறைகளைத் தவிர மற்ற துறைகளைத் தேசியமாக்கும் எண்ணங்களைத் தொழிற் கட்சி கைவிட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. கொள்கை அளவில் இன்று இரு கட்சிகளுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகள் மக்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியவையல்ல.

இன்னொரு காரணம் மக்களின் வாழ்க்கைத்தரம் இன்று வெகுவாக உயர்ந்துவிட்டிருக்கிறது. ஏழ்மை, வேலையின்மை போன்ற அடிப்படைப் பிரச்னை இன்று பிரிட்டிஷ் மக்களை வருத்துவதில்லை. எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் பிரிட்டிஷ் மக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயரலாமே தவிர குறையப் போவதில்லை. இது இம்மக்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைய பிரச்னை ஒரு தொழிலாளிக்குக் கார் வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல; ஒரு தொழிலாளி மாரிஸ்—மைனரிலோ, பேபி—ஆஸ்டினிலோதான் போக வேண்டுமா; ஏன் அவன் மாரிஸ்—ஆக்ஸ்போர்ட் அல்லது ஆஸ்டின்—கேம்பிரிட்ஜ் போன்றதொரு பெரிய காரில் போகக் கூடாது என்பதுதான்! குடியிருக்க வீடில்லையே என்பதல்ல அவர்களது குறை—வாடகை கொடுத்துத்தான் வாழவேண்டுமா சொந்த வீட்டில் வசிக்கக் கூடாதா என்பதுதான் இன்றைய கேள்வி.

ஸ்ரீ ராஜேந்திரனுடைய புத்தகத்தில் கார்டிஃபின் இரு கட்சி அங்கத்தினர்களான ஜிம் கலாகனும், டெட் டெக்ஸ்டரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.



இதையெல்லாம் விட மிக முக்கியமான காரணம் டெலிவிஷன். மக்கள் தேர்தல் விவகாரங்களை நேரடியாகப் பெறுவதற்கு வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டியதில்லை. தேர்தல் சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களும் டெலிவிஷன் மூலம் அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்கின்றன. கட்சித் தலைவர்களும் டெலிவிஷனின் அவசியத்தை உணர்ந்தவர்களாகக் காமிராவுக்கு எதிரே செல்லு முன்னர் 'மேக் — அப்' போட்டுக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். வாடகைக்கு எடுத்ததோ, விலைக்கு வாங்கியதோ இன்று டெலிவிஷன் இல்லாத வீடு பிரிட்டனில் அநேகமாக இல்லை என்று சொல்லிவிடலாம்.

தேர்தல் விவகாரங்களில் டெலிவிஷன் ஆற்றும் பணி பலதரப்பட்டது. மக்களிடையே அரசியலில் ஆர்வத்தை வளர்க்கும் விதத்தில் சாலைகளில் — முக்கியமான சதுக்கங்களில் மக்களைப் பேட்டி கண்டு அவர்களது அபிப்பிராயங்களை ஒலிபரப்புகிறார்கள். கட்சித் தலைவர்கள் டெலிவிஷனில் தோன்றித் தங்கள் கொள்கைகளை எடுத்துரைக்கிறார்கள். ஆங்காங்கே நடைபெறும் பொதுக்கூட்டங்களின் முக்கிய காட்சிகள் செய்தி நேரத்தில் ஒலிபரப்பாகின்றன. இவற்றிலெல்லாம் தொழிற் கட்சிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் சமமான நேரத்தை ஒதுக்குவதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். லிபரல் கட்சியும் இடம் பெறுகிறது. எனினும் கன்சர்வேடிவ், லேபர் கட்சிகளுக்குத் தரப்படும் நேரத்தைவிடக் குறைவுதான். கம்யூனிஸ்ட் கட்சி வெல்ஷ் தேசியக்கட்சி போன்ற பாராளுமன்றத்தில் ஒரு ஸ்தானம் கூடப் பெறாத கட்சிகள் டெலிவிஷன் காட்சிகளில் இடம் பெறுவதில்லை. தேர்தல் நடைபெற்றதும் முடிவுகளை உடனுக்குடன் வெளியிடுகிறார்கள் டெலிவிஷனிலே.

ஆகக்கூடி பிரிட்டிஷ் மக்கள் தேர்தல் விஷயமாகத் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவற்றுக்கெல்லாம் பெரும்பாலும் டெலிவிஷனையே நம்பியிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. இந்தத் தேர்தலை டெலிவிஷன் தேர்தல் என்று வர்ணிப்பதும் பொருத்தம்தான்.

பத்திரிகைகளும் தங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்கின்றன. எனினும் தலைவர்களை நேருக்கு நேராகப்பார்த்து அவர்கள் கூறுவதை அவர்கள் வாய்மொழியாகவே கேட்பதற்கும் அவர்கள் பேசியதைப் பின்னால் படிப்பதற்கும் வித்தியாசமிருக்கிறதல்லவா? பொதுவாக அரசியல் விவகாரங்களில் டெலிவிஷன் தாண்டிவிட்ட அளவைப் பத்திரிகைகள் பூர்த்தி செய்கின்றன என்று சொல்லலாம்.

இரு கட்சிகளுக்குமிடையே கொள்கையளவில் வேற்றுமைகள் குறைந்து விட்டன என்றால் எந்தப் பிரச்னைகளை மக்கள் முன்னிலையில் தலைவர்கள் விவாதித்தார்கள் என்ற கேள்வி எழும்.



ஜிம் கலாகன், டெட் டெக்ஸ்டர், ஸ்ரீமதி டெக்ஸ்டர் (நன்றி: Western Mail)

ப்ரொஃப்யூமோ விவகாரத்துக்குப் பிறகு கன்ஸர்வேடிவ் கட்சி தலையெடுக்கவே முடியாது என்ற பரவலான எண்ணம் பொய்த்துப் போகும்படி அந்தக் கட்சியைக் கட்டிக் காத்து அதன் மதிப்பை மீண்டும் உயர்த்தியவர் வார்ட் ஹியூம். இந்தத்தேர்தலில் தமக்குப் பிடித்தமானதும் தமக்கு அதிகமாகப் பரிச்சயமுள்ளதுமான அயல்நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு ஆகிய துறைகளில் பிரசாரம் செய்ய எண்ணினார். 'முன்னைப்போதையும் விட பிரிட்டிஷ் மக்களாகிய நீங்கள் சௌகரியமாக வாழ்கிறீர்கள். இன்று அரசாட்சியை வேறு கட்சியிடம் ஒப்படைத்துப் பரீட்சிப்பானேன்?' என்பது கன்ஸர்வேடிவ் கட்சியின் முக்கிய பிரசாரமாக இருந்தது.

தொழிற் கட்சியினரோ, 'கன்ஸர்வேடிவ்கள் நீண்ட நாட்களாகப் பதவியிலிருந்து அது காரணமாகவே மதமதப்புக் கொண்டு விட்டார்கள். புதிய முன்னேற்றமான கருத்துக்களை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. மாறுதலுக்குக் காலம் வந்துவிட்டது. அரசாட்சியில் புதிய ரத்தம் ஓடுவது நல்லது' என்ற கருத்தைப் பரப்பினார்கள்.

பிரிட்டன் தனது அணு ஆயுதங்களை நிர்வகிப்பதில் சுதந்திரம் பெற்று விளங்க வேண்டும் என்பது கன்ஸர்வேடிவ் கட்சியின் விவாதமாகவும் நேடோ நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து அணு ஆயுதங்களை நிர்வகிக்க வேண்டும் என்பது தொழிற் கட்சியின் கோட்பாடாகவும் இருந்தன.

சாதாரண பிரிட்டிஷ் மக்களிடம் இது போன்ற கொள்கைகளெல்லாம் எடுபடவில்லை. நல்வாழ்வு பெற்ற ஒரு சமூகத்தில் சௌகரியமாக வாழும் பிரிட்டிஷ் மக்களுக்கு உள்நாட்டுப் பிரச்னைகள் பெரிய அளவில் ஏதுமில்லாததால் அவர்கள் அயல்நாட்டு விவகாரங்களில் அதிக சிரத்தை காட்டுவார்கள் என்றுதான் நாம் எதிர்பார்ப்போம். ஆனால் பல நூறு ஆண்டுகளாகப் பல நாடுகளைக் கட்டிக் காத்துப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நில அகலங்களைப் பெருக்கிக் கொண்டே போய், இன்று அவ்விஷயத்தில் அலுத்து இருப்பதன் காரணமாகத்தானோ என்னவோ பிரிட்டிஷ் மக்கள் இன்றும் தங்களது உடனடித் தேவைகளைப் பற்றித்தான் அதிகமாகச் சிரத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.

தேர்தல் முடிவுகள் குறித்தும் பெருமளவில் சூதாட்டங்களும் நடைபெறுகின்றன. தேர்தல் காரணமாய்ப் பங்கு மார்க்கெட்டில் உருவாகும் திடீர் மாறுதல்களில் விளையாடுவோரும் ஏராளம்.

ஓட்டுக்கள் எண்ணப்படுவதைக் காணும் ஆவலோடு விசேஷ அனுமதி பெற்று வெல்ஷ் பொறியியல் கல்லூரியினுள் நுழைந்தேன். மையமான பெரிய கூடத்தில் ஓட்டுக்கள் எண்ணப்பட்டன. முதலில் ஒவ்வொரு பெட்டியாகக் காலி செய்து அதிலிருந்த மொத்த ஓட்டுக்களை எண்ணி ஓட்டுச் சாவடியிலிருந்து தேர்தல் அதிகாரி அனுப்பி வைத்த கணக்குடன் ஒப்பு நோக்கிச் சரி பார்த்தார்கள். பிறகு எல்லாப் பெட்டிகளிலுமிருந்த ஓட்டுக்களை ஜிம்கலாகனுக்குப் போட்ட ஓட்டுக்களென்றும் டெட் டெக்ஸ்டருக்குப் போடப்பட்ட ஓட்டுக்களென்றும் தனித்தனியாகப் பிரித்தார்கள். பிறகு மறுமுறை ஓட்டுக்களை எண்ணுவது ஆரம்பமாயிற்று.

இதற்கிடையில் ஒரு பக்கத்தில் ஜிம் கலாகனும் டெட் டெக்ஸ்டரும் அன்யோன்யமான நண்பர்களாக அளவளாவிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் போய் நான் இன்னார் என்று அறிமுகம் செய்து கொண்டு என் கையிலிருந்த ஒரு புத்தகத்தை நீட்டிக் கையெழுத்துப் போடுமாறு கேட்டேன். பிரிட்டனில் தேர்தல் முறைகளை விவரிக்கும் Guide to the General Election என்ற நூல் அது. "இது விவேரனுட் எழுதிய நூல் அல்லவா? மிகச் சிறந்த புத்தகமாயிற்றே" என்று ஜிம் கலாகன் என் பெயரையும் கேட்டறிந்து கொண்டு எழுதினார். நான் தாம்ஸன் ஸ்தாபனத்தில் பத்திரிகைத் தொழிலில் பயிற்சி பெறுகிறேன் என்பதை அறிந்ததும் மகிழ்ந்தவராக, "நல்ல ஸ்தாபனம் அது; உனது பயிற்சி மிகப் பயனுள்ள

தாக இருக்கும்'' என்று கூறி வாழ்த்தினார். அடுத்து டெட் டெக்ஸ்டரின் கையெழுத்தையும் வாங்கிக் கொண்டு திரும்பினேன். நல்லதொரு ஞாபகார்த்தம்தானே இது?

ஓட்டுக்கள் எண்ணப்பட்டு வருகையிலேயே பக்கத்திலிருந்த கட்சி ஏஜண்டுகள் ஓரிருவர் டிரான்ஸிஸ்டர் ரேடியோ மூலமாக மற்றத் தொகுதிகளிலிருந்து வரும் தேர்தல் முடிவுகளைக் கேட்டறிந்து கொண்டிருந்தார்கள். இடையில் குருஷேவ் பதவி துறந்த செய்தியும் கிடைத்துத் திகைத்தோம்.

இரவு ஒன்பதரை மணிக்கு ஆரம்பமான ஓட்டுக்களின் எண்ணிக்கை காலை இரண்டு மணிக்கு முடிவுற்றது. லவாகன் 700 ஓட்டுகளுக்கு மேல் அதிகம் பெற்று வெற்றி யடைந்ததைத் தேர்தல் நடுவமை அதிகாரி அறிவித்தார். லவாகனும் டெக்ஸ்டரும் தேர்தல் ஊழியர்களுக்கும் தங்களுக்காக உழைத்த கட்சித் தோழர்களுக்கும் நன்றி செலுத்தினர். இதன் பிறகு டவுன் ஹாலில் இதே முடிவு நகர மேயரால் வெளியே காத்திருந்த சிறு கூட்டத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. மூன்று மணிக்கு நான் தங்கியிருந்த ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தேன்.

அந்த நேரத்திலும் டெலிவிஷனில் அப்போதைக்கப்போது வெளியாகும் தேர்தல் முடிவுகளை அறிவித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் முடிவு வந்து சேர்ந்ததும் மெஜாரிட்டி எவ்வளவு, சென்ற தேர்தலில் நிலைமை எப்படி இருந்தது, எந்த அளவுக்கு நிலைமை இன்று மாறியிருக்கிறது என்பதையெல்லாம் கூறியதோடு கூடவே அந்த வினாடி வரை எந்த எந்தக் கட்சிக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன என்பதையும் அறிவித்தார்கள். கூடவே எந்தக் கட்சியின் சார்பாக மக்களின் அபிப்பிராயம் சரிகிறது, எந்த அளவுக்கு மெஜாரிட்டி பலம் பெற்று எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்கும் என்று ஜோஸ்யமும் கூறினார்கள். குதிரைப் பந்தயத்தில் எந்தக் குதிரை முன்னால் வரும் என்று துடிப்புடன் பார்ப்பது போல இந்த டெலிவிஷன் நிகழ்ச்சியைக் காணுவது இருந்தது. கிரிக்கெட் மைதானத்தில் 'ஸ்கோர் போர்'டை அடிக்கடி திரும்பிப் பாராதவர் யார்? டெலிவிஷனிலும் சில வினாடிகளுக்கு ஒரு முறை தேர்தல் 'ஸ்கோர் போர்டை'க் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தேர்தல் போட்டி மிக மிக விறுவிறுப்பாகவும் அதி வேகமாகவும் மாலை நாலு மணிவரை நடந்தது. அன்று சரியாக இரண்டு மணி நேரம்தான் நான் தூங்கினேன். ஆனால் கண் விழித்த சமயமே தெரியாத அளவுக்கு டெலிவிஷன் நிகழ்ச்சிகள் ஆவலைத் தூண்டும் விதத்தில் 'டெம்போ'வுடன் அமைந்திருந்தன. தொழிற்கட்சி 25 ஸ்தானங்கள் மெஜாரிட்டி பலம் பெறலாம் என்ற நிலைமையிலிருந்து படிப்படியாகச் சரிந்து ஆட்சி பீடத்தில் அமரத் தேவையான குறைந்தபட்ச 316 ஸ்தானங்களையேனும் பெறுமா என்ற சந்தேகாஸ்பதமான நிலைக்கு விரைந்து பி... ன் நாலே நாலு ஸ்தானங்கள் அதிக மெஜாரிட்டி பலம் பெற்று நிமிர்ந்து நின்றது.

தேர்தல் முடிவுகளை வெளியிட்ட டெலிவிஷன் அதன் விளைவுகளையும் அவ்வப்போது கணித்தது. டெலிவிஷன் பிரதிநிதிகளும் காமிராக்களும் தொழிற் கட்சி, கன்ஸர்வேடிவ் கட்சிக் காரியாலயங்கள், பக்... மார்க்கெட், பிரதம மந்திரியின் அரண்மனை ஆகிய இடங்களில் இருந்து மக்களையும் தலைவர்களையும் படம் பிடித்தும் பேட்டி கண்டும் ஒலிபரப்பினார்கள். ஐரோப்பிய நாடுகள் சில வற்றிலிருந்து கூட அப்போதைய நிலைமையின் விளைவுகள் பற்றித் தொழிற் பிரமுகர்களின் பேட்டிகள் ஒலிபரப்பாயின.

தொழிற் கட்சி 316 ஸ்தானங்கள் பெற்றதும் வார்ட் ஹியூம், பிரதமரில்லமாகிய புகழ் பெற்ற நெ. 10, டௌனிங் தெருவிலிருந்து கிளம்பி அரசியிடம் மந்திரி சபையின் ராஜிநாமாவைச் சமர்ப்பிக்கக் கிளம்பியதை டெலிவிஷனில் காண முடிந்தது. அடுத்த சில வினாடிகளில் வில்ஸனுக்கு அரசியிடமிருந்து அழைப்பு வந்ததும் அவர் அரண்மனைக்குச் சென்று மந்திரி சபை அமைக்கும் பொறுப்பேற்றுத் திரும்பினார்.

இவ்விரு நிகழ்ச்சிகளுக்கிடையில் — பிரிட்டனில் அரசாங்கம் என்று எதுவுமே இல்லாத அந்த ஒருசில நிமிஷங்களில்தான் — சீனா அணுகுண்டு ஒன்றை வெடித்துப் பரீட்சித்த செய்தியும் டெலிவிஷன் வாயிலாக வெளியாகி பிரமிக்கச் செய்தது. புதிய அயல் நாட்டு விவகார மந்திரி யார் என்பது தெரியாததால் இந்தச் செய்தி பிரதம மந்திரியின் இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு அவர் வந்து பொறுப்பேற்று, தக்க நடவடிக்கை எடுக்கக் காத்திருந்தது!

சில மணி நேரங்களுக்குள்ளாக பிரிட்டனில் பல்லாண்டுகளாக இருந்து வரும் சம்பிரதாயப்படி வார்டு ஹியூம் டௌனிங் தெரு பத்தாம் நம்பர் இல்லத்தின் பின் வாயில் வழியாகச் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறினார்; முன் வாயில் வழியாக வில்ஸன் நுழைந்தார்!

இவ்வாறாகப் பதின்மூன்று ஆண்டு (துரதிருஷ்டம் என்!) கன்ஸர்வேடிவ் ஆட்சிக்குப் பிறகு தொழிற் கட்சியின் ஆட்சி பிரிட்டனில் உருவாகியது. குறைந்த மெஜாரிட்டி பலமுள்ள இந்த ஆட்சி அதிக நாள் நீடிக்குமா அல்லது ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் மீண்டும் பொதுத் தேர்தல் நடக்குமா என்பது பற்றி அரசியல் நிபுணர்கள் இரு விதமாகவும் பேசுகிறார்கள். வல்லரசுகளில் ஒன்றான பிரிட்டனில் பலமான அரசாட்சி நடைபெறவில்லை யென்றால் உலகுக்கே நல்லதல்ல என்று கருதுவோரும், குறைந்த மெஜாரிட்டி பலம் இருப்பது சாலச் சிறந்தது: ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் கணப்பொழுதும் அசிரத்தையாக இராமல் விழிப்புடன் காரியங்களைச் செய்வார்கள் என்று கூறுவோரும் உள்ளனர். ஆனால் பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள், பேசுகிறார்கள்?

கேட்க வேண்டுமா? இன்று மழை பெய்யுமா, பெய்யாதா என்பது பற்றித்தான்!





கயல்விழி

அகிலன்

பத்தொன்பதாம் அத்தியாயம்

நட்பு நாடி நடந்தனன்

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"



வெண் கொற்றக் குடையின் நிழலில் இருந்து இளவரசுக்குரிய பட்டத்து யானையின் மீது பவனி வந்து பழகியவன்தான் சுந்தர பாண்டியன். இப்போதும் கூட அவனுடைய தலைநகரத்தில் அவனுடைய குடையும் குஞ்சரமும் அவனுக்காக ஏங்கிக் கொண்டுதான் இருந்தன. அவனுக்கு ஏற்றம் தந்த பெருமை பெறுவதற்கு எப்போதுமே அவை சித்தமாகக் காத்திருந்தன.

ஆனால் அவனோ குடை நிழலின்றி மர நிழல் தேடி அலைந்து கொண்டிருந்தான். குஞ்சர மின்றி நடை மெலிந்து ஒவ்வோர் ஊராக நகளிக்கொண்டிருந்தான். கங்காபுரியிலிருந்து புறப்பட்டவன் வடக்கே அதன் சிற்றரசான திருமுனைப்பாடி நாட்டை நோக்கி நடந்தான். இப்போது அவன் இளமை முறுக்கும் நிமிர்ந்த நடையும் கொண்ட புலவன் பைந்தமிழ்க் குமரன் அல்லன். சோழ நாட்டிலும் அவனால் அந்த உருவில் நடமாட முடியாது. அவன் கிழவன்; வளைந்த முதுகும், நரை படர்ந்த கேசமுமாக அவன் தடியூன்றித் தடுமாறினான்!

தாடியும் மீசையும் வெண் பஞ்சாக மாறிவிட்டன. நெற்றியிலும் முகத்திலும் சுருக்கங்கள். ஒரு துணியை முடிந்து தோளில் போட்டுக் கொண்டு அதற்குள் ஒரு பெரிய திருவோட்டுக் கப்பரையை வைத்திருந்தான். தேகமெல்லாம் நெற்றியெல்லாம் திருநீறு நீக்கமற நிறைந்திருந்தது. கந்தல் உடை; கந்தல் மூட்டை; கையில் ஒரு கழி வேறு இருந்தது.

காவலர்கள் அவனைத் தாண்டிக் கொண்டு பல முறை குதிரைகளில் சென்றார்கள். எதிரிலும் வந்தார்கள். அவனுடைய கொப்பரைக் குள்ளிருந்த கம்பரின் சுவடியை அவர்கள் கண்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ, தெரியாது. பாண்டியரின் முத்தாரம் அதற்கடியில் பதுங்கி யிருப்பது பற்றியும் அவர்கள் அறியவில்லை. அவன் நடந்தான்; தினந்தோறும் நடந்தான்; ஊர்களுக்குள் நடக்கும்போது மட்டிலும் முதுகை வளைத்துக் கொண்டு நடக்க வேண்டியிருந்தது.

சத்திரம் சாவடிகளில் கண்காணிப்பு இருக்கக் கூடுமென்பதற்காகச் சில நாட்கள் உணவுக்கும் கூரைக்குமே அவன் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வழியில் ஏதாவது வீடுகள் தென்பட்டால் திண்ணையில் சற்றுத் தங்குவான். அவர்களாக விரும்பிக் கொடுத்தால் உண்டு களைப்பாறுவான். பிறகு மீண்டும் நடப்பான். குமரிக்கடல் முனையிலிருந்து புறப்பட்டு அவன் காஞ்சி வழியாகக் காசிக்குப் போவதாய்க் கேட்போரிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"அவ்வளவு தொலை தாங்காது; வழியிலேயே உங்களுக்கு மோட்சம் கிடைத்து விடும்!" என்று கூறி நகைத்தார்கள் சிலர். அவனும் சேர்ந்து நகைத்தான் அவர்களோடு.

'கங்காபுரிக்கும் காஞ்சிக்கும் இடையில்தான் நான் செல்ல வேண்டிய காசி இருக்கிறது. அதை அடுத்து ஓடும் தென் பெண்ணைதான் என்னுடைய கங்கை. மோட்சம் கிடைப்பதும் அங்கு போன பிறகுதான் தெரியும்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் அவன்.

ஆம்; பல்லவர் வழி வந்த கோப்பெருஞ்சிங்கன் என்ற மாவீரனைத் தேடி அவனுடைய திருமுனைப்பாடி நாட்டுக்குத்தான் சுந்தர பாண்டியன் சென்று கொண்டிருந்தான். கோப்பெருஞ் சிங்கன் கூடலூரைச் சார்ந்த சேந்த மங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்தார். சிங்கம் வலிமை மிகுந்த சிங்கம்தான். ஆனால் அது தனித்திருந்தது. வடக்கே கோசல நாட்டு வல்லாளதேவர் என்ற வேங்கை ஒரு புறமும், தெற்கில் குலோத்துங்க

சோழராகிய வேங்கை மறுபுறமும் அந்தச் சிங்கத்தை இடையில் நிறுத்தி நெருக்கிக் கொண்டிருந்தன. கோப் பெருஞ் சிங்கம் சோழ நாட்டு வேங் கைக்குப் பணிவு காட்டி அதன் சிற்றரசாக நடந்து கொண்டது. ஆனால் அந்தப் பணிவு நம்பக் கூடாத பணிவென்பது குலோத்துங்கருக்குத் தெரியும். ஆகவேதான் வடக்கே காஞ்சிபுரத்தில் கோசல சாம்ராஜ்யத்தின் படை



களைக் கொண்டு வந்து நிறுத்தச் செய்திருந்தார் குலோத்துங்கர்.

தெற்கே கங்காபுரியில் சோழப் பெரும் படை; வடக்கே காஞ்சியில் கோசலப் பெரும்படை. கோப்பெருஞ் சிங்கம் இந்த இரு படைகளுக்கிடை யில் அகப்பட்டுக் கூண்டிலடைக்கப் பட்ட சிங்கமாகி விட்டது, அதன் கர்ஜனை கூட வெளியில் கேட்பதில்லை.

பணிவும் விசுவாசமுமுள்ள சிற்றர சாகவே அது சோழ சாம்ராஜ்யத் துக்குத் திறை செலுத்தி வந்தது. போர்க் காலங்களில் நன் படைகளை யும் அனுப்பி வீரர்களைச் சோழரின் வெற்றிக்காகப் பலி கொடுத்தது.

கோளூன்றித் தடுமாறிச் சென்ற கிழவனுக்குக் கோப்பெருஞ் சிங்கனிடம் கிடைக்கப் போகும் வரவேற்புப் பற்றி யும் தடுமாற்றமாகத்தான் இருந்தது. குலோத்துங்க சோழரின் நேரடிக் கண் பார்வையில் இருப்பவர் கோப் பெரும் சிங்கன். பேரரசைப் பகைத் துக்கொண்டால் அவரால் தம்முடைய நாட்டை ஒரு மாதம் கூடக் காப் பாற்றிக் கொள்ள முடியாது. அந்த நிலையில் உள்ளவரிடம் தஞ்சம் புகச் சென்றால் என்ன நேரும்?

என்ன நேர்ந்தாலும் சரி; வேறு வழியில்லை; வேறு துணை இல்லை. வேறு நட்பில்லை. நடையில் வேகம் பிறந்தது அவனுக்கு. 'தான் கிழவன்' என்பதையும் மறந்து விட்டான்!

காட்டு வழி செல்லும்போது கம்பரை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அப்போது அவன் சென்று கொண்டிருந்த வழி அவனுக்கு மாளிகைச் சிறையில் கம்பர் காட்டிய வழி. இராமன் ஒருவனும், தனி மனிதனும், இலங்காபுரி ராஜ்யத்தை ஆட்சி செய்தவனின் கொடுமையை எவ்வாறு அழிக்க முடிந்தது? நட்பை வளர்க்கும் பண்பில் இராமன் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையை எப்படியோ பெற்று விட்டான் இளைஞன். குகன், அநுமன், சுக்ரீவன் விபீஷணன் முதலியோரின் நட்பை இராமன் பெற முடியுமானால் நாமும் ஏன் கோப்பெருஞ்சிங்கனின் நட்பைப் பெற முடியாது?

அதே சமயம் வலிமை வாய்ந்த சேந்தமங்கலம் கோட்டைச் சிறையைப் பற்றியும் அவன் கேள்வியுற்றிருந்தான். சோழ நாட்டு மாளிகைச் சிறையிலிருந்து தப்பியதற்குப் பலன் சேந்தமங்கலம் கோட்டைச் சிறையாகவும் இருக்கலாம். எளிதில் தப்ப முடியாத சிறை அது.

சேந்தமங்கலத்தில் கோப்பெருஞ்சிங்கனைச் சந்திக்கும் வாய்ப்புக்காக இரு தினங்கள் நகருக்குள் அதே கோலத்தில் அலைந்தான். சிவ பக்தியில் ஊறித் திளைக்கும் உள்ளம் கொண்டவர் கோப்பெருஞ்சிங்கன் என்பது தெரிந்தது. சிவ பக்தி என்றால் அளவு கடந்த சிவ பக்தி. பக்தர்களின் பக்தராம் அவர். சேந்தமங்கலத்தில் அவனுடைய தோற்றத்துக்கு நடந்த உபசாரங்களைக் கொண்டே, ஓரளவு அதன் அரசரை அறிந்தான் பைந்தமிழ்க் குமரன்.

சபை முடிந்து கோப்பெருஞ்சிங்கன் தம்முடைய ஓய்வுக்காகத் திரும்பிக் கொண்டிருந்தார். தோற்றம் சிங்கத்தின் தோற்றம்தான்; உடற்கட்டிலும் அவர் சிங்கமே; நாற்பத்தைந்துக்கு மேல் ஐம்பது வயதுக்குள்ளிருக்கலாம்.

அரண்மனையின் வெளி வாயிலில் காவலர்கள் காசி யாத்திரை செல்லும் இந்த முதியோரைத் தடுக்கவில்லை. விரைந்து சென்று அரசனின் அருகில் நின்றான் முதியவன். ஆசி வழங்குவது போல் தன் கரம் உயர்த்தினான். தன் காசி யாத்திரைக் கதையையும் வழியில் ஆலயங்களையும், பக்தர்களையும் தரிசித்துச் செல்லும் கதையையும் நம்பும் விதமாகக் கூறினான்.

''வாருங்கள்! வாருங்கள்!!'' என்று மலர்ந்த முகத்தோடு அவனைத் தம்முடைய மாளிகைக்கு அழைத்துச் சென்றார் கோப்பெருஞ்சிங்கன். அவன் ஆசனத்தில் அமருவதற்கு முன்பாக நெடுஞ்சாண்கிடையாக அவன் பாதங்களில் விழப்போனார் அரசர்.

பதறினான் பைந்தமிழ்க் குமரன். அவர் கீழே விழுவதற்கு முன்பாக மின்னலைப் போல் தான் கீழே விழுந்து அவர் பாதங்களிரண்டையும் இறுகப் பற்றிக் கொண்டான்.

''அரசே! நான் சிவபக்தனல்லன்! - என்னை மன்னித்தருள வேண்டும். நான் வேடதாரி! வேடதாரி!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினான்.

மலைத்து நின்றார் கோப்பெருஞ்சிங்கன். கண்கள் சிவந்தன.

''நான் வயதில், அநுபவத்தில், தகுதியில் எல்லாவற்றிலுமே தங்களை விட இளையவன். தங்களுடைய பாதங்களில் விழ வேண்டியவன் நான்: தங்களிடம் தஞ்சம் புக வந்திருக்கிறேன்.''

ஒன்றும் புரியவில்லை அரசருக்கு. ஏமாற்றப் பட்டுவிட்டதால் கோபம் ஒரு புறமும், உண்மையைக் கூறியதால் அநுதாபம் மறுபுறமும் அவரிடம் பொங்கின. கடைசியில் அநுதாபமே வென்றது.

''அமருங்கள்!'' என்று கர்ஜித்தார். ''யார் நீங்கள்? உங்களுக்கு என்னிடம் என்ன வேலை? ஏன் இந்த வேடம்?''

''நான் பாண்டிய நாட்டுப் புலவன். என் பெயர் பைந்தமிழ்க் குமரன். சோழ நாட்டிலிருந்து சிறை தப்பித் தங்களைத் தேடி வந்திருக்கிறேன். சிறையிலிருந்து தப்பியவுடன் புனைந்து கொண்ட வேடமிது. தாங்கள் அநுமதித்தால் தனித்துச் சில செய்திகள் கூற வேண்டும்.''

நெடு நேரம் அவர் கற்சிலையாக அமர்ந்திருந்தார். அவனையே உற்று நோக்கினார். பின்னர், ''வேடத்தைக் கலையுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

அருகிலேயே தண்ணீர் இருந்தது. வெண் தாடி கறுப்பாக மாறியது. பஞ்சான கூந்தல் கார்மேக நிறம் பெற்றது. முகத்தின் சுருக்கங்கள் நொடிப் பொழுதில் மறைந்தன; பரந்து விரிந்த மார்பெங்கும் விழுப்புண்களின் தழும்புகள்.


நாளொரு மேனியாக...,
எழிலோங்கச் செய்வது
ரெக்ஸோனா
Rexona
GOOD FOR YOUR SKIN
கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனா.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனாவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.
கேடில் அடங்கிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு உகந்தது.
24-140 TM
இந்துஸ்தான் லீவர்

அவனையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தவர், அவன் வேஷத்தைக் கலைத்த தன்னவர். ''சக்கரவர்த்திகள் உங் களுக்கு விலங்கிட்டு உடனடியாகக் காஞ்சிக்கு அனுப்பி வைக்கும்படி எனக்குக் கட்டளை அனுப்பி யிருக் கிருர்கள்'' என்ருர்.

பைந்தமிழ்க்குமரன் இதைச் சிறி தும் எதிர்பார்க்கவில்லை. அவன் அங்கு வருவதற்கு முன்பே அவனைக் கைப் பற்றுவதற்குக் கட்டளை காத்திருக் கிறது. தானுகத் தேடி வந்து குலோத் துங்கர் விரித்து வைத்திருந்த வலைக் குள் கண்களைத் திறந்து கொண்டே விழுந்துவிட்ட உணர்ச்சி அவனுக்கு.

நாட்டை நாடி நடந்தவனது கால்கள் இப்போதுதான் வலிக்கத் தொடங் கின. புலிக் குகையிலிருந்து இளம்பி வந்தவன் நேராகச் சிங்கத்தின் வாயைப் பிளந்து கொண்டு அதற்குள் தலையை விட்டுவிட்டான்.

''தங்கள் சித்தம்!'' என்று கலங் காது கூறினுன் புலவன்.

இருபதாம் அத்தியாயம்

கோப்பெருஞ்சிங்கம்

சிங்கம் சிறுமீனின் துணிவைக் கண்டு திகைத்து விட்டது. சக்கரவர்த்தியின் கட்டளையாகத் தூண்டிலைப் போட்ட வுடன் பாண்டிய நாட்டு மீன் குஞ்சு துடிதுடிக்கும் காட்சியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் கோப்பெருஞ்சிங்கன். இளைஞனே. ''தங்கள் சித்தம் அது வாளுல் என்னை விலங்கிட்டுச் சோழ நாட்டுக்கே அனுப்பி வைக்கலாம்!'' என்ருன். இதை அவர் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

''இதில் என் சித்தம் என்ன இருக் கிறது? இது சக்கரவர்த்திகளின் கட் டளை. * திருமுனைப்பாடி நாடு சோழ சாம்ராஜ்யத்தோடு இணைந்திருக்கும் அரசு. சக்கரவர்த்திகளின் கட்டளையை நிறைவேற்றவேண்டியது என் கடமை.''

''கடமை என்ருல் அடைக்கலம் புகுந்தோருக்குப் புகலிடம் அளிப்ப தும் ஒரு கடமைதான். இந்த இரு கடமைகளில் எது ஏற்றது என்று முடிவு செய்வது தங்களது சித்தத்தைப் பொறுத்திருக்கிறது.''

தமது திகைப்பை வெளிக்காட்டா மல், ''அமர்ந்து பேசுங்கள்'' என்று ஆசனத்தைச் சுட்டிக் காட்டினுர்.

''அரசே! அமர்ந்து பேசும் உரிமை யைத் தாங்கள் இன்னும் எனக்கு அளிக்கவில்லை. பல துன்பங்களை மேற் கொண்டு தங்களைச் சந்திக்க வேண்டு மென்பதற்காகவே சிறை தப்பி நான் இங்கு வந்தேன். மறைந்து வாழ்ந்து என்னை மட்டும் காத்துக் கொள்ள விரும்பி யிருந்தால் எனக்குத் தங்கள் துணை அவசியமற்றது. தாங்களோ என்னை விலங்கிட்டு அனுப்பக் காத்திருக் கிறீர்கள். குற்றவாளிக்கு ஆசனம் எதற்கு?''

புலவனின் முகத்தில் அச்சமில்லை. வேதனை புலப்பட்டது. அதைக் கவ னித்தார் கோப்பெருஞ்சிங்கன்.

''என்னைக் காணமுயன்ற காரணம்?''

''திருமுனைப்பாடி நாடு, தென் பாண்டி நாடு இந்த இரு நாடுகளின் தலைவிதியை முடிவு செய்ய வேண்டிய நாள் இந்த நாள். இதை மிகவும் புனிதமான நாள் என்று நான் நம்பி யிருக்கிறேன். தங்கள் சித்தம் எதுவோ அதுவே இறைவனின் சித்தமுமாகும்.''

''நாட்டின் தலைவிதிக்கும் புலவ ருக்கும் என்ன தொடர்பு?''

''தொடர்பு இருக்கிறது. புறத் தால் சோழரிடம் கட்டுப்பட்டு ஓர் சிற்றரசாகியுள்ள தங்களிடம் நான் வரவில்லை. அகத்தால் யாருக்கும் கட்டுப்படாது விடுதலை வீறுகொண்ட கோப்பெருஞ்சிங்கத்தையே நான் சந் திக்க விரும்பினேன். அகத்தில் அழகு இருந்தால் அதை உணரும் ஆற்றல் புலவனுக்கு உண்டு.''

''என் அகத்தில் என்ன இருக்கிறது?'' என்று விளையாட்டாக்க் கேட்டார் அரசர்.

முகத்தை உற்று நோக்கி விட்டு அவன் கூறினுன்:

''கோசல சாம்ராஜ்யமும் சோழ சாம்ராஜ்யமும் இணைந்து நின்று பல

---

* திருமுனைப்பாடி நாடு அப்போது மாயூரத்திலிருந்து காஞ்சிமா நகர்வரை யிலுமுள்ள நிலப்பரப்பைத் தன்னிடம் கொண்டிருந்தது. கூடலூர், சேந்தமங் கலம், விருத்தாசலம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய நகரங்களையும் அவற் றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஆட்சி செய்து வந்தவர் கோப்பெருஞ்சிங்கன்.

சிற்றரசுகளை விழுங்க முடியுமானாலும், நாமும் ஏன் விடுதலை உணர்ச்சி கொண்டு மற்றொரு நாட்டோடு தோளோடு தோள் நின்று நமது சக்தியை வளர்த்துக்கொள்ளக் கூடாது என்று இந்தச் சிங்கம் நினைப்பதுண்டு. அந்தத் துணை நாடு பாண்டிய நாடாக இருக்கக் கூடாதா என்ற எண்ணமும் இதற்கு உண்டு! — குலோத்துங்கருக்குப் பிறகு இந்த ஆண்மையற்ற ராஜ ராஜனின் ஆட்சியிலிருப்பதை இது அறவே வெறுக்கிறது.''

சிங்கம் திடீரென்று பாய்ந்து பைந்தமிழ்க்குமரனை அன்போடு தழுவிக் கொண்டது. அவர் பிடியில் அகப்பட்டு மூச்சுத் திணறினான் இளைஞன். அவர் அவனைத் தூக்கிக் கொண்டு போய் ஆசனத்தில் அமர்த்திவைத்தார். அப்போது கோவில் மணி ஓசை தொடர்ந்தாற்போல் முழங்கத் தொடங்கியது. மெய் சிலிர்த்தது பைந்தமிழ்க் குமரனுக்கு.

''புலவரே! உம்முடைய அகத்திலிருப்பதும் தெரிந்து விட்டது'' என்று உற்சாகமாகக் கூறினார் கோப்பெருஞ்சிங்கன். ''போருக்குப் பிறகு பாண்டிய நாட்டுக்கு நீர் எழுச்சியூட்டி வருவதும் என் செவிகளுக்கு எட்டாமலில்லை. ஆனால் குலசேகர பாண்டியர் எதையெல்லாம் சிந்திப்பதற்கு அஞ்சுகிறாரோ, அதையெல்லாம் நீர் சிந்தித்திருக்கிறீர்.''

''பாண்டியர் சிந்திப்பதற்கு அஞ்சியவரில்லை. தங்களைப் போலவே செயலாற்றுவதற்கு ஏற்ற காலம் பார்த்திருக்கிறார்.''

கோப்பெருஞ்சிங்கனின் நெற்றி சுருங்கியது.

பைந்தமிழ்க் குமரன் தன்னுடைய கந்தல் துணி மூட்டைக்குள்ளிருந்து ஒரு முத்தாரத்தைக் கையிலெடுத்தான். அதை அவரிடம் கொடுத்து, ''தாங்கள் அணிந்திருக்கும் ஆரமும் இதுவும் ஒன்று போலத்தானே இருக்கின்றன?'' என்றான். அவர் ஒப்பிட்டுப் பார்த்தார்.

''குலசேகர பாண்டியரின் முத்தாரம் இது. இதைப் போல் ஒன்றை அவர் தங்களிடம் பல ஆண்டுகளுக்கு முன்பு அன்பின் நினைவாகக் கொடுத்தார். போர் நடப்பதற்கு நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது. தங்களுக்கும் நினைவிருக்கும்.''

''ஆமாம். அப்போது இளவரசன் சுந்தர பாண்டியன் உயிரோடிருந்தான்'' என்று பெருமூச்சு விட்டார் கோப்பெருஞ்சிங்கன். ''அவனுடைய கரங்களால் அவனே எனக்கு மாலை அணிவித்தான்.''

''தாங்கள் அவனை மடிமீது வைத்துக்கொண்டு தங்கள் அன்பைப் பொழிந்தீர்கள். தங்கள் குமாரத்திக்கு அவனை விட அதிகமான வயதாகிவிட்டதே என்று வருந்தினீர்கள். இல்லாவிடில் தங்களது மருமகனாக அவனை ஆக்கிக் கொண்டிருக்கலாம் என்று கூறினீர்கள். மண உறவு இல்லாவிட்டாலும் மன உறவு வளரும் என்றார் பாண்டியர்.''

அவனுடைய ஒவ்வொரு சொல்லும் வியப்புக்கு மேல் வியப்பாக இருந்தது அவருக்கு.

''அப்போது பாண்டியரையும் சுந்தர பாண்டியனையும் தவிர வேறு யாரும் இல்லையே! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''சுந்தர பாண்டியனும் உடன் இருந்தானல்லவா?''

''அவனைத்தான் வீணாகப் போரில் பலி கொடுத்து விட்டாரே பாண்டியர்! அவர் போர் தொடங்கியதும் அதில் தன் நம்பியை இழந்ததும் நான் விரும்பாத நிகழ்ச்சிகள். அவசரப்பட்டு விட்டார்.''

''மக்களுக்குப் போராட்ட உணர்ச்சி தேவையாக இருந்தது. அதனால் நடந்த போர் அது. சுந்தர பாண்டியனையும் அவர் பலி கொடுக்கவில்லை.''

''என்ன?''

''சுந்தர பாண்டியன் இறந்துவிட்டதாகத்தான் பாண்டியரும் நம்பிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவன் இறக்கவில்லை. உயிரோடு இருக்கிறான். அதிலும் தங்களுக்கு அருகிலேயே இருக்கிறான். அவனுக்குத் தாங்கள் ஆசனம் அளித்தீர்களே, அதை அவன் வெறும் ஆசனமாகக் கருதவில்லை. தன்னுரிமை பெற்றுவிட்ட கோப்பெருஞ்சிங்கர் அதே போல் உரிமை பெற்ற பாண்டிய நாட்டின் சிம்மாசனத்தை அவனுக்கு அளிப்பதாகவே கருதி மகிழ்கிறான்.''

''அப்போது ஆலய மணியும் அடித்ததே!'' என்று பூரிப்போடு கூறிக் கொண்டு அவனருகில் வந்து அமர்ந்தார் கோப்பெருஞ்சிங்கன்.

''இறைவனும் நம்முடைய முயற்சிக்குத் துணை நிற்பதாகக் கூறுகிறார்'' என்றான் சுந்தர பாண்டியன்.

அவனே சுந்தர பாண்டியன் என்பதை அறிந்ததும், கோப்பெருஞ்சிங்கனுக்கு, அந்த இளைஞனின் வய

தீபாவளி விற்பனே!

பட்டுச் சேலைகளுக்கு

நல்லியின் புதிய ஷோ ரூம்

(பட்டுச் சேலைகளுக்கு மட்டுமே பிரத்தியேகமானது)

NALLI SILKS

SILK SAREES



நல்லி சில்க்ஸ்

82, ராயப்பேட்டை ஹைரோட்

லஸ் - மயிலாப்பூர் - போன் 74862 - சென்னை - 4

1-11-64 ஞாயிற்றுக்கிழமை விற்பனே உண்டு!



தமிழ்க் கடவுள்

தமிழர்களின் தெய்வமாகிய முருகக் கடவுள் புகழ் வாய்ந்தவர். சக்தி மிக்கவர்.

தமிழ்நாட்டிலே தமிழர்களின் மூலதனத்தில் தமிழர்களால் தயாரிக்கப்படும் ஆர்.எஸ். பதி மருந்து புகழ் வாய்ந்தது. சக்தி மிருந்தது.

தலைவலி, ஜலதோஷம், ஜுரம், கைகால் வலி முதலியவைகளுக்கு 55 ஆண்டுகளாக மக்களின் நன்மதிப்பையும் அமோக ஆதரவையும் பெற்றுள்ளது.

புட்டி 1க்கு விலை 82 காசுகள்

(எல்லா வரிகளும் உள்பட)

- பொதுமக்கள் 82 காசுகளுக்குமேல் கொடுத்து வாங்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.
- போலிகளைத் தவிர்க்க, நம்பிக்கையான வியாபாரிகளிடம் மட்டுமே வாங்குங்கள்.
- தற்போழுது டிரக் ஸ்டோர்களிலும், இங்கிலீஷ் மெடிகல் ஷாப்புகளிலும்கிடைக்கிறது



ஆர். எஸ். பதி அன் கோ.

(ஸ்தாபிதம்: 1909)

மதுரை-1 - - - - - மதராஸ்-3



BSA பி.எஸ்.ஏ.

பிரபலமான பி.எஸ்.ஏ. சைக்கிள் பல வருடங்களுக்கு பிறகு திரும்பவும் வந்துள்ளது! ஒரு தலைமுறைக்கு முன் இளைஞர்களின் மனதைக் கவர்ந்த இந்த எழில் வாய்ந்த பி.எஸ்.ஏ. சைக்கிள் இலேசானது; துரிதமாக செல்லவல்லது; உறுதியானது. உற்சாகமான இளைஞர்கள் அநாயாசமாக சைக்கிள் ஓட்டும் மகிழ்ச்சியை மீண்டும் அடைய, பி.எஸ்.ஏ. இப்போது இந்தியாவிலேயே தயாராகிறது. பி.எஸ்.ஏ.வை நாடுங்கள். அது அமைப்பிலும், வேலைப்பாட்டிலும் உன்னதமானது. மதிப்பிலும் சிறந்தது. உலகில் இப்பகுதியில் சிறந்த சைக்கிள்களைத் தயாரித்து வருபவர்களால் இப்போது பி.எஸ்.ஏ. சைக்கிள் அதன் உயர்ந்த தரத்திற்கேற்ப தயாரிக்கப்படுகிறது.

தயாரிப்போர்: டி.ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53

சிறந்த சைக்கிள் வேண்டுமா?
பி.எஸ்.ஏ.வைத் தேர்ந்தெடுங்கள்



பி.எஸ்.ஏ. உங்கள் மனைக்குரிய உயர்ந்த சைக்கிள்







1. சென்னை முதல் மந்திரி திரு பக்தவத்சலம் அவர்களின் அறுபத்தெட்டாவது பிறந்த தின விழாவையொட்டி நடந்த பாராட்டு விழாவில் திரு காமராஜர் அசோக ஸ்தூபியை வழங்குகிறார். 2. தேசியப் பொருளாதார ஆராய்ச்சி கௌன்சில் டைரக்டர் ஜெனரல் டாக்டர் பி.எஸ். லோகநாதன் அவர்களின் எழுபத்தோராவது பிறந்த நாள் வைபவத்தில் ராஜாஜி பேசுகிறார் 3. இன்ப நிலையத்தார் தயாரித்துள்ள 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' புத்தக வெளியீட்டு விழாவில் ராஜாஜியும் ம. பொ. சியும்.

தளவு இளமை திரும்பி விட்டது போலிருந்தது. தம் வாழ்நாளில் என்றுமே அவர் இவ்வளவு குதூகலம் அடைந்ததில்லை.

''சரி, இளவரசே! உடனடியாக உங்களுடைய வேஷத்தைப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்றார் அரசர். ''இங்கே எப்போதும் குலோத்துங்கருடைய ஒற்றர்களின் நடமாட்டம் இருக்கும். நாடும் அருகில் இருக்கிறது. என்மீதும் அவருக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் புலவராக இங்கே உலவ முடியாது. முதியவராகவே மாறிவிடுங்கள்'' என்று கூறிச் சிரித்தார்.

தாமே எழுந்து சென்று அவனுடைய மாறு வேடத்திற்குத் துணை புரிந்தார். பின்னர் உணவை வரவழைத்து விட்டுப் பணியாட்களை வெளியே அனுப்பினார். அவனை உபசரித்துக் கொண்டே பேசலானார்.

''சோழ சாம்ராஜ்யத்தோடு மட்டும் நாம் போராடிப் பயனில்லை. கோசல சாம்ராஜ்யத்தின் படை பலம் இதை விட ஒரு மடங்கு அதிகமானது. அவர்களோ தங்கள் படைகளில் ஒரு பகுதியைக் காஞ்சிபுரத்திலும், மற்றொரு பகுதியை உறையூருக்கு அருகிலுள்ள கண்ணபுரத்திலும் நிறுத்தியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் காரணத்தோடுதான் குலோத்துங்கர் இடம் கொடுத்திருக்கிறார். குலோத்துங்கருக்குப் பிறகு இராஜ ராஜனுக்குத் துணை நிற்கப் போகிறவன் வீரநரசிம்மன். இராஜ தந்திரத்திலும் வீரத்திலும் அவன் தந்தை வல்லாள தேவரும் நம் குலோத்துங்கரும் ஒன்றாகச் சேர்ந்தால் எப்படியோ, அப்படிப்பட்டவன்.''

சுந்தர பாண்டியன் சிரித்தான். ''பகைவர்களின் வலிமையை மட்டும் தானே கூறுகிறீர்கள்? நம்முடைய வலிமை இன்மையைக் கூறவில்லையே?'' என்றான். ''தங்களிடமாவது சில ஆயிரம் பேர்கள் உள்ள சிறு படை உண்டு. அந்த வீரர்களும் தங்களிடம் ஊதியம் பெற்றுக் கொண்டு சோழ சாம்ராஜ்யத்துக்காகப் போராடும் வழக்கம் உள்ளவர்கள்! ஆனால் எங்களிடமோ இந்தச் சிறு படையும் இல்லை; படையில்லாப் பாண்டியர்கள் நாங்கள்!''

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆனால் அவர்களுடைய சிரிப்பு வெறும் பகற் கனவு காணுகிறவர்களின் சிரிப்பாக இல்லை.

''என்றாலும் நாம் வெற்றி பெறுவோம்!'' என்று முழங்கினான் சுந்தர பாண்டியன். ''எனக்கு என் மனத் திண்மையில் நம்பிக்கை இருக்கிறது. தங்களுடைய மனத் திண்மையில் நம்பிக்கை இருக்கிறது. நம் இருவருக்குமே இறைவனிடம் நம்பிக்கை இருக்கிறது. எவ்வளவு துன்பங்கள் எதிர்ப்பட்டாலும் நாம் தகர்த்துவிட்டு வெற்றி பெற முடியும்.''

''இளவரசே! இனி இந்த உயிர் உடலில் உள்ளவரையில் என் துணை உங்களுக்கு உண்டு. வாழ்விலும் தாழ்விலும் என்னை நீங்கள் நம்பலாம்.''

அவரது பெரும் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான் சுந்தர பாண்டியன். (தொடரும்)





நங்கையர் செய்யும் நற்பணிகள்


குழந்தைகள் மனத் தத்துவத்தை அழகாகச் சித்திரிக்கும் ஓர் அருமையான துணுக்கு ரீடர்ஸ் டைஜஸ்டில் வெளியாகியிருந்தது. பூங்காவில் இளம் சிறுவர் சிறுமியர் துள்ளித் திரிந்து ஆடுவதைக் கண்டு துயரம் தாங்காமல் அழுதது கைவண்டியிலுள்ள ஊனமுள்ள குழந்தை. ஆயா அதை எவ்வளவு சமாதானப் படுத்தியும் ஓயவில்லை. அச்சமயத்தில் மற்றொரு குழந்தை வந்து. ''ஆஹா! இந்த வண்டியிலுள்ள சிறுமிக்குத்தான் எவ்வளவு அழகா தலைமயிர் சுருண்டு சுருண்டு இருக்கு!'' என்று வியந்ததும் அந்த ஊனச் சிறுமியின் அழுகை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. குழந்தைகள் உலகம் அத்தனை விசித்திரமானது! விளையாடிக் களிப்பதில் அதற்குள்ள ஆசையும் அளவிட முடியாதது.



ஸ்ரீமதி சாவித்திரி

இந்தக் குழந்தைக் குலம் ஆடி களித்து மகிழுவதற்கு மயிலாப்பூரில் குழந்தைகள் கிளப் ஒன்றை உருவாக்கினால் என்ன என்ற சிந்தனை ஸ்ரீமதி சாவித்திரி ஸ்ரீநிவாசனுக்கு எழுந்தது. கல்லூரியில் அவர் இண்டர் படித்துப் பிறகு வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அவருக்குத் திருமணம் ஆயிற்று. திருமணத்துக்குப் பிறகு படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விட்டுக் குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்ட போதுதான் இப்படிப்பட்ட எண்ணம் அவருக்கு முகிழ்த்தது. அப்பொழுது 1947ம் வருஷம்; நமக்குச் சுதந்திரம் கிடைத்த சமயம். குழந்தைக் குலமும் வீட்டிலிருந்து விடுதலை பெற்று ஓர் இடத்தில் சுதந்திரமாகக் களித்து விளையாட வேண்டும் என்ற ஆசை அவருக்குப் பிறந்ததில் வியப்பில்லை!

ஸ்ரீமதி சாவித்திரி ஸ்ரீனிவாசன் தம் மனத்திலுள்ள குழந்தைகள் கிளப் ஆசையைத் தம் அத்தை ஸ்ரீமதி பட்டு பாலகோபாலிடம் தெரியப்படுத்தினார். இருவரும் சேர்ந்து குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள், கலை வகுப்புகள் அமைப்பது பற்றி உரையாடினர். இதற்கு வைடமின் 'ப' அவசியமாயிற்றே! ஸ்ரீமதி சாவித்திரியின் தாத்தா பிரபல வழக்கறிஞர் ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் தம் 'ஆதி' வந்த கரத்தினால் முதலில் இந்தக் குழந்தைகள் கிளப்புக்கு ஐந்நூறு ரூபாய் நன்கொடை வழங்கினார். பிறகு மயிலாப்பூர் வேங்கடாசல முதலித் தெருவிலுள்ள மைதானத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு குழந்தைகள் கிளப் செயலாற்றத் தொடங்கி விட்டது. வருங்காலச் செல்வங்கள் நல்ல முறையில் உருவாக வேண்டுமானால் தெருவுக்கு ஒரு பிருந்தாவனம் அமைய வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் கூறியிருக்கிறார்களல்லவா? தெருவுக்கு ஒரு பிருந்தாவனம் அமைக்க முடியாவிட்டாலும் ஸ்ரீமதி சாவித்திரி ஸ்ரீநிவாசன் மயிலாப்பூருக்கு ஒரு குழந்தைகள் பிருந்தாவனத்தை உருவாக்கித் தந்தார்.



ஸ்ரீமதி பட்டு

மயிலாப்பூரில் 1947ம் வருஷம் தொடங்கிப் பதினேழு வருடங்களாகச் சிறப்புடன் முன்னேறி வரும் இந்தக் குழந்தைகள் கிளப்பின் பிரதம நிர்வாகி ஸ்ரீமதி பட்டு பாலகோபாலைச் சந்தித்து, குழந்தைகள் கிளப்பின் வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

''நாங்கள் நடத்தும் இந்தக் குழந்தைகள் கிளப்பில் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்கிறோம். அவர்களுக்குப் பொழுது போக்கு விளையாட்டுக்கள், நூலகம், சித்திர வகுப்பு முதலியவை இருக்கின்றன. நாடகத் துறையில் சிறுவர் சிறுமிகள் பங்கு கொள்கின்றனர். அடிக்கடி அவர்களைப் பல



ஊர்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்கிறோம். எங்கள் குழந்தைகள் கிளப் அங்கத்தினர்களுக்குச் 'சங்கர்ஸ் வீக்லி' நடத்தும் சித்திரப் போட்டியில் பல பரிசுகள் கிடைத்துள்ளன !'' என்று குழந்தைகள் கிளப்பின் பெருமையை விளக்கிக் கொண்டு போனார் ஸ்ரீமதி பட்டுச் செட்டி. ஆம்! தங்கள் குடும்பத்துக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வரும் ஸ்ரீமதி பட்டு பாலகோபாலைக் குழந்தைகள் அப்படித்தான் அன்புடனும் அருமையுடனும் அழைக்கின்றனர்.

''வீட்டில் நாலைந்து குழந்தைகள் சேர்ந்தால் அடிபிடிச் சண்டைதானே பார்த்திருப்பீர்கள் ! எங்கள் குழந்தைகள் கிளப்பில் எண்பது குழந்தைகள் அங்கத்தினராக இருக்கின்றன. அவை எப்படி ஒற்றுமையாக இணைந்து ஆடிக் களிக்கின்றன தெரியுமா ? இதைப் பார்த்துக் களிப்பதிலுள்ள ஆனந்தத்துக்கு வேறு இணை உண்டா? இந்தக் குழந்தைக் குலத்திடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும் நிறைய இருக்கின்றன. வீட்டில் குழந்தைகள் அடம் பிடித்தால் அடித்து, உதைத்துச் சமாதானப்படுத்த முயல்கிறோம். இங்கே அயலார் குழந்தைகளும் இருக்கின்றன. அவர்களைத் தொட்டு அடிக்க முடியுமா? குழந்தைகள் கிளப்பில் குழந்தைகளைப் பெரியவர்கள் நிர்வகிக்கும் போது அவற்றோடு சமாதானமாகப் பேசிப் பேசிப் பொறுமைக் குணம் நிறைய அவர்களுக்கு ஏற்படுகிறது. இது கிடைத்தற்கரிய பாக்கியம்தானே ?'' என்று பூரிப்புடன் சொன்னார் ஸ்ரீமதி பட்டு.

''குழந்தைகள் கிளப் மைதானத்துக்கு இன்னும் குத்தகைப் பணம் செலுத்திக் கொண்டுதான் நடத்தி வருகிறீர்களா?''

''சினிமாக் கலைஞர்களான ராகினி, சந்திரபாபு முதலியவர்கள் இந்தக் கிளப் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளனர். பல கலை நிகழ்ச்சிகள் நடத்தி அதன் மூலம் நிதி சேகரித்துக் குழந்தைகள் கிளப்புக்கு மைதானத்தைச் சொந்தமாக விலைக்கு வாங்கிவிட்டோம். இனி அதில் நாடகம், குழந்தைகள் தங்குமிடம் ஆகியவற்றுக்குக் கட்டடம் ஏற்பட வேண்டும். எனக்கும் வயதாகிக் கொண்டு வருகிறது. இந்தக் குழந்தைகள் கிளப்பை நிர்வகிப்பதிலிருந்து வெளி வருவதற்கு முன் இந்த ஆசையைச் செயலாக்க வேண்டும்!'' என்றார் அவர்.

''இது தவிர நீங்கள் சமூக நல சேவைகள் வேறு ஏதாவது செய்கிறீர்களா?''


''நான் குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு, இந்தக் குழந்தைகள் கிளப்பைக் கவனிப்பதில் மீதி நேரத்தைச் செலவிட்டு வருகிறேன். இதுவே போதும். சிலர் வீட்டில் குழந்தைகளை ஆயாவின் தலையில் கட்டிவிட்டு, ஊருக்குச் சமூக சேவை செய்யப் போகிறேன் என்று கிளம்பி விடுவார்கள். அது உண்மையான சேவையாகுமா? வீட்டில் குடும்பத்தையும், குழந்தைகளையும் சரியாகப் பேணிக் கொண்டு, ஓய்வு கிடைக்கும் வேளையில் சமூக நல சேவையில் கலந்து கொண்டால் தானே நன்றாயிருக்கும் ? வீட்டை மறந்து வெளி உலகுக்கு மட்டும் சேவை செய்வதில் என்ன பயன்?'' என்றார் ஸ்ரீமதி பட்டு.

கட்டடங்களுக்கு அஸ்திவாரம் போட வேண்டுமானால் ஒரு மந்திரியையோ, தொழில் அதிபரையோ அழைப்பதுதான் வழக்கம். இந்தக் குழந்தைகள் கிளப் கட்டடத்துக்குக் குழந்தை நட்சத்திரம் பத்மினியைக் கொண்டு அஸ்திவாரமிடச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு புதுமை. அது மட்டுமல்ல; மற்றக் குழந்தைகளுக்கும் நடிப்புக் கலையிலும் நாடகத் துறையிலும் ஆர்வம் ஏற்படத் தூண்டுகோலாயிருக்குமல்லவா ?

யாழையும், குழலையும்விட இனிமையான மழலை பேசும் — சிறுவர் சிறுமியர் குதூகலித்து மகிழ, வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கும் இந்தக் குழந்தைகள் கிளப்புக்கு வருஷங்கள் ஏறிக் கொண்டு போகலாம். ஆனால் அது என்றும் இளமையானது. அதில் நாளொரு புதுக் குழந்தை கலந்து கொண்டு அந்த இளமையை நீடிக்கச் செய்யும். — காமு




ராஜயோகம்-7
கதை: தமட
சித்திரம்: செல்வம்
பின்னால் வந்த ஆசாமி காதில் கடுக்கன் போட்டிருந்தான். அதிலிருந்து அவன் உண்மையான யோகீஸ்வரர் இல்லையென்று தெரிந்துவிட்டது!
அதற்கு முன்பே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாக்கும்! முதலில் வந்த ஆளின் காலில் கட்டியிருந்த காக்கிப் பட்டியும், பூட்ஸும் ஒட்டுப் போடப்பட்டிருந்தன!
அட! மறந்து விட்டேனே. எங்கே அந்தப் பச்சைப்பாம்பு? அதைத் தங்களிடமிருந்து காப்பாற்ற — மன்னிக்கவும் — அதனிடமிருந்து தங்களைக் காப்பாற்றத் தயவு செய்து அனுமதி அளியுங்கள்.
பச்சைப்பாம்புமில்லை, சிவப்புப் பாம்புமில்லை. அவன் தலையில் அடிப்பதற்காகவே அப்படிச் சொன்னேன். இந்தப் பையின் உட்பக்கம் இரும்புக்கம்பி இருக்கிறது. பார்க்கிறீர்களா?
வேண்டாம். வேண்டாம்.
எனக்கு நாழிகையாகி விட்டது. வெற்றியைக் கவனித்துக் கொள்ளுங்கள்.
ஒரு நிமிஷம்! அந்த அயோக்கியர்கள் பூஜை வேளையில் கரடி வந்தாற்போல் வந்து சேர்ந்தார்கள். அதில் அவர்களில் ஒருவன் கூறிய இன்பகரமான...
அட! அதை நான் கண்டுபிடிக்கவில்லையே!
'நாங்கள் 'நாங்களிருவரும் கணவனும் மனைவியுமல்ல' என்று யார் சொன்னது?' என்று ஒரு போடு போட்டானே, அதைக்கேட்டு நான் ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்து....



இதுவரை தான் நான் கல்யாணம் பேசி முடிந்தது. அந்தக் கதையைச் சொல்லட்டுமா?
நீங்கள் - கல்யாணம் - கதையா! சொல்லுங்கள். கேட்கிறேன்.
யாரோ என்னைத் தாங்களாகவே பெண் பார்க்க வந்தார்கள். அம்மாவைத் திருப்திப்படுத்துவதற்காக நான் காட்சியளிக்கச் சம்மதித்தேன். அப்பா என்னை ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னார். வந்தவர்கள் கீழே உட்கார்ந்திருந்தார்கள். நான் கால் மேல் கால் போட்டுக் கொண்டு புரிகசிப்பது போல் முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.
பெண் பார்க்க வந்தவர்கள் எழுந்து விட்டார்கள்.
அப்படியும் அவர்களுக்கு என்னைப் பிடித்துப் போய்விட்டது. அப்பா பணக்காரர் என்று அவர்களுக்குத் தெரியும். அப்பா, என் பெண் எம்.ஏ. படித்திருக்கிறாள். ஆடப்பாட, ஓடியாட, குஸ்தி போடத் தெரியும். உத்தியோகம் பார்க்க யோக்கியதை இருக்கிறது. நான் படிப்புக்கு நிறைய செலவழித்திருக்கிறேன். என்ன எதிர் ஜாமீன் கொடுப்பீர்கள் என்று கேட்டார்.
அப்புறம்?
அவர்கள் எழுந்து சென்று விட்டார்கள். அப்பா நூறு ரூபாய் குறைத்துக் கொள்வதாகச் சொன்னார். அப்படியும் அவர்கள் திரும்பிப் பார்க்காமலேயே போய்விட்டார்கள்.


உங்கள் தந்தையை நான் பார்க்க வேண்டும்.

கதை, வசனம்: ஸ்ரீதர்—எம் மேலேதான் தப்பு. தமிழ் நாட்டு ரசிகர்களைத் தப்புக் கணக்குப் போட்டுட்டேன். நான் எது எப்படி எடுத்தாலும் பார்த்து ரசிப்பாங்கன்னு நெனைச்சேன். ஆனா ஒரேயடியாகக் காலே வாரிவிட்டுட்டாளுங்களே...! என்ன இருந்தாலும் வட இந்திய ரசிகங்க, ரசிகங்கதான். அவுங்கதான் கலையை மதிக்கிறாங்க. முன்பு 'ஜனக் ஜனக் பாயல் பாஜே'வை 'மீண்ட சொர்(க்)க'மாக்கினேன். அப்போகூட நம் ஊர்க்காரனுங்க காலெத்தான் வாரி விட்டானுங்க. போனாப் போறது... இப்பவாவது கலை நோக்கம் திரும்பி யிருக்குமென்று நெனச்சேன். 'கூஞ்ச் உடீ ஷெஹனாயி' (ஷெஹனாய் நாதம் முழங்கியது) படம் ஞாபகம் வந்துச்சு. நாம் வீணையின் நாதத்தை முழங்க வைக்கப் பார்ப்போமே என்று 'கலைக்கோவில்' எடுத்தேன். இதுவும் பிரயோசனப்படலே. 'செவிடன் காதில் ஊதிய வீணை'யாய்ப் போச்சு. இனிமேல் நிச்சயமா இந்த மாதிரி 'வம்பிலே' மாட்டிக்கப்படாது. வட இந்தியப் படங்களிலேயிருந்து சில காட்சிகளை மட்டும் எடுத்து ஒட்டவச்சாத்தானே வம்பு..? ஒட்டு மொத்தமா 'நெஞ்சம் மறப்பதில்லே' மாதிரி தூக்கிப் போட்டுக்கிட்டா...!

கதாநாயகன் முத்துராமன்: ஸ்ரீதர் படமுன்னு நல்லா நடிக்கிறியே... நம்ப படத்திலே ஏன் அப்படி நடிக்கறதில்லேன்னு பல 'புரொடியூஸர்களும் டைரக்டர்களும்' கேட்டுக்கிட்டிருந்தாங்க. இது என்னடா 'வம்பு'ன்னு நெனச்சிருந்தேன். நல்ல வேளே.. 'கலைக் கோவில்' கைகொடுத்திடுச்சு!

மெல்லிசை மன்னர்கள்: இந்தப் பட்டம் நமக்குக் கொடுத்தாலும் கொடுத்தாங்க... நம்ம மதிப்பு வர வரக் குறைஞ்சு போச்சு. எப்பவும் போலேதான் நாம மியூஸிக் கொடுக்கிறோம். ஆனா 'ஹிட்'டாகல்லியே...? முன்னாலே எல்லாம் 'பி.ஐ.டி.' மியூஸிக்கை 'பதி பக்தி'யிலும், 'ஜிஸ் தேஷ்மே ....' மியூஸிக்கைப் 'பாலமன்னிப்பி'லேயும், 'அனாரி மியூஸிக்கைப் 'பச்சை விளக்கி'லேயும், 'நெதேகே நேக்லோ' மியூஸிக்கைப் 'படித்தால் மட்டும் போதுமா'விலேயும், 'மூகல்-ஏ-ஆஜம் மியூஸிக்கைக் 'கர்ண'னிலேயும், 'புரொபஸர் மியூஸிக்கைக் 'காதலிக்க நேரமில்லே'யிலேயும் அப்படிஅப்படியே அலாக்காத் தூக்கிப் போட்டுக்கிட்டோம். அப்பல்லாம் கேட்டாளுங்க ரசிச்சாளுங்க. இப்போ 'கலைக் கோவில்'லே 'சங்கம்', 'பீஸ் ஸால் பாத்' மியூஸிக்கைப் போட்டா ரசிக்கிறாளுங்களா.... வாரியே வில்லே விட்றாளுங்க? இனிமே நமக்கெதுக்கு இந்த 'வம்பு'; சொந்தமா மியூஸிக் போட்டுக்க வேண்டியதுதான்.

தயாரிப்பாளர் விசுவநாதன்: அவர் (ராமமூர்த்தி) தப்பிச்சுக்கிட்டாரு. ரெண்டு பேருமாத்தானே கூட்டுச் சேர்ந்து மியூஸிக்கைத் 'தூக்கிப் போட்டு'ச் சம்பாதிச்சோம். இப்ப படம் பிடிக்கத் தலையிலே கைவெச்சிருக்கேனே இதிலே கூட்டுச் சேர்ந்தாரா... பாவம்... அந்த ஆர்ட் டைரக்டர் கங்காவைக் கூட்டுச் சேர்த்துக்கிட்டு அவரையும் 'வம்பி'லே மாட்டி வைக்கட்டேன். எப்படியும் கூட்டா இன்னொரு படமெடுத்து அவரைச் 'சரிப்படுத்திடணும்!'

டைரக்டர் ஸ்ரீதர்: அப்பவே சொன்னேன் 'ஆறெழுத்திலே படம் வேண்டாமுன்னு... கேட்டாளுங்களா?... அந்த ''க்''கன்னாவைத் தூக்கி யிருந்தா படம் 'அட்லீஸ்ட்' இன்னும் ஓடினப்புருக்குமே...? இதைச் சொல்லப் போனா எனக்கு மூட நம்பிக்கைக்காரன்னு பேரு. எப்படியோ போகட்டும்... எனக்கென்னத்துக்கு 'வம்பு'? நானு புரொட்யூஸரு?

வி. ஆர். விசுவநாதன் பி.காம்.
14. பந்தடி நாலாவது தெரு
மதுரை-1



பொம்மை



"**பொ**ம்மை"ங்கிற சினிமாக் கதைக்கு இப்போ நான் விமரிசனம் எழுதப் போறேன். இதுலே பலபேர் — பெரும்பாலும் நாடக நடிகர்களும் புது முகங்களும்தான் நடிச்சிருக்காங்க. அவங்களையெல்லாம் இந்தச் சினிமாப் பார்த்தவங்களுக்கும் பாலசந்தர்ங்கறவர் — அவர்தான் இந்தக் கதையை எழுதி டைரக்ட் செய்திருக்கிறார் — அறிமுகப்படுத்துறார். புதுமாதிரியாக இருந்தாலும் அவர் பேச்சுக் கொஞ்சம் அலுப்புத் தட்டுகிறது. அதனுலே அவர் பாணியை விட்டுவிட்டு என் சொந்தப் பாணியிலேயே இந்தச் சினிமாவுக்கு விமரிசனம் எழுதலாம்னு நினைக்கிறேன்.

தமிழ்ப் பட உலகுக்கு இது ஒரு புதுமையான கதை. முக்கோணக் காதல், சதுரங்கக் காதல், தோட்டத்துக் காதல், வீட்டுக் காதல், கிராமியக் காதல், பட்டணத்துக் காதல் என்று எல்லாம் காதல் மயமாகவே, காதலே மையமாக இருக்கும் தமிழ்ப் பட உலகுக்கு அளிக்கப்படும் ஒரு புதுமையான கதை. பாலசந்தரின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதுதான். கதையிலே சஸ்பென்ஸ் நன்றாகக் கையாளப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் இன்னும் விறுவிறுப்பு ஏற்றியிருக்கலாம். ஒரு பெருங் குறை பொம்மை வெடிப்பதுதான் கதையிலே சஸ்பென்ஸ். படம் முடியும்வரையில் அந்தப் பொம்மை வெடிக்கப் போவதில்லை என்ற உணர்வு படம் பார்ப்பவர்களுக்கு ஏற்பட்டு விடுவதனால் படத்தின் பல கட்டங்களில் விறுவிறுப்பு ஓரளவு குறைந்து விடுகிறது. பயங்கரச் சதித் திட்டம் நடு வீதியில் பறைசாற்றப் படுவது ஓரளவுக்கு வேடிக்கையாக இருந்தாலும் கதையின் ஓட்டத்தைப் பெரிதும் பாதிக்கிறது. அக்கம் பக்கம் பாராமல், ஆகாய விமான நிலையத்தில் சதித் திட்டம் சரிந்து விட்டதே என்ற பதற்றத்தில் அத்திட்டம் விமரிசனம் செய்யப்படுவது அசம்பாவிதமாக உள்ளது. சதித் திட்டத்துக்கு ஒரு வில்லனாகத் தோன்றிய ரமேஷைக் கட்டிப் போட்டு விட்டு அவன் எதிரிலேயே அடுத்த திட்டத்தைப் பிரஸ்தாபப்படுத்த வேண்டிய அவசியமென்ன? அதேபோல் விஜயலட்சுமியைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் ராகவன் (ஜகதீஷ்) தன் மனைவியிடம் (மனைவியா? அல்லது காதலியா?) அவன் செவிகளில் படும்படி தன் கொலைத் திட்டத்தைப் பறைசாற்றுவதில் என்ன மர்மமோ? சிங்கப்பூருக்குச் செல்லும் ஆகாய விமானத்தில் வெடிகுண்டு பொம்மையுடன் ஒருவர் புறப்படப் போகிறார் என்ற செய்தி கேட்டும் போலீஸார் விமான நிலையத்துடன் உடனடியாக டெலிபோனில் தொடர்பு கொள்ளாமல் ஜீப்பிலே புறப்பட்டு விமான நிலையத்துக்குச் சென்று விமானத்தை நிறுத்த முயல்வது வேடிக்கையாக இருக்கிறது. இப்படிச் சிற்சில பெருங் குறைகள் இருந்தாலும் படம் என்னவோ பார்ப்பவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் ஓடுகிறது. டைரக்ஷன் சில இடங்களில் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. வசனம் சில இடங்களில் நன்றாக இருக்கிறது. பாட்டுகள் அதிகம் இல்லை. "தத்தி தத்தி" என்ற பாட்டைத் தவிர வேறு ஒன்றும் குறிப்பிடும்படியாக இல்லை.

நடிகர்களில் பெரும்பாலோர் நாடக நடிகர்கள்தான். ஆதலால் நாடக பாணி தலை தூக்கி நிற்கிறது. ஜகதீஷ் (ராகவன்) ஒரு சதித் திட்டத்தின் தலைவன் என்பதற்காக அவருடைய இயற்கையான தோற்றத்தை மேக்—அப் கொண்டு மறைத்து போலும் முகத்தை இவ்வளவு அசடு தட்டும்படியாகச் செய்திருக்க வேண்டாம்.

வெகு நாட்களாகப் பெட்டிக்குள் இருந்த 'பொம்மை' நவராத்திரிக்குச் சில நாட்களுக்கு முன் கொலுவில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. 'அந்த நாளு'க்குப் பிறகு இந்த நாள் வரையில் சினிமா உலகில் புகழ் மங்கியிருந்த பாலசந்தருக்கு இது ஒரு வெற்றிப்படம்.

ஜி. சீதாலட்சுமி குருசாமி,
24/1, ராமகிருஷ்ண மடத் தெரு,
மந்தவெளி, சென்னை—28





14. திருமணக் கோலாகலம்

சிறுத்தையின் இதயத்தில் செருகி நின்ற ஈட்டியை உருவி இழுத்தபோது பொங்கி வழிந்த குருதியை அதன் பொட்டுடலிலேயே துடைத்து விட்டுப் பெருமையோடு அந்த ஆயுதத்தைத் தடவிக் கொடுத்தான் யூசப்கான். தான் விரும்பி வாங்கிய அந்த ஈட்டி தன் தகுதியை நிரூபித்து விட்டதில் தாங்க முடியாத மகிழ்ச்சி அடைந்தவனாகக் குதிரையின் மீது தாவி ஏறி அமர்ந்தான். எஜமானனின் குதூகலத்தை உணர்ந்த குதிரையும் குதி போட்டு நடந்தது.

குளுமை நிறைந்த இனிமையான அந்தக் காலைவேளையில் குதிரைச் சவாரி உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆனந்தமாக இருந்தது. அதன் பிறகு அந்தக் கானகத்தைக் கடக்கும் வரை வேறு சம்பவம் எதுவும் நிகழவில்லை. இடக் கையிலே குதிரையின் லகானைத் துவள விட்டுப் பிடித்தபடி வலக் கரத்தில் தன் வழித் துணையாக வந்து வாய்த்த ஈட்டியின் அடியை வலப் பாதம் வைக்கக் குதிரைச் சேணத்தோடு அமைந்த இரும்பு வளையத்தின் மீது இருத்தி அதை முன்னே நிறுத்திப் பிடித்தபடி யூசப் கான் அந்தக் கானகத்தின் வழியே வந்த காட்சி கம்பீரம் நிறைந்ததாக இருந்தது. குதிரையின் வேக நடைக்கு ஏற்ப அந்த வீரனின் உடலும் அவன் பிடித்த ஈட்டியும் சீராக ஆடும் நிலை ரசிக்கும்படியாகவும் இருந்தது. குதிரைக் குளம்பொலியினால் குழி முயல்களும் புள்ளி மான்களும் துள்ளியோடிய அழகை ரசித்து மகிழ்ந்தபடி போய்க் கொண்டிருந்தான் யூசப் கான்.

பகலின் உக்கிரம் உச்சிக்கு வந்த போது பசியின் உபாதையை உணரலானான் அவன். நெடுஞ்சாலையிலிருந்து ஒதுங்கி ஓடிய ஓர் ஒற்றையடிப் பாதையின் முடிவிலே மசூதியின் தங்க மூலாமிட்ட விமானம் தகதகப்பதைக் கண்ட யூசப் கான் அங்கு ஏதோ ஓர்

ணர் இருக்க வேண்டும் என்ற முடிவோடு வளைந்து வரவேற்ற அந்தப் பாதையிலே இறங்கி நடக்கலானான். ஆம்! நடந்துதான் சென்றான். ஓடிக் களைத்து வியர்வை வெள்ளத்தில் குளித்திருக்கும் குதிரையை மேலும் விரட்டி வேலை வாங்க மனமில்லாமலே அதை நடத்தித் தானும் நடக்கலானான்.

தூரத்தே தெரிந்த ஊர் உற்சாகத்தை ஊட்டியது பூசப்கானுக்கு. பசுஞ்சோலை சூழ்ந்த அந்தப் பிராந்தியத்தை அடைந்ததுமே பசிகூட மறந்து விட்டது அவனுக்கு. சலசலத்து ஓடும் நீரோடையைக் கண்டதும் உணவு தேடும் முயற்சியை ஒத்திப்போட்டு விட்டு அமிழ்ந்து குளித்து ஆனந்தமடைய நினைத்துவிட்டான் அவன். முதலில் குதிரையின் சேணங்களை யெல்லாம் கழற்றி ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு அதன் உடல் வலி போக அதைத் தேய்த்துக் குளிப்பாட்டிப் பசும் புல் தரையில் மேயவிட்டான். பிறகு அவனும் ஆற்றில் இறங்கித் துளைந்து விளையாடலானான். நீந்தி மகிழ்ந்தவனுக்கு நீர் விளையாட்டு அலுக்கவில்லை. ஆனால் பசிதான் அவனைக் கரையேற்றியது. பசி இருந்தாலும் ஆற்று நீரில் அமிழ்ந்து குளித்தது அவன் உடலிலும் உள்ளத்திலும் புதிய சக்தியைக் கொடுத்திருந்தது. ஊரை நெருங்கிக் கொண்டிருக்கும்போது ஒற்றையடிப் பாதையிலே ஒரு சிறு குழந்தை தத்தித் தத்தித் தளர் நடை நடந்தபடி தன்னந் தனியே வந்து கொண்டிருந்தது. அதன் கவனமெல்லாம் எட்டி எட்டிப் போய் உட்கார்ந்து தன் கிட்ட வரும்படி அழைக்கும் ஒரு காக்கையிடம் லயித்திருந்ததால் குதிரை வருவதைக் கவனிக்கவில்லை. அந்தக் காகம் இந்தக் குழந்தையை எவ்வளவு தொலைவிலிருந்து அப்படி இழுத்து வருகிறதோ தெரியவில்லை. எட்டிப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு தன் குஞ்சுக் கைகளை நீட்டியபடியே தள்ளாடி நடக்கும் குழந்தையைக் குதிரையிலிருந்து குதித்த பூசப்கான் தாவி எடுத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். அப்போதுதான் குழந்தையும் தன் குறுகுறுக்கும் கருவண்டுக் கண்களால் அவனைப் பார்த்து, கள்ளமில்லாத கவலையே இல்லாத உள்ளத்துடன் தன் பொக்கை வாய் திறந்து அந்தப் பொல்லாத சிரிப்பை வழிய விட்டபடியே காக்கையைப் பிடித்துத் தரும்படி கை நீட்டி உதவி வேண்டியது. குழந்தையின் சிரிப்பும் ஸ்பரிசமும் அவன் சிந்தையைக் கவர்ந்ததில் வியப்பில்லை. வெகு தூரத்தில், அடர்ந்த மர நிழலில் ஒரு கூட்டம் காணப்பட்டது. அங்கிருந்தே இந்தக் குழந்தை வந்திருக்க வேண்டுமென்று யூகித்த பூசப் கான் குழந்தையுடன் குதிரை பின்தொடர அவர்களை அணுகினான்.

ஆலமர நிழலில் இரண்டு மூன்று வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டிருந்தன. நாலைந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு கூடி இருந்தார்கள். ஆண்கள் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே தாம்பூலம் தயாரித்துக் கொண்டிருப்பதிலிருந்து அவர்கள் உணவருந்தி விட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டான் பூசப்கான். நாலைந்து நாள் பிரயாணத்தில் இந்தியர்களைப் பற்றி அவன் அறிந்து கொண்ட புதிய விவரம் அது. உணவருந்திய பின் வாய் மணக்க இதழ் சிவக்க ஏதோ ஒன்றைத் தயாரித்துச் சுவைக்கிறார்கள் இந்தியர்கள். அதன் பெயர் தாம்பூலம் என்பதையும் தெரிந்து கொண்டிருந்தான் அவன். அங்கு கூடியிருந்தவர்கள் இந்துக்கள்.

பூசப்கானின் அணைப்பிலே ஒய்யாரமாக வரும் குழந்தையைக் கண்டதும் துள்ளி எழுந்து ஓடிவந்தாள் உணவருந்திக் கொண்டிருந்த பெண்களிலே ஓர் இளமங்கை. அவளைக் கண்டதும் அன்னியனிடமிருந்து அன்னையை நோக்கித் தாவினாள் ஆவலோடு அந்தக் குட்டிப் பாவை. இதற்குள் புதியவனின் வரவு புருஷர்களின் கவனத்தையும் இழுக்கவே பூசப்கானைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களில் சிலர் பீஜப்பூர் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்து அலுவல்களைக் கவனிக்கும் அதிகாரிகளானதால் அவர்களுக்கு உருது மொழியில் ஓரளவு பரிச்சயம் உண்டு. பூசப்கானுடன் சரளமாக உரையாடினார்கள்.

'குழந்தையைக் கவனிக்காமல் இப்படி அநாதரவாக இருக்கலாமா?' என்று குற்றம் சாட்டிய பூசப்கானிடம் தங்கள் கவனக் குறைவுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள் அவர்கள். பூசப்கானின் கம்பீரத் தோற்றமும், கையில் ஈட்டியும், உடைவாளும், ஒப்பற்ற குதிரையும் அவனிடம் அவர்களுக்கு மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தின. இதற்குள் குழந்தையை அடைந்த தாய் தன் கணவனின் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். பசித்த முகத்தைக் கண்டு பரிவோடு உபசரிக்கும் பண்பு பெண்களுக்குத்தானே தெரியும்?

"தங்களைப் பார்த்தால் வெகு தூரத்திலிருந்து வருவது போல் தெரிகிறது" என்று ஆரம்பித்தார் அவர். "களைத்த



முகம் தாங்கள் இன்னும் உணவருந்தவில்லை என்பதையும் அறிவிக்கிறது. தங்கள் தகுதிக்கு ஏற்ற உணவில்லாவிடினும் இதை ஏற்றுக் கொண்டு பசியாறிப் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும்'' என்றவர், இதற்குள் தன் மனைவி தட்டிலே தயாராக வட்டித்துக் கொண்டு வந்திருந்த ஆகாரத்தை அவன் முன் நீட்டினார்.

''உணவை நாடித்தான் நான் அதோ அந்த ஊருக்குள் சென்று கொண்டிருக்கிறேன். என்னைப் போலப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் உங்களுக்கு இது தேவைப்படலாம். நான் வருகிறேன்'' என்று திரும்பியவனை அவர் விடவில்லை.

''எல்லா ஏற்பாடுகளுடனும் நாங்கள் இந்த வழிப் பிரயாணத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதில் எங்களுக்கு எவ்வித அசௌகரியமும் கிடையாது. நீங்கள் இந்த உணவை ஏற்காது போனால்தான் எங்களுக்கு வேதனையாக இருக்கும்'' என்று வற்புறுத்தி யூசப் கானைத் தங்கள் விருந்தாளியாக்கிக் கொண்டார்கள் அந்த வழிப்போக்கர்கள்.

உண்டு பசியாறிய பின் உரையாடிக்கொண்டிருந்த யூசப்கானைத் தேடி வந்து ஒட்டிக் கொண்டது அந்தக் குழந்தை. உணவுக்குப் பின் தாம்பூலம் மடித்துக் கொடுத்து உபசரித்தார் விருந்தளித்தவர். யூசப்கானும் அதன் சுவையை ரசிக்க விரும்பி இந்தியர்களின் அந்த இனிய பழக்கத்தை ஏற்றுக் கொண்டான்.

''தாங்கள் பீஜப்பூரின் எந்த மண்டலத்துக்கு அதிகாரி என்பதை நாங்கள் அறியலாமா?'' என்று கேட்டார் ஒருவர். யூசப் கானின் தோற்றமும் உடையும் அவனைப் பீஜப்பூரின் உயர் அதிகாரிகளில் ஒருவர் என்ற எண்ணத்தையே அவர்களிடம் உண்டாக்கி இருந்தன.

''நான் இந்த நாட்டைச் சேர்ந்தவனே அல்ல'' என்றான் அடக்கமான புன்முறுவலுடன் யூசப் கான். அது அவர்களின் விழிகளை விசாலமாக்கியது.

''அப்படியானால் சுல்தான் ஆதில்ஷாவின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ள எந்த நாட்டிலிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

தான் இந்த நாட்டுக்கே அந்நியன் என்று தன்னைப் பற்றி ஓரளவு அவர்களுக்கு யூசப் கான் விளக்கியபோது அவர்கள் அவன் ஆசையை வளர்த்தார்கள்.

''ஆண்டவன் உங்களைச் சரியான இடத்துக்குச் சரியான நேரத்தில்தான் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். முஸ்லிம் பேரரசுகளான பீஜப்பூரும், அகமது நகரும் திருமணப் பிணைப்பால் ஒன்று சேரப் போகின்றன. பீஜப்பூரின் சுல்தான் அலி ஆதில்ஷா தன் அருமைத் தங்கையை அகமதுநகரின் சுல்தான் ஹுசைன் நிஜாம் ஷாவின் ஆசை மகன் இளவரசன் முர்துஸாவிற்கு மனைவியாக்கிவிட்டு, நிஜாம்ஷாவின் செல்வ மகள் அழகு ராணி சாந்த் பீபியைத் தம் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறார்.

''இந்தத் திருமண வைபவத்தை இந்த நாடே ஒரு பெரிய திருநாளாகப் பல நாட்களுக்குக் கொண்டாடப் போகிறது: தலைநகரிலே ஒரே கோலாகலம். அதையெல்லாம் காணத்தான் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம். விளையாட்டுப் போட்டிகள், வீரர்களின் திறமைக்கு ஏற்ற பந்தயங்கள் எல்லாம் விசேஷமாக அமைக்கப்பட்ட அரங்கத்திலே நடைபெறப் போகின்றனவாம்: வெற்றி பெற்ற வீரர்களுக்குத் தக்க பரிசும் பதவிகளும் தரப்படுமாம். உங்களைப்போன்ற வீரர்களுக்கு அங்கே நல்ல வரவேற்பிருக்கும். இந்த நாட்டுக்குப் புதியவரான நீங்கள் எங்களுடனேயே வாருங்கள். நாளைக் காலையில் தலைநகரைச் சேர்ந்துவிடலாம்'' என்று உற்சாகமாகப் பேசினார்கள் அவர்கள்.

யூசப்கானுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. புதிய நாட்டிலே எப்படி எங்கு போய்த் தன் வாழ்வைத் தொடங்குவது. யாரிடம் போய் எப்படித் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளுவது என்று யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு இப்படி ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஆக்கி வைத்துள்ள அல்லாஹ்வின் அளவற்ற கருணையை எண்ணி மனம் நெகிழ்ந்து போனான். தன் வீரத்துக்கு மதிப்புப் பெற்று வெற்றியால் வாழ்வு பெற முடியும் என்ற புதிய நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட்டது யூசப்கானுக்கு.

சற்று நேரத்துக்கெல்லாம் வண்டிகள் பூட்டப்பட்டன. அவர்களுடன் யூசப் கானும் கிளம்பினான். வண்டிகள் அவன் பிரிந்து வந்த நெடுஞ்சாலைக்குச் செல்லவில்லை. வேறு பாதை வழியே ஒரு ராஜ பாட்டையை அடைந்தது. யூசப் கான் ஆச்சரியத்தினால் பிரமித்துப் போனான். அந்தச் சாலையிலே ஏராளமான வண்டிகளும் வாகனங்களும் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தன. குதிரைகளில் வீரர்கள் விரைந்து கொண்டிருந்தார்கள். ஒட்டகங்களும் மாட்டு வண்டிகளும் பொதிகளைச் சுமந்தபடி போய்க் கொண்டிருந்தன. அத்தனை கூட்டமும் ஒரே குறிக்கோளுடன் ஒரே திசையில் சென்று கொண்டிருந்தது. மன்னரின் திருமண வைபவத்தைக் காணுவதற்காகவே தலைநகரை நோக்கி அத்தனை பேரும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களின் தோற்றத்தையும், அலங்காரங்களையும் அணி மணிகளையும் கண்ட யூசப் கான் அந்நாட்டின் செல்வச் சிறப்பையும் வளமான வாழ்க்கை வகையும் ஒருவாறு யூகித்துக் கொண்டான்.

நேரமாக ஆக, தலைநகரை நெருங்க நெருங்க அந்தச் சாலையில் பிரயாணம் செய்வதே சிரமமாக இருந்தது. அத்தனை கூட்டம், நெரிசல்! தலைநகருக்கு வெகு தொலைவிலிருந்தே அலி ஆதில்ஷாவின் திருமண வைபவக் கோலத்தின் தன்மையை உணர முடிந்தது. சாலையின் இரு மருங்கிலும் ஏராளமான கூடாரங்கள் அமைத்துக் கொண்டு தங்கியிருந்தார்கள் திருமண விழாவில் கலந்து கொள்ள வந்திருக்கும் நாட்டு மக்களும் வீரர்களும். வண்ணக் கொடிகளும் தோரணங்களும் கொண்டு வழியெல்லாம் அலங்கரித்திருந்தார்கள். தலைநகருக்கு வெளி

யிலேயே இத்தனை ஆரவாரமும் ஆர்ப்பாட்டமுமானால் அங்கே எப்படி இருக்குமோ என்ற வியப்பில் ஆழ்ந்து போனான் யூசப்கான்.

மாலை மஞ்சள் வெய்யில் ஒளிப்பாட்டிய வானுயர நின்ற மதில் சுவர்களையும் ஒளி சிந்திச் சிரிக்கும் மசூதிகளின் 'மினார்'களையும் மாட மாளிகைகளின் கம்பீரமான தோற்றத்தையும் கண்டு பிரமித்துப் போனான் யூசப்கான். காலையில் பீஜப்பூர் நகருக்குள் போகலாம் என்று கூறி இரவு தங்குவதற்கு ஏற்றதொரு வழிப்போக்கர் விடுதியை நாடிச் செல்லலாயிற்று யூசப் கானுக்கு வழிகாட்டியாக வந்த வண்டிகள். வைபவத்தில் கலந்து கொள்ள வரும் வெளியூர்க்காரர்களுக்காக ஆங்காங்கே ஏராளமான விருந்தினர் விடுதிகளை ஏற்படுத்தியிருந்தார் சுல்தான் அலி ஆதில்ஷா.

விழாக் கோலம் பூண்டிருந்த பீஜப்பூர் நகரம் இரவு உறங்கவேயில்லை. மன்னரின் திருமண வைபவத்தை மகோன்னதமானதொரு நிகழ்ச்சியாக்கி, நாட்டு மக்களின் நினைவிலே என்றும் அது நிலைத்திருக்குமாறு செய்யக் கலைஞர்கள் இரவு பகல் பாராமல் நகரை அலங்கரிப்பதிலும் பந்தய மைதானங்கள், கலை அரங்குகள் ஆகியவற்றை நிர்மாணிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். பல நாட்டு மன்னர்களும் வந்து பங்கு கொள்ளும் விழாவல்லவா அது? அப்போது தங்கள் நாட்டைப் பற்றித் தங்கள் கலை ஆர்வத்தைப் பற்றிப் பிறநாட்டவர் பெருமையாக மதிப்பிட வேண்டும் என்ற ஆர்வம் கவலையாகப் பரிணமித்திருந்தது.

பொழுது புலரு முன்னே எழுந்துவிட்ட யூசப்கான் வழிகாட்டியாக, வழித்துணையாக வந்தவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தன்னிச்சையாகச் செல்லத் தீர்மானித்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அவர்களை எழுப்பித் தனக்கு விடை கொடுக்குமாறு கேட்டுக் கொண்டான். அவன் முடிவை முழு மனத்தோடு வரவேற்ற அவர், ''போய் வாருங்கள் ஐயா! இனி உங்கள் வழி வேறுதான். நாளை நடக்கவிருக்கும் வீர விளையாட்டுக்களிலே வெற்றி வீரராக வரும் நபர் நீங்களாக இருக்க வேண்டும்'' என்று வாழ்த்தி விடை கொடுத்தார்.

புலர்ந்து புலராப் பொழுதினிலே, புரிந்தும் புரியாததொரு நாட்டின் தலைநகரிலே, திகைப்பும், வியப்பும் கலந்த உள்ளத்தோடு உள்ளே புகுந்தான் யூசப்கான். தனது தாய் நாடான துருக்கியிலிருந்தால் எத்தனையோ சிறப்பு மிக்க நகரங்களைப் பார்த்திருக்கிறான். கான்ஸ்டான்டிநோபிளில் உள்ள பெரிய மசூதியில் சென்று மனமுருகத் தொழுகை நடத்தியிருக்கிறான். இன்னும் புகழ் பெற்ற ஐரோப்பிய நகரங்கள் பலவற்றிற்கும் போயிருக்கிறான். ஆனால் இப்போது அவன் காணும் இந்த நகரின் அமைப்புகளும் அழகிய வளைவுகளும் கம்பீரத்துக்கும் அவையெல்லாம் ஈடாக முடியவில்லை. அகன்ற வீதிகள், அழகிய மாளிகைகள், அமைதியான சூழலிலே இந்திய நாட்டில் இஸ்லாத்தின் ஏற்றத்தைப் பறைசாற்றும் பள்ளிவாசல்கள். பார்த்துப் பார்த்துப் பரவசமாகிப் போனான் யூசப்கான். அத்தனை விசாலமான வீதிகளிலும் வேகமாகச் செல்ல முடியாத அளவுக்கு ஜனக் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. பலதிறப்பட்ட மக்கள், பலதிறப்பட்ட ஆடையணிகளிலே அலங்காரமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். குதிரைகளில் போவோர், ரதங்களில் விரைவோர், வண்டிகளில் செல்வோர், கால்நடையாக வழி நடப்போர். இத்தனை கூட்டத்திலும் கலந்து, கடந்து கண்டதையெல்லாம் காட்சியாக ரசித்து மகிழ்ந்தபடி பீஜப்பூரின் பிரதான பகுதிக்கு வந்து சேர்ந்தான் யூசப்கான். பொதுமக்கள் முன்னிலையில் நடக்கும் பந்தயங்களையும், போட்டி விளையாட்டுக்களையும் கண்டு களிக்க மறுநாள் மன்னர் அங்குதான் வருகை தரப் போகிறார் என்ற செய்தி அறிந்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒருபுறம் வண்ண வண்ணக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே வீரர்கள் மறுநாள் நடக்கப் போகும் விளையாட்டுக்களிலே தங்கள் சாகசங்களைக் காட்ட அப்பியாசங்களில் ஈடுபட்டிருந்தார்கள். குதிரைகளின் கனைப்பொலியும் யானைகளின் பிளிறலும், வாள்களின் மோதலுமாக அந்த இடம் வீரனான யூசப் கானின் இதயத்தை மகிழ்விப்பதாக இருந்தது.

இடையிலே வாளும், ஒரு கையிலே ஈட்டியும் மறு கைப்பிடியிலே ஒய்யாரமாக நடைபோட்டுத் தொடர்ந்து வரும் குதிரையின் கடிவாளமுமாகத் தனித்து நின்றபடி திகைக்கும் யூசப்கானைக் கண்ட பீஜப்பூர் வீரனொருவன், ''என்னப்பா வேல் பிடித்த கையோடு வீணாக இங்கே நிற்கிறாய்? நாளைக்கு நடக்கும் போட்டியிலே உன் வீரத்தைக் காட்ட விருப்பமானால் அதோ அங்கே சென்று உன் பெயரைப் பதிவு செய்துகொள். உரிய மரியாதைகளுடன் உனக்கு ஏற்றதோர் இடம் கொடுப்பார்கள்'' என்று சொல்லி விட்டுப் போனான். கூட்டத்திலே வழி தவறிவிட்ட குழந்தை தன் வீட்டு மனிதரைக் கண்டதும் தாவியோடுவது போல அந்த நாட்டு வீரன் கூறிய செய்தியைக் கேட்டதும் குதித்தோடினான் யூசப்கான், வீர விளையாட்டுக்களிலே போட்டியிடுவோரின் வரிசையிலே தன் பெயரையும் பதிவு செய்து கொள்ள.

தன் விருப்பத்தை அறிவித்து நின்ற அந்த அந்நியனைக்கண்ட அதிகாரி அவனை அன்புடன் வரவேற்றார். யூசப்கானின் தோற்றமும் பார்வையுமே அவனுக்கு என்றும் மதிப்பையும் மரியாதையையும் வாங்கிக் கொடுத்தன. மறுநாள் நடக்கவிருக்கும் பந்தயங்களின் விவரங்களையெல்லாம் விளக்கிய பின், ''நாளைப் பகலுக்கு மேல்தான் உங்களைப் போன்ற வீரர்களின் சாகசங்களுக்கு வேலை; அதுவரை காலையில் நடக்கும் பிராணிகளின் சண்டைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம்; போட்டிகளில் பங்கு பெற வரும் வீரர்கள் தங்குவதற்கென்றே ஒரு மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதில் நீங்கள் தங்

ம் கவனிப்பாராம். எங்கள் நாட்டு விருந்தினராகி விட்ட உங்களுக்கு ஒரு குறையும் நேராதபடி கவனிப்பது இனி எங்கள் கடமையாகி விட்டது" என்று கூறிக் கைதட்டினார். இரண்டு சேவகர்கள் வந்து வணங்கினார்கள். அதிகாரி உத்தரவிட்டார். ஒருவன் யூசப்கானின் குதிரையை லாயத்துக்கு நடத்திக் கொண்டு சென்றான். மற்றொருவன் சுகன் மஹால் என்ற விடுதிக்கு அவனை அழைத்துப் போனான்.

வீர விளையாட்டுக்களில் வல்லவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருந்த அந்த விருந்தினர் விடுதியில் யூசப்கானுக்கு ஆசார உபசாரங்கள் நடந்தன. அன்று பகலெல்லாம் நகரில் சுற்றியலைந்த அலுப்புத் தீரத் தன் நாட்டு முறைப்படி நீராவிக் குளியலை முடித்துக் கொண்டு வெளி வந்த போது அவன் புது மனிதனாகப் புத்துணர்ச்சி பெற்றவனாக விளங்கினான். அறுசுவை உண்டியும் போதை தரும் மதுவும் அவன் உணர்ச்சிகளுக்குப் புதிய பலத்தைக் கொடுத்தன. இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது நகரிலே நாட்டு மக்கள் செய்திருந்த தீப அலங்காரங்கள். அன்றிரவுதான் அலிஆதில்ஷாவுக்கும் அழகு மங்கை சாந்த்பீபிக்கும் திருமணம். அரண்மனையின் மேல் மாடத்திலிருந்து வாணங்கள் விண்ணை நோக்கிச் சீறிக் கொண்டிருந்தன. இருள் திரையிலே எண்ணற்ற வண்ணப் பூக்களைச் சிதற விட்டுச் சிரித்த ஆகாச வாணங்களின் அழகை ரசித்தபடி உட்கார்ந்திருந்தான் யூசப்கான்.

நேரமாக ஆக – இருளின் ஆதிக்கம் அதிகரித்த போது நகரின் கோலாகலத்தில் கொஞ்சம் குறைவு ஏற்பட்டதே தவிர பூரண அமைதி பெற்றுவிடவில்லை. எங்கோ தொலை தூரத்தில் பாட்டும் கூத்தும் கும்மாளமும் குதூகலமும் கேட்டுக் கொண்டுதான் இருந்தன. சிந்தையைக் கிறங்க வைக்கும் அந்த இசையிலே தன்னை மறந்து கண்ணயர்ந்து போனான் யூசப்கான்.

மறு நாள்....

திருமண விழாவின் கோலாகலங்கள் ஆரம்பமாகி விட்டன என்பதற்கடையாளமாகப் பீரங்கிகள் முழங்கின. யூசப்கானின் வாழ்வில் புதிய அத்தியாயம் தொடங்கப்படவிருக்கும் அன்றைய தினத்தின் பொழுது புலர்ந்தது. புதிய எண்ணங்களோடு எழுந்திருந்தான் யூசப்கான். பல்லாயிரம் பேர் கூடி இருந்து காணும்படி அமைத்த பந்தய மைதானத்திலே மக்கள் வந்து மொய்த்துக் கொண்டிருந்தார்கள். சுந்தரமான காலை வேளை. சுகமான இளங்காற்று வீசிக் கொண்டிருந்தது. மைதானத்தின் எடுப்பானதொரு பகுதியிலே ஏற்றமும் எழிலுமுற அமைத்த விதானத்தின் கீழ் முஸ்லிம் பேரரசின் காவலரும் பீஜப்பூரின் மன்னரும் மணமகனுமான அலிஆதில்ஷா அவர்கள் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவருக்கு வலப்புறத்திலே பெண்ணைக் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுக் கொண்ட பெருமையோடு வீற்றிருந்தார் — அகமது நகர் சுல்தான் ஹுஸைன் நிஜாம்ஷா. ஆதில்ஷாவின் இடப் பக்கத்திலே 'இத்தனை ஏற்றத்துக்கும் இணைப்புக்கும் நான்தான் காரணம்' என்ற இறுமாப்புடன் உட்கார்ந்திருந்தார் கோல்கொண்டாவின் குதுப்ஷா இப்ராஹிம். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் அழகை வர்ணிப்பதென்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதொரு காரியம். நவரத்தினங்களாலும் நல்முத்துக்களாலும்கொண்டு ஆக்கப்பட்டிருந்த அவர்களுடைய ஆடை அணிகளினூடே தங்க ஜரிகைகளின் வேலைப்பாடும் தகதகத்துக் கொண்டிருந்தது. பிரதானமாக அமர்ந்திருந்த இம்மூன்று மன்னர்களைத் தவிர பீடாரின் பரீத்ஷாவும் பேராரின் இமத்ஷாவும் மற்றும் திருமணத்துக்கு வந்திருந்த பல தேசத்து அரசர்களும், அரசப் பிரதிநிதிகளும், பிரபுக்களும், பெருங்குடி மக்களும் அவரவர் தகுதிக்கேற்ப அலங்காரமான ஆடையணிந்து அரங்குக்கே அழகாக அமர்ந்திருந்தார்கள். பந்தய மைதானத்துக்கு வரும் வழியெல்லாம் பீஜப்பூரின் பெருமை துலங்கும் வண்ணம் அலங்கரித்திருந்தார்கள். ஆரம்பத்தில் யானைப் படை இருபுறமும் அணிவகுத்து நின்று வரவேற்றது. அதையடுத்துக் கம்பீரம் நிறைந்த குதிரைப் படை நெடுந்தூரத்துக்கு வரிசையாக வழி வகுத்துக் கொண்டு நின்றது.


வீரர்களின் போட்டிகள் அன்று பகலுக்கு மேல்தான் என்று அரங்க அதிகாரிகள் குறிப்பிட்டிருந்ததால் யூசப்கான் ஒரு பார்வையாளனாகச் சாதாரண உடையணிந்து அரங்கினுள் நுழைந்தான். தனக்கு அளிக்கப்பட்டிருந்த அடையாளத்தைக் காட்டியதுமே ஒரு வீரன் அவனைப் பணிவுடன் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் அமர்ந்து பார்ப்பதற்கென்று அமைக்கப்பட்டிருந்த பகுதிக்கு அழைத்துப் போய் அமர்த்தினான். பிரபுக்களும் பெருங்குடி மக்களும் அரசியல் வட்டாரத்து ஆன்றோர்களும் அமர்ந்துள்ள பகுதியை அடுத்துத்தான் யூசப்கானுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. பாமினி சுல்தான்களின் பெருமையைத் தன் இருக்கையிலிருந்து கண்டு ரசிக்க அது வசதியாகவே இருந்தது.

மன்னர் வந்து அமருவதற்கு முன்னே பந்தய மைதானம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியலாயிற்று. உள்ளே இடமில்லாத நிலையில் மைதானத்தின் மதில்களுக்கு அப்பால் அடுத்துள்ள மாளிகைகளின் உச்சியிலும் மரங்களின் மீதும் இடம் பிடித்துக் கொண்டிருந்தார்கள் ஏராளமான பேர்கள்.

ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாக்க ஏராளமான போர் வீரர்கள் அரங்கத்தினுள்ளே அணிவகுத்து நின்றார்கள்.

ஆதில்ஷா வந்து அமர்ந்ததும் பீரங்கிகள் முழங்கின. அலை ஓய்ந்த கடலைப் போல அங்கு நிசப்தம் நிலவியது. அத்தனை பேரின் கவனமும் மைதானத்தின் நடுவிலே நடக்கப் போகும் பந்தயங்களில் பதிந்தன.

காலை நடவடிக்கைகள் மிருகங்களின் போட்டா போட்டியோடு ஆரம்பமாயின. ஆட்டுச் சண்டையில் ஆரம்பித்து யானைப் போரில் முடிவதாக இருந்தது. சண்டைக்காகவே பழக்கப்படுத்தி வளர்க்கப்பட்ட



“என்மேலிருக்கிற கம்பளி ரோம உறுத்துகிறதே; உனக்கு மட்டும் உறுத்தவில்லையா?”

“என்னுடையது சுத்தக் கம்பளியில்லை; ஐம்பது சதவிகிதம் காட்டன் மிக்ஸர்!”

இரண்டு பெரிய செம்மறி ஆட்டுக் கடாக்கள் அரங்கினுள் — ஆயிஷா அமர்ந்துள்ள விதானத்தின் இடப்புறமும் வலப்புறமும் அமைக்கப்பட்டிருந்த விசேஷ வாயில்களின் வழியே எதிர் எதிர்ப் பக்கங்களிலிருந்து நுழைந்தன.

ஆடுகளைக் கண்ட கூட்டம் ஆரவாரமிட்டு ஓய்ந்த போது சுருண்டு வளைந்த கொம்புகளோடு கூடிய ஆடுகள் ஒன்றை நோக்கி ஒன்று வெகுவேகமாகப் பாய்ந்தன. அடுத்த விநாடி இரண்டு இரும்புக் குண்டுகள் மோதிய ஒலி உண்டாயிற்று. தலையோடு தலையை ‘மடார், மடார்’ என்று மோதிக் கொண்டு ஆக்ரோஷமாகப் போரிட்டன ஆடுகள். மக்களின் மகிழ்ச்சிக்காக மண்டையை உடைத்துக் கொள்ளும் ஆடுகளின் ஆவேசமான போராட்டம் யூசப்கானுக்குப் புதுமையாக இருந்தது. இரண்டு ஆடுகளில் ஒன்று தளர்ந்து தரையில் சாயும் வரை ஆடுகள் இரண்டும் விலகி விலகி வேகமாக வந்து முட்டி மோதிக் கொண்டன. மக்கள் ஆரவாரமிட்டுக் குதூகலித்தார்கள். போரிட்ட ஆடுகளில் ஒன்றின் உருக்கு மண்டை உடைந்து உயிர் துறந்ததும் இந்த விளையாட்டு முடிந்தது. அதையடுத்து அரங்கினுள் கரு மேகத்தை யொத்த காட்டெருமைகள் இரண்டு வந்து தங்கள் உடல்களைச் சிலிர்த்து நின்றன. மந்த ‘குணத்துக்கும் சாதுத் தன்மைக்கும் பெயர் பெற்ற எருமைகளா இப்படிப் பயங்கரமான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன?’ என்று வியந்து போனான் யூசப்கான். போருக்காகவே வெறியூட்டி வளர்க்கப்பட்ட அந்த எருமைகள் இரண்டும் ஆரவாரமிடும் மக்கள் கூட்டத்தைக் கண்டு மருளவில்லை. தங்கள் வலிமையைக் காணக் கூடியுள்ளோரிடம் பெருமை பெற வேண்டும் என்ற பேரவாவுடன் போரிடலாயின. நெற்றியோடு நெற்றியை இணைத்து ஒன்றை ஒன்று முட்டி நகர்த்தும் மோதலிலே மூர்க்கமாக ஈடுபடலாயின. பருத்த உடல்களைக் கொண்ட அந்தக் காட்டெருமைக் காளைகள் இரண்டும் சம பலமுடையவை. ஆகவே எதுவுமே சளைக்கவில்லை. கொம்போடு கொம்பைப் பிணைத்து முறுக்கின. உடலோடு உடலை மோதி நகர்த்தப் பார்த்தன. ஆனால் எதுவும் நகரவில்லை. நாக்குத் தள்ள, வாயிலிருந்து வெள்ளை பஞ்சு போன்ற நுரை வழியப் போராடும் நிலையில் புழுதிப் படலம் கிளம்பியதே தவிர வெற்றி தோல்வி ஏற்படவில்லை. இரண்டுமே களைத்துத் தரையில் சாய்ந்தன. தயாராக இருந்த வீரர்கள் தண்ணீரைக் குடம் குடமாக கொண்டு வந்து அவற்றின் மீது ஊற்றி அவைகளுக்கு மூர்ச்சையைத் தெளிவித்து உள்ளே விரட்டினார்கள்.

மக்களின் மகிழ்ச்சியொலி அடங்கி ஓய்ந்த போது, அரங்கத்தின் நாலா பக்கங்களிலிருந்தும், தம்மைப் பிடிக்க வருவோரின் குடலைக் கிழித்துக் குருதியைக் கொப்புளிக்க வைக்கும் படி கொம்புகளைச் சீவிவிடப்பட்டிருக்கும் கம்பீரமான தோற்றம் கொண்ட காளைகள் வந்து சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்றன. முன்னங்கால்களால் தரையைக் கீறியபடி—சவால் விட்டு நிற்கும் காளைகளைக் கட்டிப் பிடித்து அடக்கக் கட்டுமஸ்தான உடலமைப்புக் கொண்ட மல்லர்கள் அரங்கத்தில் வந்து குதித்தார்கள். இடையிலே சல்லடம் மட்டும் கட்டிய வெற்றுடம்போடு காணப்பட்ட அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று புரியாமல் தவித்தான் யூசப்கான். பாரத நாட்டுக்கே — அதுவும் தென்னகத்துக்கே உரித்தான இந்தக் கொல்லேறு தழுவும் காளை விளையாட்டைப் பற்றி அவனுக்கு ஏதும் தெரியாததால் ஆர்வமுடன் கவனிக்கலானான். காளையின் கொம்பிலே முடிந்துள்ள பொற்காசுகளைத் தங்கள் வீரத்தின் பரிசாகப் பெறுவதற்காகப் போட்டியிட்டனர் ஒப்பற்ற உடல் பலமும் தைரியமும் மிக்க இளைஞர்கள். நிமிர்ந்த தலையைத் தாழ்த்திய படி தம் எதிர்ப்படும் எதையும் நிர்மூலமாக்கும் மூர்க்காவேசத்தோடு பாய்ந்து வரும் காளைகளின் மீது பாய்ந்து, குத்திக் கிழிக்கும் அதன் கொம்புகளைப் பற்றித் தொங்கியபடியே போராடி, காளைகளைக் களைப்படையச் செய்யும் பாரத நாட்டு வீரர்களின் உடல் வலிமையைக் கண்டு வியப்படைந்து போனான் யூசப்கான். கொம்புகளை விடுவித்துக் கொள்ள வீம்புடன் போராடும் காளைகள். வீரர்களோ கொம்புகளைப் பிடித்த தங்கள் பிடியை விடாமல் அதன் கழுத்தை ஒடித்து நிலத்தில் சரித்துப் பொன் முடிப்பைத் தங்கள் பற்களால் கடித்து அவிழ்த்துக் கொண்ட பின்பே தங்கள் பிடியைத் தளர்த்துவார்கள். அதே சமயத்தில் லாகவமாகத் துள்ளிக் குதித்து எட்ட நின்று, கெக்கெலியும் கொட்டுவார்கள். தரையிலிருந்து தள்ளாடி எழுந்த காளையோ அவமானப்பட்டுத் தரையைக் கால்களால் கீறிப் புழுதியைக் கிளறியபடி தலை குனிந்து நிற்கும் பெருமூச்சு வாங்க. உண்மை வீரத்தின் உயர்வை விளக்கும் இந்தக் காளைச் சண்டை யூசப்கானுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

அரங்கத்திலே அவன் அருகில் இருந்தவர்கள் ‘‘அடுத்தது யானைப் போர்!’’ என்று சொல்லிக் குதூகலப்பட்டார்கள். யூசப்கானும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

(தொடரும்)



'கவிஞர்களும் எழுத்தாளர்களும் நல்ல வியாபாரிகளாயிருக்க முடியாதென்ற அபிப்பிராயத்தைப் பரப்பியவர்கள் கெட்டிக்காரர்களான சில பிரசாரகர்த்தர்கள் என்று நினைக்கிறேன். இந்த அபிப்பிராயத்தை எழுத்தாளர்கள் நம்பும்வரை அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள். சாமர்த்தியமாகப் பிரசாரம் செய்து, கலை உலகம் வேறு வியாபார உலகம் வேறு, ஒன்றில் வெற்றியடைபவர்கள் மற்றொன்றில் தோல்வியடைய வேண்டும் என்று நம்பும்படி செய்துவிட்டார்கள்......'

—ஜார்ஜ் மைக்கேல்ஸ்

* * *

சிங்கமா, புலியா—எது அதிக வீரமுள்ளது என்பதைப் பற்றி வேட்டை நிபுணர்களுள் அபிப்பிராய பேதமுண்டு. அது சம்பந்தமாகப் பெரிய சர்ச்சைகள், வாதப் பிரதிவாதங்கள் அடிக்கடி கிளம்புவதுண்டு. பொதுவாகப் புலிதான் அதிக வீரமுள்ளது என்பது பலரின் அபிப்பிராயம்.

அப்படிப்பட்ட புலி இன்றைக்கெல்லாம் பதினாறு அடி தூரம் பாய்ந்தால் அதிகம். 'பதினாறு அடி வேங்கை' என்று கூறிப் பிரமாதப்படுத்துகிறோம். டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயத்தில் பிரிட்டனைச் சேர்ந்த 'மேரி ராண்ட்' என்ற மாது இருபத்திரண்டு அடி தூரம் தாண்டியிருக்கிறாள். வேங்கையைப் போல் ஒன்றே முக்கால் பங்கு அதிக தூரம். வேங்கைகள் இந்தச் செய்தியைப் படித்தால் தற்கொலை செய்துகொள்ளக் கூடும்.

ஸ்திரீகள் இப்படி முன்னேறிக் கொண்டு வரும்போது, ஆண்கள் பெண்ணினத் தொழில் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டு விடுகிறார்கள். ஹைதராபாத் கல்லூரி ஒன்றில் ஐந்து மாணவர்கள் (வாலிபர்கள்) 'ஹோம் ஸையன்ஸ்' பாடம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். பல ஆண்கள் வைத்தியசாலைத் தாதிகளாக வேலை பார்க்க விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பத்தை ஒரு பெண்மணியே ஆதரிக்கிறாள். மைசூர் கவர்னரின் மனைவியாரான ஸ்ரீமதி ராஜகுமாரி ஸ்ரீநகேஷ் அதிகமான ஆண்கள் தாதிகளாக நியமிக்கப்படவேண்டும் என்று பெங்களூரில் நடைபெற்ற தாதிகள் சங்க மகாநாட்டில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

நோயாளிகள் தங்கள் வியாதியை மறந்து சிரிக்கச் செய்ய ஒரு யோசனை ஆண் தாதிகளுக்குப் பெண் தாதி உடைகளைப் போட்டுப் பார்க்கலாமே!

* * *

தினசரிப் பத்திரிகைகளுள் போட்டி ஏற்படுவது கடக்கடச் செய்திகளைக் கொடுக்கும் விஷயத்தில்தான். தினசரியின் முதலாளியோ, அல்லது பிரதம ஆசிரியரோ காலையில் எழுந்திருந்ததும் எல்லாப் பத்திரிகைகளையும் புரட்டிப் பார்ப்பார். அவர் கோபமாகத் தமது 'செய்தி ஆசிரியரை' டெலிபோனில் கூப்பிட்டால், அவர் பேசுவது கிட்டத்தட்ட பின்வருமாறு இருக்கும்:

''நேற்று இரவு நமது உதவி ஆசிரியர்கள் சுகமாகத் தூங்கியிருப்பார்கள் என்று நம்புகிறேன். பாராட்டுதல்கள். ஜப்பானிய பூகம்பத்தைப் பற்றிய செய்திகளைப் போட்டு நாம் தொந்தரவு செய்துகொள்ளவில்லை.''

செய்தி ஆசிரியர் இதற்குச் சமாதானம் சொல்வதற்குள் டெலிபோன் தொடர்பு நின்றுவிடும். ஏனென்றால் ஆசிரியர் போதுமென்று வைத்துவிடுவார். கடும் போட்டியின் பயனும் ஒரோரு சமயம் நாளைய செய்தியை இன்றேகூடப் பிரசுரித்து விடுவார்கள்.

இதுபோன்ற கடச் கடத் தலையங்கங்களும் அபூர்வமாகப் பிரசுரமாவதுண்டு. சென்ற வாரம் நடந்த பிரிட்டிஷ் தேர்தலில் தொழிற் கட்சி சந்தேகத்துக்கிடமில்லாமல் வெற்றி பெற்றது என்ற செய்தி 16ந் தேதி இரவு சுமார் ஏழரை மணிக்குத்தான் தெரிய வந்தது. ஆனால் மாலை ஆறுமணிக்கே வெளியான ஒரு பத்திரிகையில் தொழிற் கட்சி வெற்றி பெற்றதைப் பாராட்டிக் கூறியும், அது இன்னின்ன செய்ய வேண்டும். அது இப்படி இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் புத்திமதிகள் கூறியும் எச்சரிக்கை செய்தும் தலையங்கம் வெளி வந்திருந்தது. அதை எழுதிய ஆசிரியரின் ஜோசியத் திறமையும், அபார தைரியத்தையும் மெச்சாதிருக்க முடியவில்லை. ஏனென்றால், அவர் அதை எழுதியிருக்கும் சமயம் குறைந்தது இருநூறு தொகுதிகளின் முடிவுகளை மட்டுமே தெரிந்து கொண்டிருக்க முடியும்.

ஆனால் கிரிக்கெட் பந்தய முடிவையும், தேர்தல் முடிவுகளையும், சீதோஷ்ண நிலைமையையும் பற்றி நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாதென்பது பழமொழி. பல ஆண்டுகளுக்கு முன்னர், தேசத்தில் அந்நிய ஆட்சி நிலவியிருந்த காலத்தில் ஒரு சென்னை கவர்னர் உதக மண்டலத்தில் புஷ்பக் காட்சி ஒன்றைத் திறந்து வைப்பதாக இருந்தது. அவர் அதைத் திறந்து வைத்ததைப் பற்றியும் அவர் அப்போது செய்த பிரசங்கத்தைப் பற்றியும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. நிகழ்ச்சியைப் பற்றி ஒரு குட்டித் தலையங்கம்கூட எழுதப்பட்டிருந்தது. மேலே குறிப்பிட்ட இதே தினசரியில்தான். இந்தச் சம்பவத்தின் முடிவு: கவர்னர் உதகமண்டலம் போகவில்லை. வழியில் மலைச்சரிவு ஏற்பட்டு ரயில் செல்ல முடியவில்லை. ஆகையால் புஷ்பக் காட்சி திறப்பு விழா நடைபெறவில்லையாம்!

* * *

ஒரு வீட்டின் சொந்தக்காரர் தமது வீட்டை வாடகைக்கு விட்டிருந்தார். 'குடியிருப்பவர்களுக்கு அழகு காலி செய்யாதிருத்தல்' அல்லவா? அவர் வீட்டுக்காரர் எத்தனையோ கெஞ்சிக் கேட்டும் 'காலி செய்ய முடியாது. வழக்குப் போட்டுக் கொள்ளும்' என்று குடியிருப்பவர் கூறி விட்டார். வீட்டுக்

காரர் ஏமாற்றமடைந்து, ஏங்கிப் போய் நின்ற அறையிலேயே மயக்கமாய் விழுந்து விட்டார்.

நீண்ட நேரம் வரை அவருக்குச் சுய உணர்வு வரவில்லை. குடியிருப்பவர் அவரது மனைவி மக்களுக்குத் தந்தி அடித்துத் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்காரருக்குச் சிறிது சிறிதாகச் சுய உணர்வு ஏற்பட்டது. எழுந்திருந்து நடமாட ஆரம்பித்தார். அவர் மனைவி அவர் தங்கியிருந்த அறையில் சமைக்க வந்து கொண்டிருந்தாள். அவர் குடியிருப்பவரைக் கூப்பிட்டு, "நான் என் வீட்டுக்கே குடி வந்து விட்டேன். நீர் போய் வழக்குப் போடும்!" என்றார். அவர் மயக்கமாக விழுந்ததெல்லாம் வெறும் நடிப்பு. வீட்டு வசதி கண்ட்ரோல் சட்டம் அமுலுக்கு வந்த சமயம். "சொந்தக்காரர் வருகிறார்" என்று நான் எழுதியுள்ள ஒரு நாடகத்தின் கதை இது.



ஹைகோர்ட்டில் நடைபெற்ற ஒரு வீடு கண்ட்ரோல் சட்ட வழக்கில் நீதிபதி அளித்த தீர்ப்பின் லட்சியத்தைப் பல வருடங்கள் முன்னரே எதிர்பார்த்து எழுதி விட்டேன் என்று எனக்குத் தோன்றிற்று. அந்த வழக்காவது.

ஒரு வீடு காலியாயிற்று. அதை ஒருவருக்கு வாடகைக்கு விடும்படி அகாமடேஷன் கண்ட்ரோலர் உத்தரவு பிறப்பித்தார். வீட்டுக்கார அம்மாள் அந்த வீட்டில் நிரந்தரமாயிருப்பதில்லை. எப்போதோ ஒரோரு சமயம் வந்து தங்கிவிட்டுப் போய் விடுவதுண்டு. "அப்படி ஒவ்வொரு சமயம் தங்குவதே நிரந்தரமாகக் குடியிருப்பதற்குச் சமானமாகும்" என்று நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

ஃ ஃ ஃ

இராமாயணக் காலட்சேபப் பிரசங்கி சொல்லிக் கொண்டிருந்தார்:

"அசோகவனத்தில் சீதாபிராட்டியைக் கண்டு திரும்பிய அநுமான், ராமபிரானிடம், 'கண்டேன் சீதையை' என்று சொன்னான். சீதையைக் கண்டேன் என்று சொல்லவில்லை. ஏன், 'கண்டேன்' என்று ஆரம்பித்தான்? 'சீதையை' என்று ஆரம்பித்தால் ஸ்ரீராமன் மேலே தான் சொல்லப் போவதைப் பற்றிக் கவலைப்பட்டிருக்கக் கூடும் என்றுதான். இந்த அழகான....."

இந்தப் பிரசங்கத்தைத் திரு கருப்பண்ணன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். மளிகைக் கடை வியாபாரியான அவர் கடையிலுள்ள போர்டில், மறு நாள் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

இல்லை

அரிசி, சர்க்கரை, கோதுமை, ரவை, மைதாமா, அமுல் வகையறு எதுவும்

இல்லை

வியாபாரி, வால்மீகியைவிட ஒரு படி அதிகம் போய்ச் சந்தேகத்துக்கிடமின்றி விஷயத்தை முதலில் மட்டுமின்றி, பின்னாலும் மக்களுக்குத் தெரிவித்து விட்டிருக்கிறார்!

ஃ ஃ ஃ

சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேருஜி சம்பந்தமான புகைப்படக் காட்சி பார்ப்பதற்காக மட்டற்ற ஆவலுடனும், உள்ளக் கிளர்ச்சியுடனும் சென்றேன். ஆனால் உணர்ச்சியின்றித்தான் எழுத வருகிறது.

1. புகைப்படம் பிடிப்பு முதல்தரமானது.
2. சுமார் 150 புகைப்படங்கள் இருக்கின்றன.
3. நேருஜி காங்கிரஸ் மகாநாடுகளில் கலந்து கொண்டது, அணைக்கட்டுகள் திறந்து வைத்தது, உலகப் புகழ்பெற்ற தலைவர்களைச் சந்தித்தது சம்பந்தமான பெரிய படங்களைக் காணலாம்.
4. தமிழ் மக்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளும் முறையில் படங்களைப் பற்றிய தமிழில் குறிப்புள்ள அட்டைகள் இல்லை.

ஆனால் எனது உற்சாகத்தைக் கொன்று விட்டது இந்த அம்சங்கள் அல்ல. உள்ளே நுழைந்ததும் கண்ணில் படுவது நேருஜியின் தகனக் காட்சி சம்பந்தமான இரண்டு மிகப் பெரிய புகைப்படங்கள். இவற்றைப் பத்து அடி தூரத்துக்கப்பாலிருந்து கொண்டு பார்க்க வேண்டும் என்று ஒரு பெண்மணி அங்கே நின்று சொல்லிக் கொண்டிருக்கிறார். தீட்டுப் பட்டு விடும் என்று போலும்!

உள்ளே நேருஜி உயிர் துறந்து கண் மூடிக் கொண்டிருப்பதிலிருந்து, அவர் அஸ்தி அலகாபாதில் திரிவேணியில் கரைக்கப்பட்டது உள்ளிட்டு, அது விமானத்திலிருந்து கீழே தூவப்படும் வரையில் உள்ள காட்சிகளைக் காண்பிக்கும் படங்கள் சுமார் 50 இருக்கின்றன. நேருஜி மறைந்தபோது இந்திய செய்தி இலாகாவின் ரேடியோ நிலையங்கள் ஒப்பாரி சங்கீத நிலையங்களாக மாறியிருந்தன. நேருஜியின் ஆவியை அந்த இலாகா இப்படி மரணக் காட்சிப் புகைப்படங்களைக் கொண்டும் துரத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். விருந்து முடிந்ததும் வயலின் வித்வான் ஒருவரின் கச்சேரி நடந்தது. விருந்து வைத்தவர் ஷாவிடம் வித்வானைப் பற்றிய அவருடைய எண்ணத்தைக் கேட்டார். "இவர் கச்சேரியைக் கேட்கும்போது, எனக்குப் பாதருஸ்கியின் நினைவுதான் வருகிறது" என்றார் ஷா. விருந்து வைத்தவர் விழித்தார். "என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? பாதருஸ்கி வயலின் வித்வான் அல்லவே!" என்றார். "இவர் மட்டும்....?" என்று கேட்டார் ஷா.

— என். ஆர்



ரங்கப்பா "கங்கா ஸ்நானம் ஆச்சா?" என்று தம் நண்பர்களை வரிசைக் கிரமமாக, தெருத் தெருவாகச் சென்று மலர்ந்த முகத்துடனும், பூத்த புன்னகையுடனும் புது ஜரிகை வேஷ்டி, ஸில்க் ஜிப்பா அணிந்து விசாரித்துக் கொண்டு வந்ததைப் பார்த்தவர் யாரும் அவர் 'ரிடையர்' ஆகிவிட்டார் என்று நம்பவே மாட்டார்கள்.



உத்தியோகத்தில் என்று காலடி வைத்தாரோ, அதே முக மலர்ச்சியும், அதே புன்னகையும் தான் அவரை அலங்கரித்தன. அவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் கூடத் தீபாவளியன்றுதான்; அன்றிலிருந்து தான் அவர் 'பென்ஷன்தார்' ஆனார்.

அவருடைய அலுவலகத்திலாகட்டும், வெளியிலாகட்டும், யாரும் ரங்கப்பா ரிடையர் ஆவார் என்றே நினைக்கவில்லை. அவர் கூட அதைப் பற்றி நினைத்திருப்பாரோ என்பது சந்தேகம். ஆனால் இந்தப் பாழும் வயது என்று ஒன்றைப் பிரம்மா தலையில் எழுதி வைத்துவிட்டானே, அது மடமடவென்று கருட்டி படித்து ஓடி மற்ற ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்களை அவர்கள் உத்தியோகங்களிலிருந்து வெளியேற்றியது போல் ரங்கப்பாவையும் வெளியேற்றி விட்டது. ஆனால் ரங்கப்பாவுக்கும் மற்ற 'ரிடையர்டு'களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் 'இந்த உத்தியோகத்தில் நம் அனுபவம், அருகதை இவைகளுக்காக நம்மை இன்னும் இரண்டு வருடங்களாவது நீடிக்க மாட்டார்களா?' என்று ஏங்குவார்கள். நீடிக்காவிட்டால் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு மனமுடைந்து முப்பது வருஷங்களுக்கு முன் சர்க்கார் பணியில் சேர்ந்தது எவ்வளவு பிசகு, சர்க்காருக்கு ஒரு செய்நன்றி, நெஞ்சில் ஈரம் இருக்கிறதா என்று குறைப்பட்டுக் கொண்டு போவார்கள். ரங்கப்பா அந்த இனத்தைச் சேர்ந்தவரல்ல. அவர் உத்தியோகத்தில் இருந்தபோதிலும் சரி, அதை விட்டு விலகியபோதும் சரி, ஒரே மனப்பான்மையுடன்தான் இருந்தார். "வந்தது வரட்டும், போனது போகட்டும், அதனால் என்ன? 'வாட் ஈஸ் தேர்?'" என்ற சுலபமான மனப்பான்மையுடையவர் ரங்கப்பா.

யாராவது அவர் ரிடையர் ஆனது பற்றித் துக்கம் விசாரித்தாலோ, ஆச்சரியப்பட்டாலோ, ரங்கப்பா, "ஆம்! வாட் ஈஸ் தேர்! எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. எனக்கென்ன இப்போது பிள்ளையா குட்டியா? பெண்களுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமே என்ற கவலையா? பிள்ளைகளுக்குக் கல்லூரியில் அட்மிஷன் வாங்க வேண்டுமே என்ற விசாரமா? ஏதோ முப்பது வருஷங்கள் உழைத்துச் சம்பளம் வாங்கினேன். இனிமேல் வேலை செய்யாமல் பென்ஷன் வருகிறது. இதில் வருத்தப்பட வேண்டிய விஷயமே இல்லையே!" என்று சொல்வதைக் கேட்போருக்குச் சற்று அதிசயமாகவே இருக்கும். ரங்கப்பா சொன்னது உண்மைதான். அவருக்குப் பிள்ளைகுட்டி கிடையாது; மனைவி மக்கள் கிடையாது. கலியாணம் ஆகியிருந்தால்தானே மனைவி மக்கள் இருக்க முடியும்? ஏதோ தம் ஐம்பத்தைந்து பிராயத்தை ஒருவித பந்தபாசமில்லாமல் ஓட்டி விட்டார்.

ஃ ஃ ஃ

பெற்றோர்களை இளம் வயதிலேயே இழந்தார்; ஆனால் அவர் தந்தை அவர் உயர்படிப்பு எல்லாவற்றையும் பூர்த்தி செய்து விட்டுத்தான் கண்ணை மூடினார். தந்தை இருக்கும்போதே கலாசாலைப் படிப்பு முடிந்ததும் சர்க்கார் உத்தியோகமே கிடைத்து விட்டது. தந்தை திருப்தியுடன் தம் மகனை விட்டுச் சென்றார். ரங்கப்பாவுக்கு ஒரே உடன் பிறந்த தமையன் இருந்தார். அவருக்கு நல்ல இடத்துப் பெண்ணாகப் பார்த்து மணம் செய்து வைத்ததால் ரங்கப்பாவின் தாய்தந்தையர் உள்ளம் ரங்கப்பாவின் விவாக விஷயத்தில் அவ்வளவு கவலைப்படவில்லை. தாய் தந்தையரை இழந்த ரங்கப்பா கலியாணத்தைப் பற்றிய எண்ணமே இல்லாதிருந்தார். அவர் மனம் கிருகஸ்தாசிரமத்தை நாடவில்லை. தமையனார் எங்கெங்கோ வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வியாபார விஷயமாக இருந்து விட்டதால் தம்பியின் கவலையே இல்லை அவருக்கு.

ரங்கப்பா ஓர் அபூர்வ சிருஷ்டியாக விளங்கி வந்தார். அவருடைய சக உத்தியோகஸ்தர்கள் அவரைக் கண்டு பொறாமைப்பட்டார்கள்.

"ரங்கப்பா ஏன் இப்படி 'டோண்ட் கேர் மாஸ்டரா'க இருக்கிறார் தெரியுமா?" என்று ஒருவரையொரு-

வர் கேட்டுக் கொள்வார்கள். அதில் ஏதாவது கொஞ்சம் புத்திசாலியாக நினைத்துக் கொண்டிருப்பவர், விஷமமாக, மெல்ல, ரகசியமாக மற்றவர்கள் காதில் ஓதுவார்: "ரங்கப்பா இவ்வளவு ஜாலியாக இருக்கிறதுக்குக் காரணம் தெரியுமோ?" என்பார். சம்சார சாகரத்தின் அலை மோதி அடிபட்டு அவதிப் படும்' ஓர் ஆத்மா, "அவர் கலியாணமே செய்துக்காமே பிரம்மச்சாரியாக இருக்கார்! அதனாலேதான் இவ்வளவு கவலை இல்லாமே குஷியாக இருக்கார்" என்று ஒரு வறட்டு உண்மையைச் சொல்வார். ஆனால் அந்த அதிமேதாவி உத்தியோகஸ்தர், அவ்வளவு எளிதாக அந்தக் கேஸை டிஸ்மிஸ் செய்ய இணங்க மாட்டார்.

"போ-ய்யா! பைத்தியக்கார மனுஷா! ரங்கப்பா ஏன் இப்படிக் குஷியாக, எப்போதும் சந்தோஷமாக இருக்கார் தெரியுமா?" என்று காதோடு தமது சொந்தக் கற்பனையாகிய ஒரு மர்மக் கதையைச் சொல்லி ரங்கப்பாவின் வாழ்க்கை வரலாற்றுக்கே ஒரு திடுக்கிடும் புதுத் திருப்பம் கொடுத்துத் திகைக்க வைப்பார். அவருடைய கற்பனையில் ரங்கப்பாவின் ரகசிய வாழ்க்கையில் ஒரு மர்ம மாதைச் சிருஷ்டித்து, ஒரு காதல் புராணத்தைக் கற்பித்து, அந்த மாதரசியின் மூலம் ரங்கப்பா அடைந்திருக்கும் இன்பங்களையும், லாபங்களையும், செல்வங்களையும் பற்றி வாய் கூசாமல் நேரில் பார்த்ததுபோல் வர்ணிப்பார்.

ரங்கப்பாவுடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் சிலர், "ஏன் ரங்கா! ஊரெல்லாம் உன்னைப் பற்றிக் கன்னா பின்னாவென்று கதை கட்டி விடுகிறார்களே, பேசாமல் ஒரு தாலியைக் கட்டித் தொலைக்கப்படாது தானே?" என்று அவரிடம் இருந்த அன்பினால் உபதேசம் செய்ததுண்டு.

ரங்கப்பா, அதையெல்லாம் தப்பாக எடுத்துக் கொள்ளாமல் சிரித்துக் கொண்டே, "ஓ யெஸ்! தாலிதானே! கட்டினால் போச்சு! ஆனால் கட்டறதுக்குக் கழுத்தைத்தான் காணோம்! ஊரிலே என்னைப் பற்றி ஏதோ அபவாதமாகச் சொல்றாங்கன்னு தானே சொல்றீங்க! பாவம், சொன்னால் சொல்லட்டுமே! அதனாலே அவங்களுக்கு ஓர் ஆனந்தமா இருந்தால் எனக்கும் சந்தோஷம்தான்!" என்று இலகுவாக ஊர் வம்பைத் தள்ளி விடுவார். வேறு யாராகவாவது இருந்தால், "ஹாங்! அப்படியா சொல்றாங்க! எந்தப் பய சொன்னது? அவனைக் காண்பி. அவன் தோலை உரிச்சுப்பிடறேன், அவன் நாக்கை அறுத்துப்புடறேன்" என்று இ. பி. கோ.வில் காணப்படும் பல குற்றங்களுக்கு ஆளாகத் தயாராக இருப்பார்கள். போதாததற்கு ஒரு பெரிய மிளகுப்பொடிக் கடையையே கூட உபயோகிக்கச் சித்தப்படுவார்கள். ஆனால் ரங்கப்பா அப்படியெல்லாம் அநாவசியமாக அலட்டிக் கொள்பவர் அல்ல. சொல்பவர்களுக்குத்தானே வாய் வலிக்கப் போகிறது என்று தம் குதூகல மனப்பான்மையைக் கைவிடாமல், ஐம்பத்தைந்து வருஷங்களை வாழ்க்கையில் ஒண்டிக் கட்டையாகவே தள்ளி விட்டார்.

* * *

ரங்கப்பா ரிடையர் ஆகும் காலம் நெருங்கும்போதே அவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கட்டிய கதைகள் போல் அவரது எதிர்காலத்தைப் பற்றியும் ஜோஸ்யங்களைக் கிளப்பி விட்டார்கள்.

"என்ன ஸார்! உங்களைப் போல் நேர்மை, அனுபவம், திறமை வாய்ந்தவர்களைச் சும்மாவிட்டு வைப்பார்களா? உங்களை டெல்லிக்கே கூப்பிட்டு ஒரு பெரிய பொறுப்பில் வைப்பார்கள் பாருங்கள்!" என்று அவரிடம் சிலர் ஜோஸ்யம் சொன்னார்கள்.

"ரங்கப்பா அகௌண்ட்ஸிலே புலி! அவரை இந்தப் புதிய பெரிய காஸ் ப்ரொஜெக்டிலே கூப்பிடுகிறார்களாம்" என்பார் விஷயமறிந்த வட்டாரத்தார் ஒருவர்.

"ஜகஜ்ஜோதி ப்ராடக்ட்ஸ் கம்பெனி முதலாளி ஜகதலப் பிரதாப் நம்ம ரங்கப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். அவர் கம்பெனியிலே இவருக்கு மானேஜிங் டைரக்டர் வேலை காத்துண்டு இருக்கு" என்றார் மற்றொரு ஸர்வ ஞானி.



யூனிலெட்ட் நேஷன்ஸ் ஸ்தாபனத்திலே ஒரு பெரிய புள்ளி ரங்கப்பாவின் சொந்த அத்தை மகன்; அவர் ரங்கப்பா ரிடையர் ஆனதும் அவருக்கு அந்த ஸ்தாபனத்தில் தம் வேலைக்கே அவரை நியமித்துவிட்டுத் தாம் விலகிக் கொண்டு சந்நியாசம் வாங்கிக் கொள்வதற்காகவே உயிர் வாழ்கிறார் என்று பலமான நம்பிக்கை சிலரிடத்தில் இருந்தது.

ரங்கப்பா ரிடையர் ஆகிச் சில மாதங்கள் கழிந்தும் கூட, வாயு, அமிலம், ஜோதி முதலியவைகளை உற்பத்தி செய்யும் பெரிய கம்பெனிகள், மற்றும் பெரிய தேசிய, சர்வ தேசிய ஸ்தாபனங்கள் ஒன்றும், ரங்கப்பா என்று ஒரு திறமை வாய்ந்த அனுபவசாலி இருக்கிறார் என்பதை உணரவில்லை. மாமனுக்கு மச்சான், மைத்துனனுக்கு மருமகன், மாமியாருக்குப் பேரன், மனைவியின் ஒன்று விட்ட தம்பி, இப்படிப்பட்ட உறவினர்களுக்கு இன்னும் இஷ்டமித்திர பந்துக்களுக்காகவே உத்தியோகங்கள் பிறந்திருப்பது போல் தோன்றியது.

ரங்கப்பாவிடம் பெரும் மதிப்பு வைத்திருந்த நண்பர் — அவர் கோடிக் கணக்கில் பல துறைகளில் பணம் சம்பாதிப்பவர் — "சேச்சே! ரங்கப்பா! உன் யோக்கியதை என்ன, உன் அந்தஸ்து என்ன! உனக்கு நான் உத்தியோகம் கொடுப்பதா? நீ பிறரிடம் இனிமேல் வேலை செய்வதா? நான் உன்னை உத்தியோகத்தில் வைத்துக் கொண்டால் எனக்கு ரொம்பப் பாவம். அதோடு உன் அந்தஸ்துக்குத் தகுந்தபடி எங்கள் கம்பெனியில் உத்தியோகமே இல்லையே! பேசாமல் நீ சுதந்திரமா ஏதாவது தொழில் ஆரம்பி. நான் ஒத்தாசை பண்றேன்!" என்று தாம் எப்படி ரொம்ப ஏழ்மையிலிருந்து, தனித் தொழில் ஆரம்பித்து இவ்வளவு பெரிய செல்வந்தராக ஆனார் என்ற சுய சரிதையை ஓர் அத்தியாயம் ரங்கப்பாவுக்கு ஓதி, காப்பி, டிபன் கொடுத்துத் திருப்பி அனுப்பிவிட்டார்.

இன்னொரு பிரபல முதலாளி, ரங்கப்பாவிடம் மிகவும் தயாளமாக "இதோ பாரு ரங்கப்பா! உனக்கு வயசு குறைச்சலாக இருந்தால் கண்ணை மூடிக் கொண்டு ஒரு நல்ல பதவி கொடுத்திருப்பேன். எங்க கம்பெனியிலே இப்ப கவர்ன்மெண்ட் ரூல்ஸ்தான் ஃபாலோ பண்ணறோம். புது நியமனங்கள் எல்லாத்துக்கும் இளம் ரத்தம் வேணும்னு எங்க போர்டிலே தீர்மானத்தைக் கொண்டு வந்ததே நான்தான்" என்று சமாதானம் சொன்னார். அவருக்கு அறுபத்தோராவது விழா ஐந்து வருடங்களாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் என்பது மட்டும் ரங்கப்பாவுக்கு நினைவு வந்தது. அதை வெளி விடாமல் அவர் வெளியேறினார்.

இத்தனை ஏமாற்றத்திலும் ரங்கப்பாவின் களைப்பு அவரை விடவில்லை. நண்பர்கள் அவர் நிலைமையைக் கண்டு, "உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லே. இல்லாவிட்டால் உங்கள் சாமர்த்தியத்துக்கு உங்களை இப்படிச் சும்மா விட்டு வைப்பார்களா?" என்று அங்கலாய்த்தால், உடனே அவர் "ஹும்! அதனால் என்ன? எனக்கு என்ன அதிர்ஷ்டம் இல்லே! அவங்களுக்குத்தான் இல்லே. அந்த உத்தியோகங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லே! அவ்வளவுதானே!" என்பார்.

இப்படிக் காலம் போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று ரங்கப்பா வாழ்க்கையில் ஓர் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. அது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஒருநாள் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது அவர் கண்ணில் ஒரு "தேவை" விளம்பரம் பட்டது.


"அகில உலக ஆதிகுடிகளின் நல்வாழ்வு முன்னேற்ற ஸ்தாபனத்தின் கிளை ஒன்றுக்கு டபீர் நாட்டு ஆதி குடிமக்கள் பொதுநலப் பணிகளை ஏற்று நடத்த முதிர்ந்த நிர்வாக அனுபவம், திறமை, ஊக்கம் கொண்ட ஓர் உத்தியோகஸ்தர் தேவை. வயது அக்கறையில்லை. திடகாத்திரமாக மட்டும் இருக்க வேண்டும். எந்த நிலையிலும் உற்சாகத்துடன் உள்ள மனப்பான்மை முக்கியம். டபீர் நாட்டுத் தலைநகராகிய சிங்ஜெகோ நகரில் தலைமைக் காரியாலயத்தை நிர்வகிக்க வேண்டும். டபீர் நாட்டுக் காட்டுப் பிரதேசங்களில் சென்று அங்குள்ள குடிமக்களுடன் சகஜமாகப் பழகி, அவர்கள் பழக்க வழக்கங்களை அறிந்து, அவர்களை நாகரிக வாழ்க்கைக்குத் திருப்ப வேண்டும். சம்பளம் மாதம் ஆயிரம் டாலரோடு அலவன்ஸ்கள், இருப்பிடம், சாப்பாடு முதலியவை இலவசம்."

ரங்கப்பாவுக்கு இந்த விளம்பரத்தைக் கண்டதும் உற்சாகம் பீறிட்டெழுந்தது. மானிட சமூகத்தைக் கரையேற்ற வேண்டும் என்று அவர் உள்ளத்தில் முடங்கிக் கிடந்த உன்னத சேவை உணர்ச்சி பீறிட்டு எழுந்தது. அவர் மனத்தில் மங்கிக் கிடந்த மற்ற மனித உணர்ச்சிகள் சுடர் விட்டு, கொழுந்து விட ஆரம்பித்தன.

உடனே எடுத்தார், காகிதத்தையும் பேனாவையும். தீட்டினார் ஒரு மனு. தமது அனுபவம், யோக்கியதாம்சங்கள், குணவிசேஷங்களை, அதுவரையில் அவர் வாய் விட்டுச் சொல்லாத, கைவிட்டு எழுதாத அளவில் விவரித்து வரைந்து தள்ளினார். விளம்பரத்தில் கண்டிருந்த ஸ்தாபனத்துக்கு விலாசமிட்டுத் தபாலில் மனுவைச் சேர்த்தார்.

டபீர் நாட்டுக் குடிமக்கள் பழக்க வழக்கங்களைப் பற்றி நூல் நிலையங்களுக்குச் சென்று ஆராய்ந்தறியப் பார்த்தார். இந்த ஆராய்ச்சியின்போது சில ரசமான விஷயங்கள் அவருக்குக் கிடைத்தன. டபீர் நாட்டுக் குடி மக்கள் மிகவும் புராதனமானவர்கள். ஆதி கற்காலத்துக்கு முன்னிருந்தே வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் டபீர் நாட்டில் இப்போது ஆயிரம் பேர்களுக்கு மேல் இல்லை. அவர்களில் பாதிக்கு மேல் பெண்மணிகள். அந்நாட்டின் ஆதிக்குடிமக்களை ஆளுவது பெண் பரம்பரையினரே. ஆண்களுக்கு அதிகாரமே இல்லை. அவர்கள் பழக்க வழக்கங்களில் ஒரு முக்கியமான வழக்கம், ஒருவருக்கொருவர் நட்பைக் காண்பித்துக் கொள்ள மூக்கு, அல்லது காது அல்லது கை விரல்கள் அல்லது கால் விரல்கள் இவற்றில் ஏதாவது ஒன்றை ஒருவருக்கொருவர் கடித்துச் சுவைத்துக் கொள்ள வேண்டுமாம். இந்த உறுப்புக்களில் எவ்வளவுக் கெவ்வளவு சுவைக்கப்பட்டு உடலை விட்டு அகன்றிருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு அன்பு

ல்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை கற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை நீக்குகிறது.


கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை குறைக்கப் படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் க்ரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளில் புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைக்கும் நல்ல சுவையான நறுமணத்தினால், குழந்தைகள் ஆவலுடனேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வமாக கால்கேட் உபயோகித்தால், அது

- ✓ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✓ சொத்தையைத் தடுக்கிறது
- ✓ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



சிக்கன பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

ரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பேற பும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

வளர்ந்திருப்பதற்கு அறிகுறியாம்." இதைப் படித்ததுமே ரங்கப்பாவுக்குத் தம்மையறியாமல் மயிர் சிலிர்த்தது; ஒரு புத்துணர்ச்சி கிளம்பியது.

* * *

அவர் மனுப் போட்ட சில நாட்களுக்கெல்லாம் அவருக்கு உத்தியோக நியமன உத்தரவும், அத்துடன் பிரயாணச் செலவுக்கு ஐந்நூறு டாலரும் வந்து விட்டன. உடனே பாஸ்போர்ட், விஸா, 'பி' பாரம் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துகொண்டு பிரயாணத்துக்குச் சித்தமானார்.

டபீர் நாடு கிழக்கு பஸிபிக்கில் ஒரு சிறிய தீவு. அதற்கு ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கா இந்நாடுகளை ஆகாயம் மூலம் கடந்து, அமெரிக்காவிலிருந்து கப்பலில் போக வேண்டும். ரங்கப்பா புதிய உத்தியோகத்துக்கு நாடு கடந்து செல்லப் புறப்பட்ட போது விமான நிலையத்தில் கூட்டம் எள்ளுப் போட்டால் எள் விழாது.

அன்று அதே விமானத்தில் வெளிநாட்டுக்குக் கலாசார நல்லுறவு கோஷ்டியில் செல்லும் மிஸ் குலாப்ஜான் என்ற பிரபல சினிமா நட்சத்திரத்தைக் கண்டுகளிக்க வந்த கூட்டம் போக மற்றவர்கள் எல்லாம் ரங்கப்பாவைக் காணத்தான் வந்திருந்தார்கள்.

விமான நிலையத்தில் குழுமியிருந்த ரஸிகப் பெருமக்கள் கைக் குட்டைகளை வீச, விமானம் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தது.

* * *

ரங்கப்பா கழுத்தில் விழுந்த மாலைகளைப் பார்த்திருந்த மிஸ் குலாப்ஜான் அந்தக் கூட்டமெல்லாம் அவருக்காகத்தான் போல் இருக்கிறது என்று சந்தேகப்பட்டிருக்கலாம். அவரும் ரொம்ப முக்கிய மனிதர் என்று நினைத்து, விமானத்தில் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரங்கப்பாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். ரங்கப்பாவுக்குத்தான் எப்போதுமே சிரித்த முகமாயிற்றே! ஆகையால் அவர் அட்வான்ஸிலேயே சினிமா ராணிக்குத் தம் இதயபூர்வமான புன்னகைப் பூமாரி பொழிந்து விட்டார். பிறகு அந்த வெள்ளி திரை மோகினி அவரைக் குசலப் பிரச்னம் செய்ய அவரும் அவளுடைய தேகாரோக்கியம் க்ஷேமலாபங்களில் அளவு கடந்த அக்கறை காட்ட, அவள் நடித்த படங்களை ஒன்று விடாமல் அவர் பார்த்து ரஸித்ததாக அவர் சொல்ல, அதைக் கேட்டு அவளும் அகமகிழ, வானிலுள்ள வெண் மதியே அங்கு குதித்து விட்டதோ என்று அவர் சந்தேகித்ததாகவும், அவள் பெயருக்கொப்ப அவளுக்குள்ள இனிய குணத்தை அவர் சாற்றுக் கவி பாட அவள் ரோஜா வண்ணம் பூசிய கன்னங்கள் சிவக்க, — இப்படியாகத்தானே, விமானம் வானில் பறக்க, ரங்கப்பாவின் இதயமும் அந்த விண்மீன்பால் பறந்து துடிக்க — அந்த மடமாதின் கயல்விழிகளை உறக்கக் கள்வி பற்ற, ரங்கப்பாவும், கனவுலகத்தில் சஞ்சாரம் செய்ய..... இப்படியாகத்தானே இரவு போனதே தெரியாமல் கழிந்தது. விமானம் ஆங்காங்கு



இறங்கி நிற்கும்போது, சந்திரனை ரோஹிணி தொடர்வதுபோல் ரங்கப்பா பின்தொடர்ந்து அவளது கைப்பெட்டி, பைகளைத் தூக்கிச் சென்று ஆனந்தமடைந்தார்.

கடைசியில் நியூயார்க் வந்து சேருமுன் அவரது உடல் பொருள் ஆவி யாவற்றையும் மிஸ் குலாப்ஜான் செந்தாமரை (போலுள்ள 'சடா' அணிந்த) பொற்பாதங்களில் அர்ப்பணிக்கச் சித்தமாக இருந்தார். ஆனால் அந்த மலரிலையொத்த மெல்லிய பாதங்கள் அந்தப் பளுவைத் தாங்க முடியாதே என்ற ஒரே அக்கறையினால், உ. பொ. ஆ. மூன்றையும் அம்மோகினியிடம் சுமத்தாமல் தாமே சுமந்து கொண்டார்.

கடைசியில் பிரியும் காலம் வந்தது. அப்போது நாத் தழுதழுக்க, நெஞ்சு துடிதுடிக்க, ரங்கப்பா தன் இதய தேவியிடம் விடை பெறுகையில், டபீர் நாட்டுக்கு வந்து அந்நாட்டுக் குடிமக்களிடையே அவளது வெண்ணிலாவை வீசிக் குளிர வைக்க வேண்டும் என்று வேண்ட, அந்தத் தேவியும் தன் பக்தனுக்கு, "ஆகா! அப்படியே!" என்று வரமளித்து மறைந்தனள்.

* * *

பிறகு சில நாட்களுக்கு ரங்கப்பா மனத்தில் மின்னலுக்குப் பின் தோன்றும் இருள் போல் சூனியம் நிறைந்தது. இருந்தாலும் தமது இயற்கைக் குதூகலம் கொஞ்சம் குறைந்தும் அதை விடாமல் மீண்டும் முகமலர்ச்சியுடன் டபீர் நாட்டுக்குக் கப்பல் ஏறினார்.

டபீர் நாட்டில் ரங்கப்பாவுக்கு என்ன நேர்ந்தது? அவரது சாதனைகள் அங்கு என்ன என்பதெல்லாம் பின்னர்தான் (மர்மக் கதைகளில் கடைசியில் வரும் அதிசய அதிர்ச்சி போல்) தெரிய வந்தது. அங்கு அவர் வாழ்ந்த மூன்று ஆண்டுகளின் சரித்திர வரலாறுகளுக்கு ஆதாரமாக அவரது டைரியோ, சுய சரிதமோ, மற்றத் தஸ்தாவேஜுகளோ, கல்வெட்டுக்களோ, சாஸனங்களோ, ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

மூன்று வருடங்கள் சென்றபின் அவர் தாய்நாடு திரும்பிய பிறகுதான் சில அதிர்ச்சி தரும் உண்மைகள் புலப்பட்டன.

ஃ ஃ ஃ

ரங்கப்பா டபீர் விஜயத்திலிருந்து திரும்பி வரும் செய்தியை அவரே சில நண்பர்களுக்குத் தெரிவித்திருந்தார். அது மட்டுமல்லாமல் பத்திரிகைகளிலும், ''சேவா சக்கரவர்த்தி ரங்கப்பா டபீர் நாட்டைத் தம் இதயத்தால் வென்று நாடு திரும்புகிறார்'' என்று பிரகரித்து அவரை வரவேற்கப் பெரிய பொதுக் கமிட்டி நிர்மாணித்திருந்தார்கள். மக்கள் கடல் போல் விமான நிலையத்தில் குழுமினர்.

விமானம் வந்து இறங்கியது. விமானத்திலிருந்து பிரயாணிகள் ஒவ்வொருவராக இறங்கினர். ரங்கப்பாவைக் காணோம். நடுவில் இதற்குமுன் தெரிந்த முகம் ஒன்று தோன்றிற்று. முகம் தெரிந்ததே ஒழிய, முகத்தைத் தாங்கிய உடல் அடையாளமே தெரியவில்லை. அல்லிக் கொடிக்கும் மின்னல் கொடிக்கும் ஒப்பிடப்பட்டுக் கொண்டிருந்த அந்த உருவம் இப்போது உரலுக்கும் குதிருக்கும் ஒப்பிடும்படி இருந்தது. அந்த உருவத்தை மூன்றாண்டுகளுக்கு முன் பார்த்த அதே ரசிக மக்கள் இன்று அதை மிஸ் குலாப்ஜான் என்று தெரிந்துகொள்வது கஷ்டமாக இருந்தது. மூன்று வருடங்களுக்கு முன் ஆரவாரித்த அதே கைகளும் குரல்களும் ஏனோ இன்று இயங்காமல் ஒடுங்கி நின்றன.

கடைசியில் திடீரென்று ஒரே ஆரவாரம்; ''சேவா சக்கரவர்த்தி ரங்கப்பா வாழ்க'' என்ற குரல்கள் வானைப் பிளந்தன.

ரங்கப்பா தமக்கே உரிய சிரித்த முகத்துடன் கையைத் தூக்கி வணங்கிக் கொண்டு விமானத்தை விட்டு இறங்கினார். அடாடா! இதென்ன அவர் முகத்தில்...? அவர் மூக்கின் நுனி எங்கே? நல்ல நீர்க்கமான கருடன் மூக்குப் போலிருந்தது இப்போது ஏதோ சைனாவிலிருந்து வந்தவர் போலல்லவா இருக்கிறது!

அடே, இதென்ன? அவர் பக்கத்தில் இதென்ன ஒரு கார்மேகம்போல்...உருவம்.. ஆம்! மனித உருவம்தான்..... ரங்கப்பா கையைப் பிடித்துப் படியில் இறக்கி வருகிறார்.

அந்த மக்கள் ஆரவாரத்திலும் அமர்க்களத்திலும் நமக்கு ஒன்றும் புரியவில்லை. மலைக் குன்றுகளுக்கிடையே அவரும் அவருடன் வந்த உருவங்களும் மறைக்கப்படுகின்றன.

மிஸ் குலாப்ஜான்தான் இப்போது ஸ்ரீமதி குதிர்தேவி.... ரங்கப்பாவுக்கு மாலை சூட்டியவர்கள் முன்னணியில் நிற்கிறாள்.

ஃ ஃ ஃ

தீபாவளியன்று கடற்கரை அல்லோலகல்லோலப்பட்டது. அன்று ரங்கப்பாவின் அறுபத்தோராவது பிறந்த ஆண்டை மக்கள் கொண்டாடுகிறார்கள். வாழ்த்துப் பத்திரங்கள் வாசிக்கப்படுகின்றன. மாஜி மிஸ் குலாப்ஜான் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கிறார்.

தமக்கு மக்கள் காட்டிய பேரன்புக்கு நன்றி கூறிப் பதிலளிக்கையில் ரங்கப்பா கூறுகிறார்:

''அன்பு வெள்ளத்தில் என்னை மூழ்கடித்திருக்கும் பெருமக்களே! வணக்கம். உங்கள் பேரன்புக்கும் வாழ்த்துக்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் நான் செய்ததாக நீங்கள் பாராட்டிய சேவைக்கும், டபீர் நாட்டில் அடைந்த வெற்றிக்கும் பாராட்ட வேண்டிய ஒரு முக்கிய காரணம்...... இதோ உங்கள் முன் இருக்கும் என் அருமைத் தலைவி.... நான் துணைவியாகக் கொண்ட — என்னை ஆட்கொண்ட — இந்த அரும் பெரும் தாரகை.... ஸ்ரீமதி டம்பலோக்கா மினியாட்டா.... டபீர் நாட்டரசி (பெருத்த கரகோஷம் – ஆரவாரம்) என்னை இந்த இதயராணி ஆட்கொள்ளா விட்டால் என் பணி அங்கு வெற்றியே பெற்றிருக்காது. என் அருமைத் துணைவிக்கு என் மேல் எவ்வளவு அளவுகடந்த அன்பு என்பதற்கு என் மூக்கே அத்தாட்சி.... (பலத்த கரகோஷம்) எனக்கு அவள் மேல் இருக்கும் அன்புக்கு அவளது காது இருந்த இடம் அடையாளம். (பலத்த கரகோஷம். டம்பலோக்காவின் இடது காதைக் காணோம்......!)




ஃ ஃ ஃ


ரங்கப்பாவை இந்த விழாவுக்குப் பிறகு சந்தித்த அவரது ஆப்த நண்பர்கள், ''என்னப்பா! ரங்கப்பா! கலியாணப் பேச்சு எடுத்தால் விசுவாமித்திரர் போல் கொதிப்பியே!'' என்று பூர்வாசிரமத்தை நினைவூட்ட, ரங்கப்பா சிரித்துக் கொண்டே, ''ஆமாம்! நான் பிரமச்சாரி ஆசிரமத்திலேயிருந்து ரிடையர்ட் ஆயிட்டேன், இப்போ! இப்பவும் ரிடையர்ட் ரங்கப்பாதான்'' என்றார். அவருடைய நண்பர்களும், பொதுமக்களும் எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவர் மீண்டும் தம் துணைவியுடன் டபீர் நாட்டுக்கே தலைதீபாவளிக்குத் திரும்பிப் போய் விட்டார். அவருடைய சதாபிஷேகத்துக்குக் கண்டிப்பாகத் திரும்பி வருவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்!

விக்ஸிலிருந்து புதிய சக்திவாய்ந்த இருமல் மருந்து

அடமுள்ள இருமலை நிறுத்துகிறது

இருமல் ஆரம்பமாகும் இடத்தில் செயல்புரிகிறது...இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தில்






எரிச்சலைக் கொடுக்கும், தூக்கத்தைக் கெடுக்கும் இருமலினால் நீங்கள் அவதிப்படவேண்டாம். இருமல் உங்கள் தொண்டையில் மட்டும் இருப்பதல்ல என்பது மருத்துவ விஞ்ஞானம் இப்போது அறிந்த விஷயம். உண்மையில், இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தில்தான் உங்கள் இருமல் அடங்கியிருக்கிறது. தொண்டை அழற்சி, சுவாசக் குழாய் அடைப்பு ஆகியவைகள் இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தைத் தூண்ட, நீங்கள் இரும ஆரம்பிக்கிறீர்கள்

இருமலை நிறுத்துவதற்கு இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரம் அமைதியடைய வேண்டியது அவசியம். விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள பிரத்தியேகமான "இருமல் சமனிகள்" உங்கள் இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தை விரைவில் அடைந்து, அதை சீக்கிரமே சமனப்படுத்த இருமல் நிற்கிறது.

அதே நேரத்தில், விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள சக்தி வாய்ந்த மருந்துகள் தீவிரமாக வேலை செய்து, அடைப்புள்ள சுவாசக் குழாயைத் திறந்து, வலிமிக்க மார்பு இறுக்கத்தை நீக்கி, தொண்டை எரிச்சலைப் போக்குகிறது.

விக்ஸ் பார்முலா 44 உங்களுக்கு இருமலிலிருந்து துரிதமான நிவாரணத்தை அளிக்கிறது ... அடங்காத இருமலிலிருந்து விடுதலை பெற்று, நீங்கள் இரவு முழுவதும் சுகமாகத் தூங்குகிறீர்கள்.



உங்கள் மார்பில் செயல்புரிகிறது

விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள விசேஷ கூட்டுப் பொருள்கள் உங்கள் சுவாசக் குழாய்களில் ஆழ்ந்து வேலை செய்து வலிமிக்க மார்பு இறுக்கத்தை நீக்குகிறது.



உங்கள் தொண்டையில் செயல்புரிகிறது

விக்ஸ் பார்முலா 44 இருமலினால் தொண்டையில் ஏற்படும் வெடிப்புகளைத் துரிதமாகக் குணப்படுத்துகிறது. தொண்டை அழற்சியை உடனடியாகச் சமனப்படுத்துகிறது.



உட்கொள்ளும் அளவு

உட்கொள்ளும் சரியான அளவை அட்டைப்பெட்டியின் மேல் உள்ள விபரங்களைத் தயவு செய்து படியுங்கள்.



விக்ஸ் பார்முலா 44

காஃப் மிக்ஸ்சர் இருமல் ஆரம்பமாகுமிடத்தில் செயல்புரிகிறது

VF-244

"கண்களை ஏன் மூடிக்கொள்கிறாய்? உன் கண்களை நான் பார்த்தால் உன்னைச் சுட்டுக் கொல்லத் தயங்குவேன் என்று நினைத்தாயா?'' என்று உமாவை நோக்கிப் பிச்சமணி சீறினான்.

உமா தன் கண்களை விரியத் திறந்து பிச்சமணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவளை ஊசிமுனையால் குத்துவது போல் ஒரு கணம் ஊடுருவிப் பார்த்த பிச்சமணி, ''உன் இருதயத்தில் சுட்டுக் கொல்லச் சொல்கிறாயா?'' என்று கேட்டுவிட்டு விசித்திரமாகவும் அளவு கடந்த வேதனையின் வெறியோடும் சிரித்தான்.

பிறகு அவன், ''நான் தற்கொலை செய்து கொள்ள விரும்பியபோதும், என் கைத் துப்பாக்கியால் என் இருதயத்தில் சுட்டுக் கொல்லாமல் என் கன்னப் பொட்டிலேயே சுட்டுக் கொல்ல முயன்றேன். அது ஏன் தெரியுமா? என் இருதயத்தில் என் லட்சிய தேவதையாக, மறு ஜன்மத்திலாவது என் வாழ்க்கைத் துணைவியாவாய் என்ற நம்பிக்கையின் வடிவமாக நீ கொலு வீற்றிருக்கிறாய்! நான் சாக நேர்ந்தாலும் என் இருதயத்தோடு அதில் உள்ள உன் உருவமும் சிதைந்து விடக் கூடாது. உன்னைப் புரிந்து கொள்ள முடியாத என் மூளைதான் சிதறிவிட வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் நீயோ சிறிதும் கூசாமல் உன் இருதயத்தில் சுடச் சொல்கிறாய். ஏனென்றால் உன் இருதயத்தில் நான் இல்லை! நான் இல்லை!'' என்று ஆக்ரோஷத்தோடும் அழுகையோடும் குமுறினான்.

உமாவுக்கு மெய் சிலிர்த்தது. அதனூடே உடம்பெல்லாம் ஒரு புதிய அனல் வேகமும் பரவியது. பிச்சமணியின் அத்தகைய அன்பைப் போல் இந்த உலகத்தில் வேறு எந்த ஆடவனிடமிருந்தும் எந்தப் பெண்ணுமே பெற முடியாது என்று நினைத்தபோது அவளுக்கு இதுவரை அறியாத ஒரு பரவசமும் உண்டாயிற்று.

''உமா! உன்னிடம் கடைசியாக ஒன்று கேட்டுக் கொள்கிறேன். என்னை நீ புறக்கணித்து



குண்டு மல்லிகை

விட்ட பிறகு, உன் நினைவைத் தாங்க முடியாமல் நான் தத்தளிக்கும்போது என்னை நிம்மதியாகச் சாகவாவது விடு.''

''இல்லை! நீங்கள் வாழத்தான் வேண்டும்!'' என்றாள் உமா வேகமாக.

''இனிமேல் நான் எதற்காக யாருக்காக வாழ வேண்டும்? என் தாத்தாவின் வீர பரம்பரைக் காகவா? எவளோ ஒரு பெண்ணுக்காகவா?''

''இல்லை. எனக்காகவே நீங்கள் வாழ வேண்டும்!''

''உனக்காகவா?'' என்று பிச்சமணி மிகுந்த வியப்போடு அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''ஆமாம். உங்கள் வாழ்க்கையை என் கையில் தான் உங்கள் தாத்தா ஒப்படைத்திருக்கிறார். அதற்காக அவர் என்னிடம் ஒரு வாக்குறுதியும் கேட்டார்....''

பிச்சமணி வேதனையின் விரசலாகவும், விரக்தியின் வெடிப்பாகவும் பலமாகச் சிரித்தான். பிறகு அவன், ''என் தாத்தா கேட்ட வாக்குறுதிக்காக என்னை நீ ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை! இதற்காக அவர் உன்னிடம் வந்து தான தர்மம் கேட்டிருக்க வேண்டியதும் இல்லை!'' என்றான்.

''வாக்குறுதி மட்டுமல்ல! முன்பொரு தடவை நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி வந்தீர்கள் அல்லவா?''



''ஆமாம். அப்போது என்னை நீ புறக்கணித்து அனுப்பி விட்டாய்! இப்போது நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று பயந்தோ, என்மீது இரக்கப்பட்டோ என்னை நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதில்லை! உன்னுடைய பரிதாபம் எனக்குச் சிறிதும் தேவையில்லை!''

உமா தழுதழுக்கும் குரலில், ''உங்களைச் சந்தோஷப்படுத்த என்னால் முடியும் என்றால் உங்கள் வாழ்க்கைத் துணைவியாகிறேன்!'' என்றாள்.

''என் சந்தோஷத்துக்காக மட்டும் நீ என் வாழ்க்கைத் துணைவியாக வேண்டியதில்லை'' என்று பிச்சுமணி பொருமினான்.

உமாவுக்கு அழுகை வந்துவிடும்போலிருந்தது. அவள் கண்கலங்கப் பிச்சுமணியின் முகத்தை ஒரு புது அர்த்த புஷ்டியோடு ஏறிட்டுப் பார்த்து,

''நானும் உள்ளூற உங்களைக் காதலிக்கிறேன் என்று என் வாயாலேயே சொல்லச் சொல்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள். என்னை விட இன்னும் சின்னவளாக, புதியவளாக ஒரு பெண்ணை நீங்கள் கல்யாணம் செய்துகொண்டால் உங்கள் எதிர்காலம் மிகவும் சந்தோஷமாக இருக்கும் என்று நினைத்தேன்...'' என்றாள்.

''அதை எப்படி உன்னால் நினைக்க முடியும்?''

''அவ்வளவு தூரம்... அவ்வளவு தூரம் உங்கள் மீது எனக்கு...'' என்ற உமா அதற்குமேல் தன் வாயால் சொல்ல முடியாமல் அப்படியே பிச்சுமணியின் விசாலமான மார்பில் தன்

முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவளுடைய வாழ்க்கையிலேயே முதன் முதலாகத் தன் நெஞ்சமெல்லாம் விம்மிக் குலுங்கும்படி, தன் ஆத்மாவெல்லாம் மலர்ந்து விரியும்படி, தன் பெண்மையெல்லாம் பூரணமாகப் பூத்துப் பூரிக்கும்படி அவள் விம்மி விம்மி அழுதாள்!

அவளுடைய முகத்தைப் பிச்சுமணி தன் இரு கைகளாலும் தூக்கி நிமிர்த்தி அந்த முகத்தைத் தாமரை மொட்டைப் போல் தன் கைக்குள் வைத்துக் கொண்டு பார்த்தான். உமாவுக்குக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் கருவிழிகளிலே ஒரு புதிய ஆனந்தம் ஒளி வீசியது. தன் காதலின் பரவசத்தையெல்லாம் அவனுக்கு வாரி வழங்கவும், அதிலேயே தானும் லயித்து நிற்கவும் தன்னிடம் உள்ளது அனைத்தையும் அவனுக்குத் தாராளமாக அர்ப்பணித்துத் தன்னையே அவனிடம் சமர்ப்பித்து விடவும் அவள் தயாராகவே நின்றாள். அவள் உணருமுன்பே அத்தகைய காதல் அவளைப் பூரணமாக ஆட்கொண்டு விட்டது.

நிர்மலமான வைகறைப் பனித் திவலைகள் படிந்திருக்கும் பூ மொட்டுப் போன்ற உமாவின் முகத்தைப் பிச்சுமணி தன் முகத்தருகில் இழுத்து அவளுடைய கருவிழிகள் வழியாக அவளுடைய அந்தராத்மாவை யெல்லாம் ஊடுருவிப் பார்த்தபடி, "நீயும் என்னைக் காதலிக்கிறாய் இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம்! ஆமாம்!" என்று உமா ஆனந்த பரவசத்தோடு பலமாகத் தலையாட்டினாள்.

"இத்தனை நாட்களாக அதை ஏன் நீ ஒப்புக் கொள்ளவில்லை?" என்று பிச்சுமணியும் தழுதழுக்கும் குரலில் அவளிடம் கேட்டான்.

"உங்கள் எதிர்காலத்துக்காக அதை என் மனத்துக்குள்ளேயே மூடி மறைக்கப் பார்த்தேன். ஆனால் கடைசியில்... கடைசியில்... என் மனத்தோடு இதற்கு மேலும் போராட முடியாமல் களைத்துப் போய்விட்டேன்!" என்று சொன்ன உமா அப்படியே சரிந்து அவன் கால்களில் விழுந்து அவனுடைய பாதங்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். பிறகு அவனுடைய கால்களைத் தன் இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "இனி நீங்கள் என்னைப் போகச் சொன்னாலும் நான் போக மாட்டேன்! உங்களை விட்டுப் போகவே மாட்டேன்! உங்களை விடவே மாட்டேன்!" என்று உணர்ச்சி வசமாகி விம்மினாள்.

அவளைப் பிச்சுமணி தன்னிரு கைகளாலும் தூக்கிப் பூச்செண்டைப் போல் அவளைத் தன்னிரு கைகளுக்குள் வைத்துக் குலுக்கிக் கொண்டே, ஆசை ஆவேசத்தின் உச்சஸ்தாயியில் "உமா! உமா!" என்று கூப்பிட்டுத் தத்தளித்தான். பிறகு அளவு கடந்த காதலின் தாபத்தோடும், அடங்காத பசியோடும், அவளுடைய கூந்தலையும், முகத்தையும், கண்களையும், கண்ணிமைகளையும், கன்னங்களையும், உதடுகளையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு அத்தனையிலும் தன் அன்பு மழையை மாறி மாறிப் பொழிந்து கொண்டேயிருந்தான். உமாவுக்கு மூச்சு முட்டியதென்றாலும் அவள் தடுக்கவில்லை; திமிறவில்லை. அதன் லயிப்பிலே தன்னையே இழந்து நின்றாள். பல நாட்களாகக் குமுறிக் கொண்டிருந்த காதல் எரிமலை வெடித்து அதிலிருந்து அதி வேகமாகப் பொங்கி வரும் இன்பத் தீயின் பிரவாகத்திலே அவன் அமிழ்ந்து விட்டான். அதிலே ஆத்மீகக் கலப்பின் அலாதியான ஆனந்தத்தையும் அதன் பூரண மலர்ச்சியையும் உணர்ந்தான்.

பிச்சுமணியும் தனக்குக் கிடைக்க முடியாத ஒன்று கிடைத்து விட்டது என்ற ஆனந்தத் துள்ளலோடு, "உமா! உமா! உன் சின்னப் பிள்ளையாரிடம் நான் கேட்ட வரம் பலித்து விட்டது!" என்று உற்சாகமாகக் கூவினான்.


அப்போதுதான் இந்த உலக ஸ்மரணை பெற்றவளாக உமா மெல்ல விலகி நின்று "வாருங்கள். உங்கள் தாத்தாவிடம் போய், அவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்வோம்!" என்றாள்.

அத்தியாயம் அறுபத்துமூன்று

பிரிவும் பிணைப்பும்

மேஜர் ராமதுரையின் பங்களாவில் பல வருஷங்களாகப் பூட்டிக் கிடந்த ராணி மஹால் முதன் முதலாகத் திறக்கப்பட்டது. அதை டாக்டர் ஜகந்நாதன்தான் திறந்து, அங்கு ஒரு பெரிய இரும்புப் பெட்டகத்தில் வைக்கப் பட்டிருந்த பிச்சுமணியின் பாட்டிக்குரிய பழங்காலத்து நகைகளையெல்லாம்

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1964 நவம்பர் 8 — **1964 டிசம்பர் 2**

பர்த் வசதியற்ற மற்றும் பங்க் வசதியுள்ள மேற்கண்ட கப்பல் பிரயாணத்துக்குரிய டிக்கட்டுகள் எங்களிடமிருந்தும் கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

C. M. குட்டி	கோனா டிராவல்ஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு	மாஸ்காட் ஹோட்டல்
சென்னை - 1	திருவனந்தபுரம்

வெளியூர் பிரயாணிகள் கப்பல் கட்டணத் தொகை முழுவதையும், கம்பெனியின் புரோக்கர்களுக்கு அல்லது நேரிடையாக எங்களுக்கு மணியார்டர் மூலமோ, அல்லது பாங்க் டிராப்டாகவோ முன்னதாக அனுப்பி டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து கொள்ளலாம். கப்பல் புறப்பட குறைந்தது நான்கு நாட்களுக்கு முன்னதாக பிரயாண தஸ்தாவேஜுகளைக் காண்பித்து டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாகப்பட்டினத்திலிருந்து

1964 நவம்பர் 9 — **1964 டிசம்பர் 3**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு, சிங்கப்பூருக்குப் போக விரும்பும் பிரயாணிகள் பூரா கட்டணத்தையும் ரொக்கமாகவோ மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலமாகவோ

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

என்ற விலாசத்துக்கு நேரிடையாக அனுப்பி டிக்கட்டுகளை புக் செய்து கொள்ளலாம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விபரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்	மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
7, அரமனைக்காரத் தெரு, சென்னை -1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



எடுத்து உமாவிடம் கொடுத்து அவற்றையெல்லாம் அவள் அணிந்து கொள்ளும்படி செய்தார்.

அந்தக் கோலத்தில், ஏராளமான வைர நகைகளுக்கு இடையே மினுமினுக்கும் உமாவைப் பார்த்ததும், பிச்சுமணிக்கு ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. அதைப் பார்த்த உமா புது மணப் பெண்ணைப் போல் நாணப் புன்முறுவலுடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உமா! இப்போது நீயும் பிச்சுமணியும் ஒன்றாகப் போய் மேஜரின் முன்னால் புது மணத் தம்பதிகளைப் போல் நிற்க வேண்டும். கிழவர் மிகவும் அகமகிழ்வார். அவருக்கு ஆத்ம சாந்தியும் கிடைத்து விடும்!'' என்றார் ஜகந்நாதன்.

''ஆனால் டாக்டர்! என் பாட்டி முதலானவர்களெல்லாம்...'' என்று உமா தயங்கினாள்.

''அவர்களுடைய ஆசீர்வாதத்தையும், உன் தங்கையின் ஆரவாரங்களையும் பிறகு நீ பெற்றுக் கொள்ளலாம். சம்பிரதாயமான திருமணத்தையும், பின்னால் பிரமாதமாக நடத்தலாம். இப்போது பெரியவரின் முன்னால் நீங்கள் இருவரும் புது மணத் தம்பதிகள் போலவே புன்முறுவலுடன் நிற்க வேண்டும். அவருடைய நிலைக்காகச் சிறிதும் துக்கம் காட்டிக் கொள்ளக் கூடாது. பிச்சுமணி! நீ முக்கியமாக இந்த நேரத்தில் அழக் கூடாது. உன் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொள். உன் தாத்தா இந்த உலகத்தை விட்டுப் போகும்போது தம் பேரனின் முகத்தில் சந்தோஷத்தைப் பார்த்துக் கொண்டேதான் போக வேண்டும்.''

பிச்சுமணி தம் விம்மலை அடக்கிக் கொண்டான். தன் தாத்தாவின் இறுதி விருப்பம் நிறைவேறுவதற்கும் தனக்கு உமா கிடைப்பதற்கும் டாக்டர் ஜகந்நாதன்தான் மூல காரணம் என்று நினைத்ததும் அவன் உணர்ச்சிப் பெருக்கோடு, தன் கண்களில் நீர் துளிக்க, ''டாக்டர், தாங்க்ஸ்!'' என்றான் பரவசத்தோடு.

உமாவும் நன்றிப் பெருக்கோடு ஜகந்நாதனை ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''டாக்டர்! என் தங்கை வசந்தி தன் வாழ்வை யெல்லாம் உங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறாள். அவளுக்கும், ஒரு முடிவு நீங்கள் செய்ய வேண்டும்!'' என்றாள்.

''ஆண்டவனின் கதாபாத்திரங்களான நாம் எல்லோரும் ஒவ்வொரு முடிவை நோக்கித்தான் ஓடிக்கொண்டிருக்கிறோம்!'' என்று ஜகந்நாதன் சிரிக்க முயன்றார்.

பிறகு அவர் உமாவையும் பிச்சுமணியையும் அழைத்துக் கொண்டு மேஜர் ராமதுரையின் அறைக்குச் சென்றார். அங்கு கிழவர் இன்னும் சுயநினைவு திரும்பாத நிலையிலேயே மரணப் படுக்கையில் கிடந்தார். அவரது கண்ணிமைகள் மூடியபடியே இருந்தன.

அவருடைய கட்டிலின் அருகில் பிச்சுமணியும் உமாவும் வந்து நின்றார்கள். அவர்களுக்கு டாக்டர் ஜகந்நாதன் ஜாடை காட்டி அவ்விருவரும் ஒருவர் கையை ஒருவர் கோத்துக்கொண்டு ஜோடியாக நிற்கும்படி செய்துவிட்டு, ''பிச்சுமணி! இந்தக் கடைசி நேரத்தில் உன் தாத்தாவின் ஆத்மாவை விழிப்புறச் செய்யும் சக்தி டாக்டர்களின் மருந்தை விட உன் குரலுக்குத்தான் அதிகம் உண்டு. உன் தாத்தாவைக் கூப்பிடு!'' என்றார்.

''தாத்தா! தாத்தா!'' என்று பிச்சுமணி தன் நெஞ்சமெல்லாம் விம்மக் கூவினான். அந்த அன்பின் ஆழமான குரல் எங்கோ மறு உலகத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் தன் தாத்தாவின் உயிரைச் சிறிது நிறுத்தித் திரும்பிப் பார்க்கச் செய்வது போல் இருந்தது.

கிழவரின் உடம்பில் ஓர் அசைவு தோன்றியது. அவரது கண் இமைகள் மெல்லத் திறந்தன. குத்துவிளக்கு அணைவதற்கு முன்னால் அதிகமாகச் சுடர் விட்டுப் பிரகாசிப்பது போல் அவருடைய கண்களில் ஒரு புதிய பிரகாசமும் தோன்றியது. ஆனாலும் பேசுவதற்கோ எழுந்திருப்பதற்கோ அவருக்குச் சக்தி இல்லை.

அவர் தம் கண்ணெதிரே ஒரு கணம் வெறித்துப் பார்த்தார். மங்கிய பார்வை சிறிது தெளிவுற்றுத் தம் கண்களின் முன்னால் தம் பேரனும் உமாவும் ஜோடியாகக் கை கோத்துக் கொண்டு நிற்பதை உணர்ந்ததும் அவருக்கு வியப்பும், பிறகு ஆனந்தமும் உண்டாயிற்று. அவ்விருவர் முகங்களையும் தம் விழிகளால் மாறிப் மாறிப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

அந்தச் சமயம் டாக்டர் ஜகந்நாதன் பட்லர் இருதயசாமியைக் கூப்பிட்டார். ஏற்கனவே அவர் வரவழைத்துத் தயாராக வைத்திருந்த இரண்டு ரோஜாப்பூ மாலைகளை எடுத்து வரச் சொல்லி, பிச்சுமணியின் கையில் ஒரு மாலையையும், உமாவின் கையில் ஒரு

மாலையையும் கொடுத்து இருவரையும் ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக் கொள்ளும்படி சொன்னார்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும் கிழவரின் முகத்தில் அளவிலாத ஆனந்தம் பிரகாசித்தது. தம் பேரனை ஒரு நல்ல பெண்ணின் கையில் ஒப்படைத்து விட்டுத்தான் இந்த உலகத்தை விட்டுப் போகப் போகிறோம் என்ற திருப்தியும் நிறைந்தது. அதற்காக டாக்டர் ஜகந்நாதன் நின்ற திசைப் பக்கம் கிழவர் தம் கைகளை மிகவும் பிரயாசையுடன் தூக்கிக் கும்பிட்டார்.

அவருடைய வாழ்நாளிலேயே ஒரு சக மனிதரை அவர் கையெடுத்துக் கும்பிட்டது அதுதான் முதல் தடவை! அதை நினைத்து ஜகந்நாதன் புன்முறுவல் செய்தார்.

பிச்சுமணியும் உமாவும் புது மணத் தம்பதிகளாக ஜோடியாக நின்றபடியே கிழவரின் பாதங்களைத் தொட்டுத் தங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டு அவரைக் கும்பிட்டார்கள்.

அவர்களை வாழ்த்தும் விதமாகக் கிழவர் ஏதோ வாயசைத்துக் கொண்டே தம் கைகளால் ஆசிர்வதித்தார்.

பிறகு பிச்சுமணியின் முகத்தில் பொங்கிப் புரளும் சந்தோஷத்தையும் அந்த சந்தோஷத்துக்கு அடியில் தன் தாத்தாவின்மீது அவன் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தையும் மேஜர் ராமதுரை பார்த்து மகிழ்ந்து கொண்டே தம்இறுதி மூச்சை நீத்தார்!

பிச்சுமணி ''ஓ'வென்று கதறி அழுது தன் தாத்தாவின் மீது விழுந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு வெகு நேரம் வரை பச்சைக் குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டேயிருந்தான். உமா கண்ணீர் வடித்தபடியே அசைவற்று நின்றாள்.

அவ்விருவரையும் அங்கு சிறிதுநேரம் தனியாக இருக்கும்படி விட்டுச் செல்ல வேண்டுமென்று கருதிய டாக்டர் ஜகந்நாதன், பட்லர் இருதயசாமிக்கு ஜாடை காட்டினார். உடனே பட்லர் இருதயசாமியும் அதைப் புரிந்து கொண்டு கண்ணீரோடும் டாக்டரோடும் அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

பிச்சுமணியின் அழுகை ஓயவேயில்லை ''தாத்தா! தாத்தா!'' என்று கத்திக் கொண்டே இருந்தான். அந்தப் புலம்பலிலேயே அவனுடைய சக்தியெல்லாம் கரைந்து அவனுடைய இருதயம் நின்றுவிடுமோ என்று கூடத் தோன்றியது.

உமா மெல்ல அவன் தோள்களின் மீது தன் கையை வைத்து அவனைத் தன் பக்கமாகத் திருப்பினாள். பிச்சுமணி அப்படியே அவளுடைய கைகளுக்குள் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பினான். ஏதோ பெரிதாக ஒன்றை இழந்துவிட்ட ஒரு குழந்தை தனக்கு இதமான தாய்மையின் அரவணைப்பையும் ஆறுதலையும் பெற்றுத் தவிப்பது போலவே இருந்தது அது!

உமா பரிவோடும், பாச பந்தத்தோடும் அவனை அணைத்துக் கொண்டாள். பிறகு தன் இரு கைகளாலும் அவன் முகத்தைத் தூக்கி, அவனுடைய கண்ணீரையெல்லாம் தன் புடவைத் தலைப்பாலும் தன் கைகளாலும் கூடத் துடைத்தாள்.

பிச்சுமணியை வளர்த்த ஒரு பாசத்தின் இறுகிய பிடிப்பு பிரிந்துவிட்டது. என்றாலும் இனி வாழ்க்கையை வளமாக்கக் கூடிய ஒரு பாசத்தின் இதமான புதிய பிணைப்பு அவனுக்குக் கிடைத்து விட்டது! (தொடரும்)



சாரங்கன்: நோட்டீஸ்தான் கொ
இருக்கான். இரண்டு நாளையிலே
பண்ணிட மாட்டேன் ?

ராமசாமி: என்னப்பா நீ சேர்த்து வை
சிருக்கிற குப்பைகளை இரண்டு நாட்களில்
படிச் சரிப் படுத்துவே ? குறைஞ்சது பத்
கருணதகளையாவது மேல விட்டால்தா
அது குறையும் !

சாரங்கன்: போடா, முட்டாள்!
பண்ணுறதென்றும் வேலையைச் சரிபண்
றது என்றுதானு அர்த்தம்?

ராம: பின்னே?

சார: நம்ப மானேஜரையே இரு
நான்கு மணி நேரத்திலே சரிபண்ணுவே ;



மேல் மாடி காலி

தாமரை மணாளன்

[சாரங்கன் 'விக்கல்ராம்' கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக நியமிக்கப் பட்ட ஒரு காரணத்துக்காக அங்கே வேலை எதையும் செய்த தாகச் சரித்திரம் இல்லை. மேலதி காரிகளின் பேரு, கடிகாரம், முத லானவற்றைத் தனக்குத் தெரிந்த நண்பர்கள் மூலம் ரிப்பேர் செய்து கொடுப்பது போன்ற சில்லறை சகாயங்களால் அங்கு காலூன்றிய வன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, 'சம்பளம் வாங்க வேண்டுமானால் வேலைகூடச் செய்ய வேண்டும்' என்ற அசிப்போன சித்தாந்தத் தைக் கொண்டிருந்த ஒரு புதிய மானேஜர் வந்து சேர்ந் தார். அதன் விளைவு, சாரங்க னுக்கு ஒரு 'கால் கடிதாக' கொடுக்கப்பட்டது.]

காட்சி – 1

[அலுவலக அறைக்குள் சாரங்கனும் அவன் நண்பனும் பேசிக் கொண் டிருக்கிறார்கள்.]

ராமசாமி: என்னப்பா, உன் கைவரிசை புது மானேஜரிடம் பலிக்கவில்லைபோலிருக்கே: மனுஷன் கால் கடிதாக கொடுத்து விட் டாரே !

ராம: டேய், ஆசாமி அரக்கன்டா !

சார: அவர் அரக்கன்னு நான் அவரைச் சம்ஹாரம் பண்ண அவதாரம் எடுத் தவன்னு தெரிஞ்சுக்கோ ! இப்போ நீ பார்த்துக் கொண்டே இரு! என் வேலை நீக்க நோட்டீசை டைப் அடித்த டைப்பிஸ்ட் மைதிலி நாளைக்கே எனக்கு ஒரு பிரமோஷ ஆர்டரை அடிக்கப் போகிறாள்!

ராம: அட துரதிர்ஷ்டமே! போயு போயும் மைதிலிதானா உனக்கு அடித்து தரணும்? பிரமோஷன் என்று எழுதி கொடுத்தால் ரிவர்ஷன்னு டைப் அடிப்பாளே அது சரி, ஏன் இப்படித் திடீர் நம்பிக்கை?

சார: விஷயம் இருக்கு. நம்ப பியூ பெயான்டி மூன்றுலே எட்டணாவை விசி யடிச்சேன்: அவன் நம்ப மானேஜரின் ஜா கத்தையே என்கிட்டே கொடுத்திட்டான், மனுஷன் இன்றைக்கு ஒரு ஆண்டியாக சென்னை வீதியிலே திரிஞ்சுக்கிட்டிருக்கார்;

ராம: என்னது, ஆண்டியாகவா ?

சார: ஆமாம், குடியிருக்க வீடில்லாதவன் ஆண்டிதானே! இப்போ குடியிருக்க ஒரு வீடு கிடைக்காமல் திண்டாடுகிறார். இந்த 'வீக்' பாயிண்டிலேதான் ஆளைப் பிடிக்கப் போகி

ன். இன்று சாயங்காலம் அவருக்கு ஒரு டீ. நாளைக்குக் காலையில் எனக்குப் ரமோஷன்!

ராம: நிச்சயவுடனே வீடு கிடைக்குமா?

சார: ஏற்கனவே கிடைச்சாச்சு. அருமை ான போர்ஷன் ஒன்றில் 'டு லெட்' பலகை தாங்குகிறது. இரண்டு வாரமா நான் வனித்துக் கொண்டிருக்கிறேன். எப்படி டம் என்கிறாய்? ஆபீசுக்குப் பக்கம். மேல் ாடி. எனக்குத் தெரிந்த வீட்டுத் தரகன் ருக்கிறான். அவன் மூலமாய் 'லஞ்ச்' டயமி லயே முடித்து விடுவேன்.

ராம: ஆமாம் இரண்டு வாரமா காலியா ருக்குன்னு சொல்றியே, இந்தப் பட்டணத்

சார: நீ என்ன தொழில் பண்றே? நான் ஒரு வாரமாக் கவனித்துக் கொண்டிருக்கி றேன். இந்தப் பக்கம்தான் ஒரு மேல் மாடி காலியாயிருக்கு!

வீரா: எனக்குத் தெரிஞ்ச வரையில் ஒருவ ருடைய மேல் மாடியும் காலியா யில்லே. நீங்கதான் காலின்னு வந்து சொல்றீங்க.

சார: அடுத்த தெருவிலுள்ள வேப்ப மரத்து வீடப்பா?

வீரா: ஓ. அதுவா? நான் கொஞ்ச நாளா அந்தப் பக்கம் போக வில்லே. அதனால்தான் கவனிக்கவில்லே. உடனே முடிச்சுடறேன்.

சார: முடிக்கிறது பெரிதில்லே. 'சீப்'பா முடிக்கணும். வீடு எங்க மானேஜருக்கு.



லே அப்படி இருக்குமா? ஏதாவது பேய் இருக்கிற வீடாக இருக்கும்.

சார: இருந்தால் இருக்கட்டுமே! நம்ப மானேஜர் நுழைஞ்ச பிறகு எந்தப் பேய் அங்கே தைரியமாகத் தங்கும்?

காட்சி–2

[வீட்டுத் தரகர் வீராசாமியைச் சாரங் கன் சந்திக்கிறான்.]

சாரங்கன்: என்னவே, வீராசாமி! ஆளைக் கண்ணிலே காணோம், நம்பளே மறந்துட்டியா?

வீராசாமி: உங்களை மறக்க முடியுமா சார்! மூணு வருஷத்துக்கு முன்னுலே உங் களுக்கு வீடு பார்த்துக் கொடுத்த வகையிலே உள்ள கமிஷன் பாக்கியை இன்னும் தரலேயே!

சார: இதுக்காகத்தான் மறக்காமலிருக் கிறயா? பழசை விடு. ஒரு புதுக் கேஸ். நீ கேட்ட கமிஷனைக் கை மேலே தாரேன்.

வீரா: இப்ப ஒன்றும் காலி இல்லேயே!

வீரா: சார்! நீங்க கவலைப்படாமல் ஆபீ சிலே போய்க் குந்துங்க.

சார: நான் இப்ப ஆபீசிலே போய்க் குந்து றது சரி. நீ முடிச்சுட்டு வரலேன்னு நாளை யி லிருந்து நான் வீட்டிலே குந்தும்படியா ஆகி விடும். கவனிச்சுக்கோ!

காட்சி – 3

[வீராசாமி சாரங்கன் இருவரின் அடுத்த சந்திப்பு ஆபீஸ் பக்கத்தில் நடக்கிறது.]

வீராசாமி: சார், நீங்க யோகக்காரர் தான்! அநேகமா உங்களுக்கு 'லிப்' அடிச் சுடும் போல் தெரிகிறது!

சாரங்கன்: என்னப்பா, ரேஸ் பாஷை யிலே பேசுதே!

வீரா: வீடு பார்க்கிறதும் ரேஸ் மாதிரி தானே! இப்போ பாருங்க, என்னைப்போலவே ஒரு புரோக்கர் அந்த வீட்டுக்கு வலை போட்டான். நான் அவனை முந்த, அவன் என்னை முந்த ஆக இரண்டு பேரும் ஒரே நேரத்தில் வீட்டுக்காரர் முன்னாலே போய் நின்றோம். அந்த ஆள் வேறொரு ரேஸ் வைச்சுட்டாரு. முந்தி அட்வான்ஸ் கொடுக்கிறவங்களுக்குத் தான் வீடு கொடுப்பாராம்!

சார: ரைட்டோ, ஐந்து மணிக்கு முடிந்து விடுவோம்.

வீரா: ஐந்து மணி வரை தாங்காது. இன்னும் அரை 'அவர்'லே அந்த ஆள் அட்வான்ஸைக் கொண்டுவந்து தள்ளிடுவான்.

சார: ஆபீஸ் நேரத்திலே மானேஜர் வர மாட்டாரே! அதுவும் இனிமேல்தான் அவர்கிட்டே பக்குவமாச் சொல்லணும். எப்படியாவது ஐந்து மணி வரை சமாளி.

வீரா: எப்படிச் சமாளிக்கிறது?

சார: அந்தப் புரோக்கர் உன் சிநேகிதனாகத்தானே இருப்பான், அவனைக் கைக்குள்ளே போட்டுக்கோ!

வீரா: கைக்குள்ளே போடறதுன்னு சும்மாவா சார்! அவன் பைக்குள்ளே ஏதாவது போட்டாத்தானே கைக்குள்ளே போடலாம்.

சார: தொலையிறது, ஏதாவது டிபன் செலவுக்குக் கொடுத்து விடலாம்.

வீரா (கோபத்துடன்): என்னு சார், இது! டிபனுக்கு வழியில்லேன்னு அவன் உங்ககிட்டே சொன்னானு? என்னைப் போல் ஒரு தொழிலாளி சார்! தொழிலே மதிக்கணும்.

சார: கோபப்படாதே. விஷயத்தைச் சொல்லு.

வீரா: அந்த வீட்டை முடிச்சுக் கொடுத்தால் அவனுக்கு ஒன்றரை மாத வாடகை கமிஷனாகக் கிடைக்கும். அதைக் கையிலே கொடுத்து விட்டால் நம்பளுக்கு 'சைட்' விட்டுட்டு 'ஜகா' வாங்கிக்கிறான்! உன்ன கமிஷனே யார் கொடுத்தால் என்ன? அந்த வீட்டுக்கு ஐம்பது ரூபாய் வாடகை. எழுபத்தைந்து ரூபாயைக் கையிலே கொடு.

சார: முந்தியெல்லாம் அரை மாத வாடகைதானே!

வீரா: விலைவாசி ஏறிப் போச்சல்லே!

சார: நேத்துத்தான் ஒரு மாதச் சம்பளம் வாங்கினேன். அதைச் சும்மாத் தண்டமாக் கொடுக்கச் சொல்றியே!

வீரா: உங்களைத் தெரியாதா சார்! நீங்களும் சும்மா உட்கார்ந்து தண்டமாகத் தானே அந்தச் சம்பளத்தை வாங்கியிருப்பீங்க! சும்மா கொடுங்க.

சார: சரி, சரி. வாங்கிட்டுப் போ. ஐந்து மணிக்கு ரெடியா இரு!

வீரா: சரி சார்! (போகிறான்)

காட்சி — 4

[மானேஜரின் அறை வாசலில் நந்தி கேசவராக இருந்து தூங்கும் பியூன் பேயாண்டியைப் பணிவுடன் தட்டி எழுப்பிப் பேட்டி காண்கிறான் சாரங்கன்.]

சாரங்கன்: என்ன பிரதர் பேயாண்டி, சௌக்கியமா? தூக்கத்தைக் கலைத்து விட்டேன். மன்னித்துக் கொள்.

பேயாண்டி: என்ன சார், புதுசா பிரதர் பட்டம் போட்டு மரியாதை பண்ணுறீங்க!

சாரங்: சமத்துவம், சகோதரத்துவம் அதுதான் என் நோக்கம்!

பேயா: சரி விடுங்க, விஷயம் என்ன?

சார: ஐயாவுக்கு மத்தியானம் டிபனெல்லாம் எப்படி, நல்லாச் சாப்பிட்டாரா?

பேயா: சாப்பிட்டாரு. ஏன் இப்படி கேட்கிறீங்க?

சாரங்: வேறே ஒன்னுமில்லே. ஐயாகிட்டே ஒரு விஷயம் சொல்லணும். அவருக்கு 'மூட்' நல்லாயிருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்! ஆமா, தலைவலி கிலி இல்லாமல் நிம்மதியா இருக்கிறாரா?

பேயா: இதைக் கேட்கத்தானு பிரதர் பட்டம் போட்டுச் சுற்றி வளைச்சீங்க? நேத்து உங்களுக்கு வேலையிலிருந்து நீக்க நோட்டீஸ் கொடுத்ததிலிருந்து ஐயாவுக்குத் தலைவலியெல்லாம் போய் ஏக நிம்மதியா இருக்கிறாரு. நீங்க இப்ப நுழைந்தால்தான் எப்படியோ!

சார: என்னப்பா, காலை வாருகிறே!

[சட்டைக் காலரைச் சரிசெய்துகொண்டு உள்ளே நுழைகிறான்.]

மானேஜர்: என்னய்யா, நீர் இன்னும் இங்கேதான் நடமாடுகிறீரா? உம்மை வேலையிலிருந்து நீக்கியாச்சில்லே?

சாரங்கன் (நெளிவுடன்): இல்லே சார் நோட்டீஸ்தான் கொடுத்திருக்கு.

மானே: ஓகோ, டிஸ்மிஸ் ஆர்டரையே வாங்கிட்டுப் போயிடலாம்னு வந்திருக்கிறீரோ, சரி இப்பவே அடிச்சுக் கொடுக்கச் சொல்கிறேன்.

சாரங் (மிடறு விழுங்கியவாறு): வந்து சார், பிறகு வாங்கிக் கொள்கிறேன். இன்றைக்கு நல்ல நாள் இல்லே.

மானே: ஓகோ, நீர் உமக்கு நல்ல நாள் பார்க்கிறீராக்கும். நான் ஆபீசுக்குச் சீக்கிரம் நல்ல நாள் வருகிறதைப் பார்க்கிறேன். நீர் வெளியேறுகிற நாள்தான் ஆபீசுக்கு நல்ல நாள். சரி, ஒன்று செய்யும். நாளைக்கு நீர் வரவேண்டியதில்லே. நான் டிஸ்மிஸ் ஆர்டரைத் தபாலிலேயே அனுப்பி விடறேன்; ஆமாம், இப்போ ஏன் வந்தீர்?


சாரங்கன் (சுதாரித்துக் கொண்டு): உங்களுக்கு என் நன்றியைச் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன் சார்.

மானே: நன்றியா?

சாரங்: ஆமா சார். இது வரை உலகத்திலே எத்தனையோ பெரிய மனுஷங்க பிறந்திருக்காங்க. எவ்வளவோ பெரிய விஷயங்க சொல்லியிருக்காங்க. ஆனால் அதிலே ஒன்று கூட என் மனத்தில் எழுச்சியை உண்டாக்கவில்லே. ஆனால் 'டிஸ்மிஸ்' என்று நீங்க சொன்ன ஒரே வார்த்தை என்ன வேலை செய்திருக்கு, தெரியுமா சார்?

மானே: என்ன?

சாரங்: அது சாதாரண வார்த்தையா சார்! தேவ வாக்கு! அது என் காதிலே எப்படி விழுந்தது தெரியுமா? 'டேய் சாரங்கா! உன்னுடைய சேவை இந்த ஆபீஸ் எல்லைக்குள்ளே பயன்பட்டது போதும். இந்தப் பரந்த உலகத்திலே உன் சேவை எவ்வளவோ தேவைப்படுது. போய்ச் செய்!' என்று





ஐடெக்ஸ்
கண் மை

★ எரிச்சலற்றது
★ குளுமையானது

சிறு குழந்தைகளுக்கும்
மிகச் சிறந்தது

சாஸ்திரீய முறையில்
தயாரிக்கப்பட்டது

ஐடெக்ஸ்
பிந்தி

குங்கும சாந்து

பல கவர்ச்சியான கலர்களில்
எங்கும் கிடைக்கும்

•

தயாரித்து வினியோகிப்பவர்கள் :

அரவிந்த் லாபரட்டரீஸ்

த. பெ. 1415 – மதராஸ் -17

G. P


சிக்கிரமாக
மார்பு சளியை
கலையுங்கள்
அமிர்தாஞ்சனம் தடவி
விரைவில் நிவாரணம் பெறுங்கள்
பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரான அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் மற்றும் மார்புசளி இவைகளிலிருந்து பூரணமாக நிவாரணம் அளிக்கிறது. தசைவலி, தலைவலி, சுளுக்கு இவைகளுக்கும் சிறந்த வகையில் நல்ல குணமளிக்கும் மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால் ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும் • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட்
மதராஸ் - பம்பாய் - கல்கத்தா - டெல்லி

வுனே சொன்னதுபோல் இருந்
!. உடனே பரந்த உலகத்தைப் பரக்கப்
க்கப் பார்த்து நடக்க ஆரம்பித்தேன்.
ான ஆச்சரியம் பாருங்க, நான் பார்த்த
_மெல்லாம் ஒரே 'டு லெட்' போர்டு
ன்! எத்தனை வீடுகள் காலி என்கிறீர்கள்?
மானே: என்ன வீடு காலியா ?
சாரங்: ஒன்ரு, இரண்டா? நேற்றுச்
பங்காலம் மட்டும் பத்து வீடு என் பார்வை
ல பட்டுது. ஒன்பதைத் தெரிஞ்சவங்களுக்
ல்லாம் முடிச்சுக் கொடுத்திட்டேன்.
'று மட்டும்தான் இப்போ என் கைவசம்
ுக்கிறது.
மானே: பாக்கி ஒரு வீடு இருக்கிறதாச்
சன்னீரே, அதை என்ன பண்ணினீர் ?
சாரங்க: அதை மட்டும் கொஞ்சம் கவ
த்துக்கு வைச்சிருக்கேன், சார்.
மானே: என்ன?
சார: உங்க வாக்கு எனக்குத் தெய்வ
க்கு மாதிரி இல்லையா? நீங்க சொன்னபடி
லையிலிருந்து நிற்கப் போகிறேன். அப்
ம் பிழைக்கணும். பாருங்க. எனக்குத்
ரிந்தவர் ஒருவர் ஒரு கம்பெனியிலே
னேஜரா யிருக்கிறார். அவர் வந்து ஒரு
) வேணும் என்ருர். நான் வேலை வேணும்
ாறேன். சரியாப் போச்சு. சாயங்காலம்
ுக்கலாம்னு நினைத்திருக்கிறேன். ஏதோ
ர், உங்களாலே நல்லா இருக்கிறேன். ஆசீர்
'தம் பண்ணுங்கோ !
மானேஜர் (சிறிது மூக மாற்றத்துடன்):
டேர் சாரங்கன்! அந்த வீடு ரொம்ப
ல இடமோ ?
சாரங்: ஏ ஒன் லொகேஷன் சார்! நாறு
ாய் வாடகைக்குப் போட்டி போடு
ர்கள். என் கைக்குள்ளே ஐம்பது ரூபாய்க்
ு அமைந்திருக்கு.
மானே: அப்படியா! அதை எனக்கு
டிச்சுக் கொடுத்திடேன்!
சாரங்: உங்களுக்கு இல்லாததா சார்!
னல் என் பிழைப்புக்காக அந்த மானேஜ
க்கு.....
மானே: இப்ப உம்ம பிழைப்புக்கு என்
ய்யா வந்திருக்க? உமக்கு நோட்டீஸ்
ானே கொடுத்திருக்கு? நீர் சாமர்த்திய
'லின்னு தெரிஞ்சா தொடர்ந்து வச்சுக்கப்
ாறேன். அவ்வளவுதானே! ஐந்துமணிக்குப்
ாகலாமா?
சாரங்; சரி, சார்! உங்க இஷ்டம்.
(வெளியேறுகிருன்)
பேயாண்டி: சார், ஐயாவைக் குல்லாப்
ாட்டு வேலையில் ஓட்டிக் கொள்வீங்க
ாலிருக்கே! (சிரிக்கிருன்)

காட்சி — 5

['டு லெட்' போர்டு போட்ட அந்தப் பிரண்டாப வீடு. மானேஜர், சாரங்கன், தரகர் வீராசாமி ஆகியோர் அதன் முன் நிற்கின்றனர்.]

சாரங்கன்: என்ன வீராசாமி, வீட்டுக்
ாரர் எங்கே? ஐயா வீட்டைப் பார்க்க
வண்டுமே !
வீராசாமி: அவர் குடும்பத்தோடு அவசர
ாக வெளியே போயிருக்கிருர். நாளைக்
காலையில் வந்து விடுவார். அதற்குள்ளே
நாம் சும்மா சுற்றிப் பார்க்கலாம்.

மானே: இந்த வீட்டில் யாருமில்லையா?

வீரா: அந்தப் போர்டு போட்ட போர்ஷனைத் தவிர மற்றப் பகுதியிலெல்லாம் வீட்டுக்காரர்தான் இருக்கிருர்.

மானே: அப்போ பரவாயில்லை. அநாவசியத் தொந்தரவு இருக்காது. நல்ல போர்ஷன்!

சாரங் (உற்சாகத்துடன்): ஏ. ஒன்!

மானே: உம்மிடம் இவ்வளவு சாமர்த்தியம் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. கொஞ்சம் காம்பௌண்டுக்கு உட்புறமாகப் போய்ப் பார்க்கலாமா ?

சாரங்: ஓ. போகலாமே சார்! வாங்க போவோம்.

[மூவரும உள்ளே சென்று சுற்றிப் பார்க்கிருர்கள். அச்சமயம் ஒரு முதியவர் — வீட்டுக்காரர் — இரண்டு போலீஸ்காரர்களுடன் வெளிவாசலில் தோன்றுகிருர்]

வீட்டுக்காரர் (போலீஸாரிடம்): சார், விடாதீங்க சார்! அந்த மூன்று பேரும்தான் நான் சொன்ன திருடர்கள்! போலீஸ் ஸ்டேஷனுக்குப் பிடித்துக்கொண்டு போங்கள்.

[உள்ளிருக்கும் மூவரும் அதிர்ச்சியுடன் வாசலை நோக்குகிருர்கள்.]

வீட்டு: பார்த்தீர்களா, சார்! திருட்டு விழி விழிக்கிருர்கள்!

மானே: யாரய்யா நீர்! நாங்களா திருடர்கள்!

வீட்டு: எல்லாம் தெரியும். திருடன் தன்னைத் திருடன் என்று ஒத்துக்கொள்வானு?

மானேஜர் (ஆத்திரத்துடன் சாரங்கனிடம்): என்னய்யா, சாரங்கன் இது ?

சாரங் (உதறலுடன்): தெ...ரி...யலை...

வீட்டுக்: என்னய்யா, நடிக்கிறீங்க? ஊருக்குப் போனவன் வீட்டுக்குத் திரும்பி வந்து பார்க்கிறேன். ஆளில்லாத என் வீட்டுக்குள்ளே நீங்க மூன்று பேரும் நுழைந்து கன்னக் கோல் போட இடம் பார்க்கிறீர்கள். அதைக் கண்டதும் ஓடிப் போய்க் கையோட போலீசைக் கூட்டி வந்துட்டேன்.

வீரா: வீட்டுக்கார ஐயா, என்னைத் தெரியலைங்களா, நான்தான் தரகு வீராசாமி ! அவங்க எப்படியோ, நான் திருடன் இல்லே! என்னை விட்டுடுங்கோ!

சாரங்கன்: அடப்பாவி! காலை வாருகிறாயா?

வீட்டுக் (குறுக்கிட்டு): என்னய்யா சண்டை போடுறாப்போல நடித்துத் தப்பிக்கப் பார்க்கிறீர்களா?

சார (சற்றுத் துணிச்சலுடன்): என்னய்யா மிரட்டுகிறீர்கள்! வாடகைக்கு விடறதுன்னு வீட்டிலே 'டு லெட்' போர்டு போட்டால் யாரும் நுழைஞ்சு வந்து பார்க்கத்தான் செய்வார்கள்.

வீட்டுக்காரர்: எவனய்யா, போர்டு போட்டிருக்கான்!

சாரங்கன்: அதோ மாடியிலே பாருங்க!

வீட்டுக்காரர்: அது 'To let' போர்டு இல்லே! அந்த அறை எங்களுக்கு முகம் கழுவும் அறை! 'Toilet' என்று அதற்கு இங்கிலீஷிலே போர்டு எழுதி மாட்டியிருந்தோம். அதிலே 'ஐ' 'i' என்கிற எழுத்து

அதிசய ஒற்றுமை!

உலக சரித்திரத்தில் தங்கள் பெயரை ஒரேவிதமாகப் பொன்னும் பொறிந்துகொண்டுள்ள ஆபிரஹாம் லிங்கன், கென்னடி ஆகிய இருவருக்கு மிடையேயுள்ள இந்தஅதிசயஒற்றுமை தனை என்னென்பது?

இருவரும் நீக்ரோக்களுக்கு உரிமை வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந் தார்கள்.

லிங்கன் 1860-ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்டார். கென்னடி சரியாக நூறாண்டுகளுக்குப் பின் 1960-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இரு வருக்கும் பின் ஜனாதிபதியாக வந்த இருவரின்பெயரும் ஜான்ஸன்என்பதே யாகும். பழைய ஜான்ஸன் 1808ம் ஆண்டில் பிறந்தவர்; இன்றைய ஜான் ஸன் சரியாக நூறாண்டுகளுக்குப் பின் 1908ல் பிறந்தவர்.

லிங்கன் — கென்னடி இருவரும் வெள்ளிக்கிழமையில் சுட்டுக் கொல் லப்பட்டார்கள். இருவரும் பின்புற மிருந்தே தலையில் சுடப்பட்டனர். இப்போது மிஸஸ் கென்னடி போலவே அப்போதும் லிங்கனின் மனைவி உட னிருந்தார்.

கென்னடியைக் கொன்ற ஆஸ்வால் டைப் போலவே, லிங்கனைச் சுட்ட வில்கிஸ் பூத் ஒரு தெற்கத்தியன். பண்டகசாலை ஒன்றிலிருந்து கென்ன டியைச் சுட்ட ஆஸ்வால்ட் சினிமாத் தியேட்டருக்கு ஓடினான் அல்லவா? சினிமாத் தியேட்டரில் லிங்கனைச் சுட்ட பூத்தோ பண்டகசாலை ஒன் றுக்கு ஓடினானும்.

இரு கொலைகாரர்களுமே விசா ரணைக்கு முன்பு கொலையுண்டதும் ஓர் ஒற்றுமையாகும்.

மிஸஸ் கென்னடி வெள்ளைமாளிகை வாசத்தின் போது ஒரு மகவைப் பறி கொடுத்தது போலவே லிங்கனின் மனைவியும் புத்திர சோகமடைந் தாராம்.

எல்லாவற்றையும் விட அதிசயம்: லிங்கன் மரணமடைந்த அன்று அவரது காரியதரிசி அவரை வெளியே போகக் கூடாது என்று எச்சரித் தாராம். அந்தக் காரியதரிசியின் பெயர் கென்னடி. ஜனாதிபதி கென் னடியின் காரியதரிசியும் அதேபோல் அவர் டல்லாஸுக்குப் போகக் கூடாது என்று எச்சரித்தாராம். இந்தக் காரிய தரிசியின் பெயர் லிங்கன்!

மங்கிப் போச்சு. 'To let' என்று தாரு விருந்து பார்த்தால் தெரியும்.

சாரங்கன்: அதைப் பார்த்தல்லவ மோசம் போய் விட்டேன்!

வீட்டு: என்னய்யா, கதை விடுதீ அதற்காக வீட்டுக்காரனைக் கேட்காமல் படி நுழைவதாம்?

சாரங்: இந்த வீராசாமி உங்களைக் கே டென்று சொன்னானே!

மானேஜர் (ஆத்திரத்துடன்): போ உம்ம திட்டம் எனக்கு இப்பத்தான் பு கிறது! நான் நோட்டீஸ் கொடுத்தேன் நீர் என்னை அவமானப்படுத்த இந்த வே செய்திருக்கிறீர். உம்மைக் கவனித்துக் கொ கிறேன். (வீட்டுக்காரரிடம்) சார்! நா லிக்கல்ராம் கம்பெனி மானேஜர்! ஏதே தவறுதலா நடந்து விட்டது! மன்னித்து கொள்ளுங்கள்!

வீட்டுக் (சமாதானக் குரலில்): உங்களை பார்த்தால் கௌரவமானவராகத் தெரிகிற உங்கள் வார்த்தைக்காக என் போலீஸ் 'கம்ப்ளெயின்'டை வாபஸ் வாங்கிக்கிறேன்

[போலீஸார் போகிறார்கள். மானே ஜர், சாரங்கன், வீராசாமி, மூ ரும் வாசலுக்கு வருகிறார்கள்.]

சாரங் (கெஞ்சும் குரலில்): சார், ஏதே தெரியாமல்.....

மானே (கோபத்துடன்): பேசாதேயும் நீர் உதவாக்கரையாக இருந்தும் நீர் வேலையிலிருந்து நீக்கிப் பிழைப்பைக் கெடு காமல் உம்மைப் பயமுறுத்தித் திருத்துவத காக நோட்டீஸ் கொடுத்தேன். நீர் என் னிடம் வந்து இந்த நாடகம் நடித்து வம் செய்யாமலிருந்தால் எச்சரிக்கையுடன் வேலை செய்யச் சொல்லியிருப்பேன். இப்போ தான் தெரிகிறது, நீர் ஒரு ரௌடி என்று ஆபீஸ் பக்கம் இனி கால் மிதிக்காதேயும்!

[போகிறார்]

சாரங் (வீராசாமியிடம்): அடப் பாவி உன்னாலே எல்லாம் போச்சே! ஆளைப் பார்த் தேன், ரெஸ் விட்டான்னு அளந்து என்னை மோசம் பண்ணிவிட்டாயே!

வீரா: இதென்னய்யா மோசம்! ஒரு கல் யாணத்தை முடிக்க ஆயிரம் பொய்கூட சொல்ல லைசென்ஸ் இருக்கு. ஒரு கடனை வசூலிக்க ஒரு பொய் சொல்லக் கூடாதா? நீர் தரவேண்டிய பழைய கமிஷன் பாக்கிக்கு மத்தியானம் தந்த பணத்தை எடுத்துக் கொண்டேன். வருகிறேன்!

சாரங்: ஐயய்யோ! அந்தப் பணத்தைக் கொடுத்துவிடு. உனக்கு அடுத்த மாதம் வேறு வேலை பார்த்துச் சம்பளம் வாங்கித் தரு கிறேன்.

வீரா: இதுதான் உங்களுக்குக் கடைசி சம்பளப் பணம். இனி உங்களுக்கு எவன் வேலை கொடுக்கப் போகிறான்? இதைக் கொடுத்துவிட்டு ஏமாற நான் பைத்தியமா?

[போகிறான். சாரங்கன் நியாயமாக அப் போது மூர்ச்சை போட்டு விழ வேண்டியது. ஆனால் மூர்ச்சை யைத் தெளிவிக்க ஒருசோடாவாங் கப் பணம் இல்லாதது நினைவுக்கு வரவே மூர்ச்சையாகி விழவில்லை!]

சகல வீட்டு வசதிகளுடனும் சுகமான பிரயாணத்திற்கு

SCI


தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

(ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:

ஸ்டீல்கிரீட் ஹவுஸ் 4வது மாடி, தின்ஷாவாச்சா ரோடு, பம்பாய்-1

சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ்



t. S. S. ஸ்டேட் ஆப் மதராஸ்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
22-11-1964	23-11-1964

அன்று புறப்படும்

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட ஏஜண்டுகளை அணுகவும்

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன்: 72 தந்தி: "SHIPINDIA"



பாமதி

கலா பாரதி

வாசஸ்பதி மிசிரர் என்ற வடமொழிப் புலவர் ஒருவர் பாமதி என்ற அழகான பதினெட்டு வயது யுவதியை மணந்தார். அவர் ஒரு நூல் எழுதத் தொடங்கினார். நூலின் கருத்துக்களை உட்கார்ந்துகொண்டும், நடந்துகொண்டும் யோசித்து யோசித்துச் சொல்வார்; அவர் மனைவி ஓலைச் சுவடியில் எழுத்தாணியால் அவைகளை எழுதுவாள். அவர் பேச்சு, மூச்சு, செயல் எல்லாம் அந்த இலக்கியத்தைச் சிறப்புறப் படைப்பதிலேயே ஈடுபட்டிருந்தன. இலக்கியத்திலே திரும்பிய கவனம் இமைப்பொழுதுகூட இல்லற இன்பத்தில் திரும்பவில்லை. அவர் மனைவியும் அவரது நோக்கப்படியே அந்த இலக்கியத்தை வெற்றிகரமாகப் படைப்பதில் உறுதுணையாக முனைந்திருந்தாள்.

அந்தக் காவியத்தைப் படைத்து முடிக்க முப்பது வருடங்களாகி விட்டன. தாம் படைத்த படைப்பைப் படித்துப் பார்த்தார். வெற்றியின் பெருமையும் திருப்தியும் அவரை மகிழச் செய்துவிட்டன. ஆனந்தக் களிப்போடு அருமை மனைவியை அருகில் சென்று அன்போடு தொட்டுத் தலை நிமிர்த்திப் பார்த்தார். அன்று பதினெட்டு வயதில் அழகும், இளமைப் பூரிப்புமாகப் பார்த்த பாமதியாகவா இருந்தாள்?

தலையிலே நரையோட்டம், முகத்திலே பொலிவு மறைந்து முதுமையின் வாட்டங்கள், மேனியிலே சருமத்தின் தளர்ச்சி எல்லாம் சேர்ந்து இளமை இன்பத்தின் பக்குவ நிலை தாண்டி வயோதிகத்தின் வாயிலிலே நின்றாள்.

"பாமதி! நான் உனக்குப் பெருந் தீங்கு இழைத்து விட்டேன். உன் இல்லற இன்ப வாழ்வையே பாழ்படுத்திவிட்டேன், உன் அழகு, இளமை, இன்பம் எல்லாவற்றையும் எனது காவியத்துக்காக அர்ப்பணித்து விட்டாய். ஆயுளில் பெரும் பகுதியை, அதிலும் முக்கியமாக இளமைப் பருவத்தையே தியாகம் செய்து விட்டாய். நான் என் சுயநலத்தில் உன்னையே மறந்து விட்டேன். இலக்கியப் படைப்பின் வேகத்தில் இல்லறத்தின் கடமைகளைத் துறந்து விட்டேன்...."

பாமதி அவரது வாயைத் தன் கரங்களால் பொத்தினாள்.

"சுவாமி! அப்படிச் சொல்லாதீர்கள்; தாங்களே தங்கள் உடல், பொருள், ஆவி, மனம், பேச்சு, செயல் ஆகியவற்றையும் முக்கியமாக ஆயுளில் பெரும் பகுதியில் வாலிபப் பருவத்தையே காவியத்துக்காக அர்ப்பணித்தபோது, என்னுடைய சிறு உதவி எம்மாத்திரம்? உலகில் உள்ளோர் எல்லோரும்தான் இல்லற இன்பம் நுகருகின்றனர். நம்மில்தான் ஒரு திருப்பமும் புதுமையும் இருக்கட்டுமே! நாமிருவரும் இல்லற வாழ்வில் இலக்கிய இன்பத்தை அனுபவித்தோம்...மற்றவைகளை மறந்தோம். நாம் படைத்த இந்தக் காவியம்தான் இனி நமது குழந்தை... உலகுக்குப் பயன்படக் கூடிய ஒப்பற்ற காவியம் உருவாயிற்று."

"பாமதி! உலகம் உள்ளளவும், காலம் உள்ளளவும், கடவுள் உள்ளளவும், இலக்கியம் உள்ளளவும் இந்தக் காவியமும், உன் பெயரும் அழியாப் புகழுடன், என்றும், எங்கும் நிலைத்து நிற்கக் காவியத்துக்குப் 'பாமதி' என்று உன்னுடைய பெயரையே சூட்டுகிறேன்."

"பாமதி" என்ற அந்தக் கிரந்தம் உலகப் பிரசித்தமான வடமொழி நூலாக இயங்குகிறது.

குட்டிக் கதை

ரஷ்யத் தலைவர் ஸ்டாலினும், அந்நிய நாட்டு மந்திரி மாலடோவும் ஏதோ ஒரு விஷயமாய் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது டெலிபோன் மணி ஒலித்தது. மாலடோவ் சென்று ரிசிவரை எடுத்தார். பேசியவர் அமெரிக்க வெளி விவகார மந்திரி பயர்ன்ஸ்தான். "மிஸ்டர் பயர்ன்ஸா?" என்று கேட்டு விட்டு மாலடோவ் கூறியதெல்லாம் இவைதாம். "இல்லை ... முடியவே முடியாது... உறுதியாக இல்லை... ஆமாம்... இல்லை... இல்லை... ஜனநாயம்... முடியாது... முடியவே முடியாது."

பேசி முடித்ததும் ரிசீவரை வைத்துவிட்டு ஸ்டாலினைப் பார்த்தார் மாலடோவ். ஸ்டாலினும் அவரைப் பார்த்து "ஒருமுறை-ஆமாம் என்றீரே? அவர் என்ன கேட்டார்?" "'பேசுகிறது காதில் விழுகிறதா' என்று கேட்டார். அதற்குத்தான் நான் 'ஆமாம்' என்றேன்" என்றார் மாலடோவ்.

வட்ட மேஜை

பூம்புகார்

'கல்கி' 18–10–64 இதழில் 'பூம்புகார்' திரைப்படம் பற்றிய விமரிசனம் கண்டேன். அது பற்றிப் புகார் கூறி இக்கடிதம் எழுதுவதாக நினைக்கக் கூடாது. அபிப்பிராயங்கள் பலதரப்பட்டவையாக இருக்கக் கூடும். 'உலகம் பலவிதம்', 'லோகோ பின்னருசி' போன்ற பழமொழிகள் இதற்குச் சான்று. என் அபிப்பிராயம் 'கல்கி'யில் வெளியாகியிருக்கும் விமரிசனக் கருத்துக்களுக்கு மாறுபட்டது.

சிலப்பதிகாரம் சிறந்த காவியம். அதைப் பூம்புகாராக்கிப் படமெடுக்கத் துணிந்தவர்களும் திரைக்கதை, வசனம் எழுதிய திரு மு. கருணாநிதியும் சிறிதும் மறுக்கவில்லை; எங்கும் மறுக்கவில்லை. மறுப்பவர்களாக இருந்தால் அப்பெருங் காவியத்தைத் திரை ஓவியமாக்க முன்வந்திருக்க மாட்டார்கள். திரை ஓவியமாக்கியவர்கள் திறம்படக் கையாண்டிருக்கிறார்கள் என்பதை ஐயமறக் கூறலாம்.'

ஆயிரம் காலத்துப் பண்டைக் காவியம் சிலப்பதிகாரம். கதை தொடங்கும் பூம்புகார் நகரத்தின் இடிபாடுகள்கூட இன்று கிடையாது. இப்படி இருக்கலாமோ என்று கற்பனைக் கண்கொண்டு கண்டு பூம்புகாருக்கு ஹம்பிச் சூழ்நிலையை நிலைக்களனாகக் காட்டியுள்ளார்கள். ஹம்பியாகட்டும், மதுரையாகட்டும், மற்றத் தமிழ் நாட்டுக் கோவில்களாகட்டும், சிலப்பதிகாரத்துக்குப் பின் உருவானவையென்றே வரலாறு கூறும். ஹம்பியும் என்ன, நம் தமிழ் நாட்டுச் சிற்பக் கலையின் பெருமைக்குச் சான்று பகரும் இடம்தானே? இந்நிலையில் காவிரிப் பூம்பட்டினத்தை ஹம்பிச் சூழ்நிலையில் காட்டியதில் தவறென்ன இருக்க முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. மதுரையம்பதியின் தற்கால கோபுரத்தையோ, கோவிலையோ காட்டாததும் ஒரு விதத்தில் பொருத்தமே. மதுரை எரிந்தபின் உருவான மதுரை மாநகரமே இப்பொழுது நாம் காண்பது. அதைக் காண்பித்திருந்தால் காலத்துக்கும் கதைக்கும் பொருந்தாது என்றே கூற வேண்டியிருக்கும்.

ஆதி கவி வால்மீகியின் காவியத்தை ஒட்டிக் கம்பனும், துளசியும் இன்னோரன்ன மற்றப் புலவர்களும் கதையின் பெருமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அநேக அழகான மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றை ரசித்துப் படித்து மகிழும் நாம் சிலப்பதிகாரக் காவியத்திலும் திரைக் கதைக்கெனச் சில நயங்களைப் புகுத்திய கருணாநிதியை ஏன் கடிய வேண்டுமோ?

கண்ணகியைக் கற்புத் தெய்வம் இல்லை என்று எங்கும் அவர் கூறவில்லை. கணவனைத் தெய்வமாக மதிக்கும் கற்புக்கரசிக்குக் கணவனைக் காட்டிலும் பெருந்தெய்வம் வேறில்லை. இவ்வுண்மையைக் கண்ணகி, மாதவி இருவர் மூலமுமே நிரூபிக்க முற்பட்டு வெற்றியும் கண்டிருக்கிறார். துயருற்றகால் தெய்வத்தை நாடாது — இரண்டொரு சோகப் பாடல் பாடாது இருந்து விட்டாளே என்பதற்காக கண்ணகியைத் தெய்வ நம்பிக்கையற்றவள் என்று கூற முடியாது. தெய்வ நம்பிக்கை என்னும் உறுதியே அவளை அத்தகையவளாக்கியிருக்கிறது. பாண்டியன் அவையிலே, அவள் கூறும் தீ கக்கும் வசனங்களே போதும். தீப்பிடித்து எரியும் காட்சியைக் காட்டக்கூடத் தேவையில்லை. அவையே மதுரை மாநகரத்தை எரித்து விட்டாற் போன்ற பிரமையை உண்டுபண்ணி விடுகின்றன. ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளின் இன்னிசையும், ஸ்ரீ கருணாநிதியின் காவிய நயம் மிகுந்த வசனங்களும் நடிகர்களது ஒத்துழைப்பும் பூம்புகார் படத்துக்குப் பெருமை சேர்க்கின்றன. இப்படத்தைப் பார்ப்பவர்கள் உள்ளத்தில் ஒரு கறையோடு செல்லாமல் கலை நோக்கோடு மட்டும் பார்ப்பார்களானால்—சிலப்பதிகாரக் காவியத்துக்குப் 'பூம்புகார்' திரை ஓவியம் மெருகு கூட்டுகிறது என்றே கூறுவார்கள்.

சென்னை — 17
17–10–64

எஸ். கமலா

★

முறையிடுகிறார்


மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா ஆண்டிபட்டி பிர்க்கா ஆண்டிபட்டி கிராமம் ஏத்தக்கோவில் பஞ்சாயத்து எல்லையில் சர்க்கார் புறம்போக்கில் உள்ள மரங்களையும் கல் குவாரிகளில் கல் உடைத்துவிட்டு வரும் கற்களை லாரி லாரியாக ஏற்றிப் போகும் வண்டிகளுக்குப் பீஸ் வசூலிக்கின்றனர். ஆனால் மேற்படி பணத்தைச் சர்க்காருக்குத் தெரிவிக்காமல் கிராம அதிகாரிகளே எடுத்துக் கொள்கின்றனர். கண்மாயிலுள்ள வண்டல் மண்ணை மேற்படியார்களும் தலைவரும் சேர்ந்து கைக்கூலி வாங்கிக்கொண்டு மறைத்து வருவதிலும் அதிசயமில்லைதான். மின்சார விளக்குப் போடுவதாகவும் கிராமங்களில் மின்சாரம் விவசாயம் சம்பந்தப்பட்ட மோட்டார்கள் பம்ப் செட்டுகளுக்கு வாங்கிக் கொடுப்பதாகவும் சொல்லி நிறையப் பணத்தை வாங்கிக் கொள்ளவும் செய்கின்றனர். இப்படிக் கிராம கர்ணமும் பஞ்சாயத்துத் தலைவரும் பணம் வாங்கிக்கொண்டு மோசம் செய்கிறார்கள்.

மேலும் பஞ்சாயத்து எல்லையில் கிணறுகள் வெட்டுதல், சாலையில் மரங்கள் வளர்த்தல் முதலான விஷயமாய்ப் பஞ்சாயத்துப் பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துப் போர்டு கிராமவாசிகளின் நலனுக்கு ஏற்பட்டிருந்தும் விவசாயிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் ஏற்பட வேண்டிய வசதிகள் நல்ல முறையில் நடைபெறவில்லை. பஞ்சாயத்துத் தலைவருக்கும் கிராம அதிகாரிகளுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்குந்தான் யூனியன் சாதகமாக இருக்கிறதே ஒழிய, அதனால் பொதுஜன நன்மை ஒன்றும் ஏற்படவில்லை. இந் நிலைமைகள் எல்லாம் என்று அகலுமோ?

மணியகாரம்பட்டி
10–10–64

கே. என். அழகிரிசாமி


குடும்பத்திற்கான
கிளியர்டோன் சாமான்கள்
Kleertone
'ரேடியன்ட்' ஹாட் ப்ளேட்
'இம்பீரியல்' இஸ்திரிப்பெட்டி
கெட்டில்
வீட்டு உபயோகத்திற்கான இஸ்திரிப்பெட்டி
டோஸ்டர்
மேஜை விசிறி மற்றும் சீலிங் விசிறி
எலக்ட்ரிக் கடிகாரம்
மடக்கக்கூடிய ஸ்டீல் ஃபர்னிச்சர்
எல்லா கிளியர்டோன் வியாபாரிகளிடமும், நேஷனல்-எக்கோ வியாபாரிகளிடமும்
மற்றும் கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . செகந்திராபாத் . பாட்னா
GRA
JWT-GRA 2804


GIFT GIFT GIFT GIFT
GIFT GIFT GIFT GIFT
GIFT GIFT GIFT GIFT
ஒவ்வொரு மணப்பெண்ணுக்கும் உகந்த சிறந்த பரிசு...
ஒவ்வொரு மனைவிக்கும் கூட...
GIFT GIFT GIFT GIFT
Hawkins UNIVERSAL
PRESSURE COOKER
Hawkins UNIV_RSAL
பிரஷர் குக்கர்
மிகப்பெரிய சைஸ் ...
நீடித்த காலத்திற்கு உத்திரவாதம்
எரிபொருள் செலவு 50% மிச்சமாகிறது...
5 வருட உத்திரவாதம்
இலவசம்:-
தேர்ந்தெடுக்க 4 சைஸ்கள்: 4, 6 மற்றும் 8 லிட்டர்களும் மற்றும் புதிய மிகப்பெரிய 12 லிட்டர் மாடல்
தென் இந்திய பிராந்திய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
50, எம்.ஜி. ரோடு பெங்களூர்-2



ராஃவி

கண்களில் திரண்டிருந்த மெல்லிய மைக் கோடுகள் அழியாமல் வெகு ஜாக்கிரதையாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மிஸஸ் சர்மா. பிறகு குரலில் துயரச் சாயலை வருவித்துக் கொண்டு, "என்ன தான் சொல்லுங்கள், அக்கா! நாமும் இத்தனை வருஷங்களாக இங்கே இருக்கிறோம். இன்று வரை எவருடைய இறுதிப் பயணத்தின் பொழுதும் இத்தனை கூட்டத்தைக் கண்டதில்லை. அப்பப்பா! எத்தனை பேர் வந்திருந்தார்கள்! இத்தனை பெரிய பட்டணத்தில் மூலை முடுக்குகளில் இருப்பவர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் குப்தாஜிக்கு எத்தனை நல்ல பெயர்! அவர் அம்மாவின் மறைவுக்கு வருத்தம் தெரிவிக்க யாராவது வராமல் இருப்பார்களா?" என்றாள்.

மிஸஸ் குப்தாவும் தன் கைக் குட்டையினால் கண்களை இலேசாக ஒற்றிக் கொண்டு, "குப்தாஜிக்குத் தம் அம்மாவிடம் உயிர். அம்மா நோயாகப் படுத்த பொழுது இவர் வாயிலே ஒரு சோற்றுப் பருக்கை போயிருக்குமா? ஒரு சொட்டு நீர்தான் அருந்தியிருப்பாரா? எத்தனை தடவை நான் 'சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்' என்று சொல்லியிருப்பேன், தெரியுமா? இப்படி யார் பெரியவர்களுக்குப் பணிவிடை செய்யப் போகிறார்கள்? சொல்லிச் சொல்லி எனக்கு வாய் வலி கண்டதுதான் மிச்சம். உடம்பு அரையாகப் போய் விட்டது! நீ கூடப் பார்த்திருப்பாயே!" என்றாள்.

"குப்தாஜி என்ன செய்வார், பாவம்! செஞ்சோற்றுக் கடனைக் காட்டினாலும் பெரிதல்லவா தாய்ப்பாலின் மகிமை! அதோடு அவருடைய அம்மாவும்தான் எவ்வளவு நல்லவள்! வீட்டு வேலை முழுவதையும் தன் தலையிலேயே தூக்கிப் போட்டுக் கொண்டல்லவா செய்தாள்? வீடு வெறிச்சிட்டுப் போய் விட்டது! உங்களுக்கும் குடும்ப பாரம் அதிகமாகி விட்டது." — தொண்டை அடைக்க மிஸஸ் சர்மா அனுதாபம் தெரிவித்தாள்.

மிஸஸ் குப்தாவும் கரகரத்துப் போன குரலில், "சாதாரணமாகவா வெறிச்சிட்டிருக்கிறது? கடிக்க வருகிறது போல் அல்லவா இருக்கிறது வீடு! வளர்த்த கிளி பறந்து விட்டாலே வீடு வெறிச்சென்றுதான் போகும். மனிதர்கள் போய் விட்டால் கேட்க வேண்டுமா? நான் அம்மாவை ஒரு காரியம் செய்ய விடுகிறதில்லை. வயசாகி விட்டதோ, இல்லையோ? வேலை இல்லை செய்ய ஆசையிருந்தும் அவராலே முடியவில்லை. அதோடு, 'அம்மா கஷ்டப்படக் கூடாது. வேலை செய்யக் கூடாது' என்பது அவர் எண்ணம்!" என்று கூறினாள்.

"தியாகந்தானே? வயசான சரீரம்; வேலை கொடுத்தால் சிரமந்தானே? பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டால் நான் சுவரில் எழுதின சித்திரமாகவாவது இருக்கும். அதோடு குப்தாஜிக்கு அம்மாவிடம் உள்ள அன்பும் ஆசையும் சொல்லத் தரமன்று.... ஆமாம், மிஸஸ் கந்தரின் வீட்டிலிருந்து யாருமே வரவில்லையோ? அவர்கள் வீட்டுக்குச் சமாசாரம் தெரியுமோ, தெரியாதோ?" — மிஸஸ் சர்மா தொண்டையைச் சரி செய்து கொண்டு, தொடு அரங்கில் மிஸஸ் குப்தாவின் கவனத்தைச் சேர்த்தாள்.

மிஸஸ் குப்தாவுக்கும் மிஸஸ் கந்தருக்கும் எலதசெழுத்தும் காயிறும் பொருத்தம்; நவக்கிரக உறவு.

"சமாசாரம் தெரியுமோ என்று கேட்கிறாய்? ஒரு நொடியில் நகரம் முழுவதற்கும் தான் செய்தி மின்னல் போலப் பரவி விட்டதே! தெரியாமல் இருக்குமா? எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்? எந்த நேரமும் டிராயிங் ரூமில் எள்ளுப் போட இடம் இல்லை, அவ்வளவு கூட்டம். குப்தாஜியை நகரத்து மக்கள் எத்தனை தூரம் மதிக்கிறார்கள் என்பதை அன்றுதான் நான் முதல் முதலாகக் கண்டேன். அதிலும் யார் வந்தார்கள், யார் வரவில்லை என்பதை நான் எத்தனை தூரம் நினைவு வைத்துக் கொள்ள முடியும்? நீயே சொல்லு!" என்றாள் மிஸஸ் குப்தா. குரலில் ஆங்காரம் தொனித்தது.

ஆனாலும் மிஸஸ் சர்மாவின் ஆவல் குறையவில்லை. வேறு இரண்டு மூன்று பேர்களைப் பற்றிக் கேட்டாள். மிஸஸ் குப்தாவிடமும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. கடைசியில் மிஸஸ் சர்மா இப்படியாகப் பல அனுதாபச் செய்திகளை மொழிந்து விட்டு விடைபெற்றுக் கொண்டு தன் வீடு சென்றாள்.

மிஸ்டர் குப்தா எங்கோ வெளியே போயிருந்தவர் வீடு திரும்பினார். வந்ததும் வராததுமாக, "யார் யார் வந்தார்கள்?" என்று வேலைக்காரனைக் கேட்டார்.

வேலையாள் இரண்டொரு விசிட்டிங் கார்டுகள், நான்கைந்து கடிதங்கள், ஒரு தந்தி ஆகியவற்றை அவரெதிரே கொண்டு வந்து வைத்தான். அவற்றை அவர் ஆவலுடன் பிரித்துப் பார்க்கலானார்.

அதற்குள் மிஸஸ் குப்தா வந்து, "இன்று மிஸஸ் சர்மா வந்திருந்தாள்!" என்றாள்.

"நீ என்னவோ அவள் வரவே மாட்டாள் என்று சொன்னாயே! சரி, அவள் பெயரை ரிஜிஸ்டரில் நோட் செய்து கொள். இந்தா, இதோ நாலைந்து பேர் 'கங்ரேடுலேஷன் மெஸேஜ்' அனுப்பியிருக்கிறார்கள். இவர்களுடைய பெயரையும் ரிஜிஸ்டரில் குறித்துக் கொள்!" என்றார் குப்தா.

மிஸஸ் குப்தா கடிதங்களைக் கையில் வாங்கிக்கொண்டாள். பிறகு முகத்தைக் கோணிக் கொண்டு, "மிஸஸ் சர்மா எதற்கு வந்திருந்தாள் என்கிறீர்கள்? தனது நைலான் புடவையைக் காட்ட வந்திருந்தாள். ரொம்ப ரொம்பச் சாதாரணமான நைலான்தான். ஆனாலும் அதன் கரைகளையும் பின்னையும் அவள் அடிக்கடி சரி செய்ததைப் பார்த்து நான் வெளிநாட்டு நைலான் என்று நினைத்துக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பு. 'இந்த மாதிரி மலிவான நைலானின் பின் இப்படித்தான் இருக்கும். திருப்பித் திருப்பி மடித்து விடுவதில் பிரயோஜனமில்லை' என்று சொல்லிவிடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் தவறாக எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று பேசாமல் இருந்து விட்டேன். 'இவள் மாமியார் செத்ததற்குத் துக்கம் விசாரிக்க வந்தால் இவள் என்ன என்னவோ பேசுகிறாளே!' என்று அவள் எண்ணிக் கொள்ளலாம் அல்லவா? மிஸஸ் சர்மாவுக்குப் புடவைக்கும் பிளவுஸுக்கும் 'மாச்சிங் கலர்' என்ன என்று கூடத் தெரியாது. அவள் பெருமையைக் கண்டு நான் மயங்க வேண்டும் என்பதற்காக எதையோ சுற்றிக் கொண்டு வந்துவிட்டுப் போகிறாள். அடடே! இன்னொரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே! இந்த மிஸஸ் சுந்தரும் மிஸ்டர் சுந்தரும் என்னவோ தங்களைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெயருக்காவது நம் வீட்டு வாசலில் கூட வந்து நின்றுவிட்டுப் போகவில்லை!" என்றாள்.

பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே, "பொறாமைப் பிசாசுகள்! நம்மைக் கண்டால் ஆகவில்லை. ஆனால் நேற்று நம் வீட்டுக்கு சி. எம். (முதன் மந்திரி)கூட வந்து விட்டுப் போயிருக்கிறார். எத்தனையோ பேருக்கு இன்னும் இந்த நியூஸ் தெரியவில்லை. தெரிந்திருந்தால் வந்திருப்பார்கள். அதனால் இன்று நானே பத்திரிகைகளுக்கு 'நியூஸ்' எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். நாளை - நாளை நீயே பாரு. ஜனங்கள் வந்தவண்ணம் இருப்பார்கள். இதோ பாரு—அம்மாவின் பெரிய போட்டோ ஒன்றை எடுத்து 'டிராயிங் ரூம்'ல் மாட்டிவை. நாளைக் காலையில் எங்கள் ஆபீஸிலிருந்து சிலர் வரலாம். வா, போய் டிராயிங் ரூமைச் சரிசெய்து வைப்போம்!" என்றார் மிஸ்டர் குப்தா.

இருவரும் டிராயிங் ரூமை ஒழித்துச் சரி செய்யப் போனார்கள்.

இதே சமயம் மிஸஸ் சர்மா தன் வீட்டில் மிஸ்டர் சர்மாவிடம் என்ன சொல்லிக் கொண்டிருந்தாள், தெரியுமா?

"தன்னை அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் மிஸஸ் குப்தா. அவள் உட்கார்ந்திருந்த மிடுக்கைப் பார்த்தபோது அவள் வீட்டில் யாருமே இறந்ததாகத் தெரியவில்லை, ஏதோ கல்யாண வீடு போலிருந்தது. கிழவி சீக்கிரம் போனாளே, மகராசி கொடுத்துவைத்தவள்! இல்லாவிட்டால் இன்னும் எத்தனை கஷ்டங்கள் பட்டிருப்பாளோ? இவர்கள் அவளுக்கு ஒருவேளைச் சோறுகூடச் சரியாய்ப் போடுவதில்லையாம். வீட்டுப் பொருள்களை அவள் கையாலேகூடத் தொடக் கூடாது என்று கட்டுப்பாடு செய்து வைத்திருந்தார்களாம். ஆண்டவன் யாருடைய துயரத்தையும் அதிக நாள் பார்க்கிறதில்லை; அதனால்தான் கிழவியைச் சீக்கிரம் அழைத்துக் கொண்டு விட்டான்."

தம் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டே தம் தாயாரை நினைத்துக்கொண்டிருந்தார் மிஸ்டர் சர்மா. அவள் மிஸஸ் சர்மாவிடம் சண்டை போட்டுக்கொண்டு ஹரித்வாரம் போய்ப் பத்தே நாட்கள்தான் ஆகியிருந்தன. இது நமக்குத் தெரியாவிட்டாலும் மிஸ்டர் சர்மாவுக்குத் தெரியாதா, என்ன?

ஆதாரம்: ஒரு ஹிந்திக் கதை

—|—|—|—|—|—தும்மல்—|—|—|—|—|—

"அச்!" — தும்மல்: ஒரு தடவை தும்மினால் அபசகுனம். மற்றொரு தடவை சேர்ந்து இரண்டு தடவையாவது தும்மி விட்டால் பரவாயில்லை. இது நம்மவர்களிடையே உள்ள ஒரு நம்பிக்கை. தும்முவது மிகவும் நல்லது; தும்முவதன் மூலம் நோய்க் கிருமிகள் நம் உடலிலிருந்து வெளியேறுகின்றன வென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ரோமர்கள் புராதன காலத்தில் தும்மலைச் சுப சகுனமாகக் கருதி வந்தனர். பின்னர் தான் அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டிருக்கின்றனர். தும்மல் வந்தால் அதனால் ஏற்படும் தீமையைப் போக்கச் சிலுவைக் குறியைத் தரையில் அவர்கள் போடுவது வழக்கமாம். கிரேக்கர்கள் ஒரு விஷயம் பேசிக் கொண்டிருக்கும் போது தும்மல் ஏற்பட்டால் அந்த விஷயம் உண்மையானது என்று நம்புகிறார்கள்.


தென்னாப்பிரிக்காவில் வசிக்கும், ஜூலு ஜாதியினர் தும்மலைத் தெய்வீகமாகக் கருதுகின்றனர். பித்ருக்களின் ஆவி தமது உடலிலிருந்து அவ்வப்போது தும்மல் மூலம் வெளிப்படுகிறது என்று அவர்கள் நம்புகிறார்கள்.


ஆதாம் என்ற முதல் மனிதன் உயிர் பெற்றதும் செய்த முதல் காரியம் தும்மியதுதான் என்று அரேபியர்கள் கருதுகின்றனர்.

தும்மல் வரும் போது ஜெர்மானியர் 'ஆண்டவனே, என்னை ஆசீர்வதியுங்கள்' என்று சொல்வார்களாம். நம்மவர்களில் தங்களுடைய குழந்தைகள் தும்மினால் உடனே 'தீர்க்காயுசு' என்று ஆசீர்வதிப்பதில்லையா?

— கவிதா நடராஜன்

பஞ்சத்துக்கு ஆண்டி!


மளிகை
சங்கரா சிவ- சங்கரா சிவ-
எங்கே! எப்போ?
சங்கரா சிவ... சங்கரா சிவ...
அரிசி அழிவிட்டது. இனிமேல் லாரி மறுபடியும் வந்தால் தான்.
அட நீ இன்னைக்கு லாரி வரதான்னு சும்மா கேட்டதுக்கு!
அரிசிக்கு இல்லேய்யா! மேலே ஏத்திடப் போறன்னுதான்!






ஒரே ஒரு ஸாரிடான்

'ரோஷ்'

வலிகளையும் நோவுகளையும் போக்கும்!

வலியைப் போக்குகிறது. ஆசுவாசப்படுத்துகிறது. புத்துணர்ச்சி யூட்டுகிறது

உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடம்புவலி, ஜுரம் வரும்போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.



'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

ஸாரிடான் ஒரே வில்லை போது.
ஒரு வில்லை 13 நயா பைசா

தாய் செய்த தவம்

கோமதி சுவாமிநாதன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் வருடம் ஜூலை மாதத்தில் ஒரு நாள் முன்னிரவு வேளை. மேற்கு வர்ஜீனியாப் பகுதியிலுள்ள பெல்ஸ்வில்லி என்னும் சிற்றூர். அந்த ஊர் ஆரம்பப் பள்ளியின் தலைமை உபாத்தியாயர் வில்லியம் டிரெண்டும் அவர் மனைவி காளி டிரெண்டும் சிந்தனையில் ஆழ்ந்தவாறு எதிரிலிருக்க குன்றுகளுக்குமேல் மெல்ல வர ஆரம்பித்திருக்கும் சந்திரனைப் பார்த்துக் கொண்டு தங்கள் வீட்டு முகப்பில் அமர்ந்திருந்தார்கள். அந்தச் சிந்தனையின் விளைவாகத்தான் அவர்களுடைய எதிர்காலம் அங்கே உருவாக்கப்பட்டது! "சரி! நான் தயார்" என்ற ஸ்ரீமதி காளி டிரெண்டின் வார்த்தைகள் அந்தக் குடும்பத்தின் எதிர்கால சுபிட்சத்துக்கு அஸ்திவாரமாக அமைந்தன.


கணவன் மனைவி தவிர ஆறு குழந்தைகளை உள்ளடக்கிய குடும்பம் அது. நாற்பது வயது நிரம்பிய வில்லியத்துக்கு உள்ளூர்ப் பள்ளியில் மாத சம்பளம் நூற்றி எழுபத்தி ஏழு டாலர்கள்தான். வில்லியம் பி. ஏ. பட்டம் பெற்றவரில்லை. அந்தப் பட்டம் பெற்றால்தான் உபாத்தியாயர் உத்தியோகம் ஸ்திரமாக்கப்படும்! பாவம்! இருபது வருடங்களாக முயன்றும் வில்லியத்தினால் போதுமான லீவு எடுத்துக் கொண்டு பட்டப் படிப்புக்குக் கல்லூரிக்குப் போக முடியவில்லை. பட்டம் பெற்றால் சம்பளமும் உயரும்!

இப்போது நிலைமை மோசமாகி விட்டது. மூத்த பையனான ராபர்ட்டுக்குப் பதினாறு வயதாகிவிட்டது. அவனுடைய உயர் கல்விக்கும் வழி செய்தாக வேண்டும். இந்த நிலையில்தான் கணவனும் மனைவியும் முடிவு செய்தார்கள். "வில்லியம்! நீங்கள் பி. ஏ. பட்டம் பெற்றுத்தானாக வேண்டும்! அதற்காக எந்தக் கஷ்டத்தையும் நான் அநுபவிக்கத் தயார்" என்று அறிவித்து விட்டார் ஸ்ரீமதி டிரெண்ட். அத்துடன் நிற்கவில்லை. "நம் குழந்தைகள் எல்லோருமே தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க அவர்களும் பட்டப் படிப்புப் பெற நாம் தயார் செய்து கொள்ள வேண்டும்" என்றாள். கடைசிப் பெண் குழந்தை 'ஸூ'வுக்கு அப்போது வயது நான்கு!

திட்டத்தின் முதல் படியாக வில்லியம் உத்தியோகத்திலிருந்து ஒரு வருட காலத்துக்குச் சம்பளமில்லாத லீவு எடுத்துக் கொண்டு நூற்றிருபது மைல்களுக்கு அப்பாலுள்ள ஹண்டிங்டன் நகரத்துக்குப் புறப்பட்டார். அங்குள்ள மார்ஷல் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டத்துக்குப் படிக்கும் மாணவனாகப் பதிவு செய்துகொண்டார், நாற்பதுவயதுமாணவர்.

ஸ்ரீமதி டிரெண்டும் குழந்தைகளும் கூடவே இடம் பெயர்ந்தார்கள். 'பெல்ஸ்வில்லி'யிலிருந்த தங்கள் வீட்டை அடமானம் வைத்து வாங்கிய பணம், வருடம் முழுதும் செலவுக்கு வராது என்று தெரிந்து கொண்ட அந்தப் பெண்மணி, ஹண்டிங்டனில் வாடகைக்கு வந்த ஒரு பலசரக்குக் கடையின் பொறுப்பையும் மேற்கொண்டு நிர்வகித்தாள். தாங்கள் வசிக்க ஒரு சிறு வீட்டையும் குறைந்த விலைக்கு வாங்கினாள்.

குடும்பப் பொறுப்பு, குழந்தைகள் பராமரிப்பு, கடை நிர்வாகம் எல்லாம் சேர்ந்து ஸ்ரீமதி டிரெண்டின் பெரும்பான்மையான நேரத்தை விழுங்கிக் களைப்படையச் செய்தன. ஆனாலும் ஒரே ஆண்டில் அடுத்து வந்த ஆகஸ்டு மாதத்தில் வில்லியம் வெகு நாளைக் கனவான பி. ஏ. பட்டத்தைப் பெற்றபோது அவளுடைய களைப்பெல்லாம் கூடக் கனவாகி விட்டன. அந்தக் குடும்பம் மீண்டும் பெல்ஸ்வில்லிக்குத் திரும்பியது. இப்போது வில்லியத்தின் மாதச் சம்பளம் நூற்றி எழுபத்தி ஏழிலிருந்து மூந்நூறு டாலர்களாக உயர்ந்தது. குடும்பப் பொறுப்பும் கூடவே உயர்ந்தது.



கடைக்காரர்:— அம்மா! இந்தப் புடவையை வாங்குங்கள். இதை அணிந்தால் பத்து வயது இளமையாகக் காட்டும்.

பெண்மணி: மூன்று தடவை உங்கள் கடைக்குப் புடவை வாங்க வந்தேன். மூன்று தடவையும் இதே வார்த்தையைச் சொன்னீர்கள். மூன்று தடவை வந்ததற்கு முப்பது வயதைக் குறைத்தால் எனக்கு இரண்டு வயதுதான் ஆகும்! நான் என்ன சின்னக் குழந்தையா?

ஆகவே அடுத்த ஜனவரியிலேயே வில்லியம் தம் மனைவியை நோக்கி 'நான் எம். ஏ. பட்டத்தையும் பெற விரும்புகிறேன். அப்போது இந்தப் பதவிக்கு மேலும் சம்பளம் உண்டு. நம் குழந்தைகளுக்கும் நல்ல கல்வி அளிக்கலாம். நீ தயாரா?" என்றார்.

"ஆஹா! நான் தயார்!" என்றாள் தியாகத்தின் உருவான அந்த மனைவி. இந்தத் தடவை, வில்லியம் தனியாகவே முன்னால் ஹண்டிங்டன் போனார். மலிவு விலையில் ஒரு காலி இடத்தை வாங்கி ஒரு சிறு வீடு கட்ட ஆரம்பித்தார். அவருக்கு மர வேலையில் நல்ல பரிச்சயமுண்டு. மார்ஷல் சர்வகலாசாலையில் எம். ஏ. வகுப்புகளுக்குப் போகும் நேரத்தைத் தவிர மற்ற நேரத்தை வீடு கட்டுவதில் செலவழித்தார். சில நாட்களில் ஸ்ரீமதி டிரெண்டும் குழந்தைகளும் ஹண்டிங்டனுக்கு வந்து சேர்ந்தார்கள்;

வீட்டை எழுப்புவதில் அதிக கவனம் செலுத்தியதால் வில்லியத்தினால் சர்வகலாசாலை குறிப்பிட்டிருந்த பல புத்தகங்களைப் படிக்க முடியாமற் போயிற்று. நேரம் கிடைத்த போது களைப்பு குறுக்கிட்டது; ஸ்ரீமதி டிரெண்ட் வந்த பிறகு அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாள். கணவன் படிக்க வேண்டியிருந்த அத்தனை புத்தகங்களையும் படித்துக் குறிப்புகள் தயாரித்தாள்; கணவனுக்கு ஓய்வு கொடுத்து அவர் காதில் விழும் படி அவர் பாடங்களைத் தானே படித்தாள்;



டாக்டர்: நான் நேத்து கொடுத்த மருந்தை நீங்க சாப்பிடவில்லையோ? கை காலு பேசவில்லையே!

விளைவு! கணிசமான மார்க்குகளுடன் வில்லியம் பரீட்சையில் தேறினார்.

எம். ஏ. பட்டத்துக்குப் பரீட்சை முடிவு மாத்திரம் போதாது! ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையையும் வெற்றிகரமாக எழுதியாக வேண்டும்! ஆனால் குடும்பச் செலவுகளை ஈடு கட்டும் வகையில் வில்லியம் அந்தச் சமயத்தில் மற்றவர்களுக்காக இரண்டு மூன்று வீடு கட்டும் வேலையை மேற்கொண்டிருந்தார்.

ஆகவே ஸ்ரீமான் டிரெண்டுக்குப் பதிலாக ஸ்ரீமதி டிரெண்ட் பல வாசகசாலைகளில் பல மணி நேரங்கள் செலவழித்து ஆராய்ச்சிக்கான குறிப்புக்களைச் சேர்த்துக் கொண்டு வந்தாள். அந்தக் குறிப்புகளை எடுக்கும் போதெல்லாம், 'ஆஹா! நாமும் அந்தக் காலத்தில் இப்படிப் படித்துப் பட்டம் வாங்கியிருக்கலாமே! அரைகுறையாகவல்லவா நம் படிப்பு நின்று விட்டது!' என்று அவள் துயரப்பட்டதுண்டு. அதற்குப் பதிலாகத் தான் பதினெட்டு வயதிலேயே மணம் செய்து கொண்டு அடுத்த ஆண்டிலேயே தாயாகி விட்டாளே!

வில்லியம் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிச் சமர்ப்பித்தார். பாராட்டுதல்களுடன் கூடிய வெற்றியையும் பெற்றார். மீண்டும் அந்தக் குடும்பம் பெயின்ஸ்வில்லிக்குத் திரும்பியது. வில்லியத்தின் மாத வருமானமும் நானூறு டாலர்களாக உயர்ந்தது.

தொடர்ந்து குழந்தைகள் மேற்படிப்புக்குப் போயின. படிக்குமிடத்திலும் அந்தக் குடும்பத்தின் பெண்களும் பையன்களும் தங்களால் இயன்ற வேலைகளைச் செய்து சம்பாதித்து, பெற்றோர்களின் சிரமத்தைக் குறைத்தனர். ஸ்ரீமதி டிரெண்ட் அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை தம் குடும்பத்தின் சிக்கன வாழ்வுக்காக உழைத்துக் கொண்டே இருந்தாள். வீட்டில் தோட்டம் போட்டுக் காய்கறிகள் விற்றாள். பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான பண்டங்களை வாங்கி விற்றாள். பெயின்ஸ்வில்லிலேயே ஒரு மளிகைக் கடையையும் நடத்தினாள். ஒவ்வொரு குழந்தையாக மேற்படிப்பை முடித்தார்கள். அந்தத் தாயின் பொறுமை நிறைந்த தவத்துக்குப் பலன் கிடைக்கும் காலமும் வந்தது.

1963ம் வருடம் ஜூன் மாதம் இரண்டாம் தேதி. அந்தக் குடும்பத்தின் தலைவனும் தலைவியும் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் முன்னிரவு நேரத்தில் போட்ட திட்டத்தின் கடைசி வெற்றிப் படியில் அவர்கள் காலடி வைத்து விட்டார்கள். அன்று நான்கே வயதுச் சிறுமியாக இருந்த கடைசிப் பெண் 'ஷா' இன்று மார்ஷல் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் வாங்கப் போகிறாள். ஏற்கனவே, கால்வெர்ட், ஆர்வெல், ஜேம்ஸ், டேவிட் ஆகிய நான்கு பையன்களும், எலிசபெத் என்ற பெண்ணும் பி. ஏ. எம். ஏ. பட்டங்கள் வாங்கிச் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார்கள். கடைசிப் பெண் தான் கரோலின் ஷா டிரெண்ட்.

கரோலின் ஷா டிரெண்ட் பட்டம் வாங்கிக் கொண்டு மேடையிலிருந்து கீழே இறங்கிய போது ஸ்ரீமதி டிரெண்டுக்கு உடம்பு புல்லரித்தது. உணர்ச்சி பொங்கப் பக்கத்திலிருந்த கணவனின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்மித் என்பவர், தொடர்ந்து சர்வகலாசாலையின் சார்பில் சில பிரமுகர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கப் போவதாக அறிவித்தார். அரங்கத்திலுள்ளவர்கள் அந்த அதிர்ஷ்டசாலிகள் யாராக இருக்கக் கூடும் என்று நிமிர்ந்து உட்கார்ந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

பல பிரமுகர்களின் பெயர்களைக் கூப்பிட்டுப் பட்டங்களைக் கொடுத்த பிறகு தலைவர் ஸ்மித் எழுந்து வந்து ஸ்ரீமதி டிரெண்ட் முன்னால் நின்றார். அந்த அம்மையாருக்கு ஒன்றும் புரியவில்லை. "நீங்கள்தானே ஸ்ரீமதி வாயி ஹார்ட் கிப்ஸ் டிரெண்ட்?" என்றார். ஸ்ரீமதி டிரெண்ட் தலையை அசைத்தார்.

"உங்களையும் இந்தச் சர்வகலாசாலை கௌரவிக்கிறது. உங்களுக்கு அந்த நாட்களில் பட்டம் பெற வாய்ப்பு இல்லாத போதிலும்கூட, உங்கள் கணவரையும் உங்கள் ஆறு குழந்தைகளையும் பட்டம் பெற வைக்க வெற்றி கிட்டப் பொறுமையுடன் பாடுபட்ட நீங்கள் சமூகத்துக்குச் சிறந்த சேவை செய்தவராகக் கருதப்படுகிறீர்கள்! உங்களுக்கு இந்தச் சர்வகலாசாலை சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறேன்" என்று சொல்லிக் கையில் இருந்த பட்டமளிப்புப் பத்திரத்தைக் கொடுத்தார்.

அந்தப் பத்திரத்தில் ஸ்ரீமதி டிரெண்டின் பெயருக்குக் கீழே, 'ஆண்களை அவர்கள் தாயார்தான் உருவாக்குகிறார்கள்' என்ற எமர்சனின் பொன்மொழியும் 'கடவுள் தன்னால் எங்கும் இருக்க முடியாத நிலையில் தாய்மார்களைத் தன் பிரதிநிதிகளாக அனுப்புகிறார்' என்ற யூதப் பழமொழியும், 'என்னுடைய இன்றைய நிலைக்கும் நம்பிக்கை நிறைந்த என் வருங்காலத்துக்கும் நான் என் தாயாருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்' என்ற ஆப்ரஹாம் லிங்கனின் வார்த்தைகளும் எழுதப்பட்டிருந்தன! ஸ்ரீமதி டிரெண்ட் தன் குழந்தைகளைக் குளமான கண்களினூடு பார்த்தாள்.

ஆதாரம்: ரீடர்ஸ் டைஜஸ்ட்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



வாழ்க்கை ஒளிகளின்
வனப்பான அழகு
ஸான்போரைஸ்ட் பாப்ளின்ஸ்:
கோல்ட் ட்ரிங்க், ப்ளூபர்ட், எவர் ப்ரைட,
குட் லைன்.
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா
தோதீஸ்: ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்,
ப்ளாடினம், காம்ராஜ்
ஸூட்டிங்ஸ்:
காபர்டீன்
செவான கலர் புட்டாக்கள்
ப்ரிண்ட்ஸ்:
ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—விரேஜிலும்
புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்


Registered No. M. 4398
Registered as a Newspaper in Ceylon



தரத்திற்குத் தாயன்பே உரைகல்....

தரமறிந்த தாயன்பின் தங்கமான தேர்வு:

டால்டா



சின்னஞ்சிறு வயதினிலே சீராட்டி வளர்க்கின்றாள், வளரும் பருவத்தில் வகைவகையாய்த் தருகின்றாள் வாயினிக்கும் நல்லுணவு ... அதன் ஒவ்வொரு கவளமும் ... உருவாக்குமே உடலுறுதிகொண்ட நாளையக் காளையினை. அவன் உண்ணும் ஒவ்வொரு கவளமும்...உரைக்குதம்மா எல்லையில்லா அன்பின் சுவை...நல்லநல்ல பண்டங்களின் நயம் ... டால்டா வனஸ்பதியின் திறம்! வைட்டமின்கள் செறிந்து, மங்காத புதுமையோடும், மாறாத தூய்மையோடும் ஸீலிட்ட டப்பாக்களில் மட்டுமே கிடைக்கும் டால்டா. ஆம், விழிப்புள்ள தாயறிவாள்: திறந்த டப்பாக்களிலிருந்து சில்லறையாக விற்கப்படுகின்றனவே அவை டால்டா அல்ல, வேறென்னவோ. பேரீச்சமர அடையாளமிட்ட டால்டா வனஸ்பதியே உரிமையோடு உபயோகியுங்கள். தூய்மையே உருவாக உமதன்பின் உரைகல்லிலும் அதன் அருமை மிளிரட்டும்.

தூய்மையான தனிப்பெரும் சமையல் சாதனம் டால்டா வனஸ்பதி

இந்துஸ்தான் லீவர் தயாரி

DL 111-140 TM